

# புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்

முருகு சுந்தரம்

# புதுவைக் கல்லறையில்
# புதிய மலர்கள்

கவிஞர் முருகுசுந்தரம்

இது ஓர் அன்னம் வெளியீடு

அன்னம் 63

○ புதுவைக் கல்லறையில் புதியமலர்கள்
© முருகுசுந்தரம் முதற்பதிப்பு டிசம்பர் 1985 / அச்சும் அமைப்பும் அகரம் சிவகங்கை / வெளியீடு அன்னம் (பி) லிட்., சிவகங்கை 623560 / விலை ரு. 12-00

# கட்டியம்.

○

சில கவிஞர்கள்
வரலாற்றின் குழந்தைகள்;
சில கவிஞர்கள்
வரலாற்றின் தந்தைகள்.
பாவேந்தர்
இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்.

சில கவிஞர்கள்
அரசவையின்
அலங்ககாரப் பொருட்கள்;
அத்தாணி மண்டபத்தின்
கீறல் விழுந்த
இசைத் தட்டுக்கள்.

சில கவிஞர்கள்
அதிகாரத்தின்
காலோசை கேட்டதும்
தம்மையும் அறியாமல்
எழுந்து நிற்கும்
சூத்திரப் பாவைகள்.
பாவேந்தரின்
பெயரைக் கேட்டதும்
இன்று—
அரசாங்கங்கள்
எழுந்து நிற்கின்றன.

'அண்ணாத்துரை!
ஏ நிக்கறே? உட்கார்!'—என்று
அதட்டும் குரலில் கூறியபோதும்,

பேரறிஞர் அண்ணா
பெருந்தன்மையோடு,

'பரவாயில்லீங்க!' என்று சொல்லிப்
பாவேந்தர் முன் நின்றார்.
தமிழரின்—
தனிப்பெருந்தலைவர் அண்ணா
அன்று நின்றது—
கவிதையின் 'தர்பார்' மண்டபம்.

திருமலை ராயனின்
சிம்மாசனம் வளர்ந்து
காளமேகத்துக்கு
இடம் கொடுத்தது கதை.
இராஜாஜி ஹாலில்
கூட்டத்தின் நடுவில்
குந்தியிருந்த பாவேந்தரைக்
கூப்பிட்டுத் தம்மருகில்
காமராஜர் அமர்த்திக் கொண்டது
வரலாறு.

'நல்ல குடும்பம்
பல்கலைக் கழகம்'—
என்ற பாவேந்தரின் தொடர்
இன்று பழமொழியாக நிலைத்துவிட்டது.
பாவேந்தர்—
இன்று ஒரு
பல்கலைக் கழகமாக
நிலைத்துவிட்டார்.

குழந்தை—
ஒரு மார்பை
வாயால் சுவைத்து,
ஒரு மார்பை
விரலால் நெருடும்போது
தாய்க்கு ஏற்படும் இன்பலயம்,
பாவேந்தர் பற்றிய நினைவுகள்
என் உள்ளத்தை
நெருடும் போதெல்லாம்
எனக்கும் ஏற்படுவதுண்டு.

நீண்டநாள்
காத்திருந்து மணந்த
காதலிபோல்-
பேராசிரியரின் கட்டுரை
என்னைத் தேடிவந்தடைந்தது.

சர்வோதயத் தலைவர்
எஸ்.ஆர்.எஸ். அவர்களின் கட்டுரை
'பாவேந்தரின் எழுத்து வடிவம்'
என்று சொல்லலாம்.

பன்மொழிப் புலவரின்
எண்ண அலைகளைச்
சென்னை சென்று
நாடாவில் பதிவுசெய்து வந்தேன்.

இம்மூன்று
பேரறிஞர்களின் கட்டுரைகள்
இதற்குமுன் நமது
பார்வைக்குத் தட்டுப்படாத
பாரதிதாசனை
அகலத்திரையில்—

குளிர்ச்சியான வண்ணத்தில்
காட்டுகின்றன.

விருந்தும்,
தமிழ் தந்த செல்வமும்
வித்தியாசமான
கலைப்படங்கள்.

இதற்குமுன்
நான்—
பாவேந்தர் பற்றித்
தொகுத்த நூல்கள்
அரும்புகள்;
மொட்டுகள்;
மலர்கள்.

இந்தத் தொகுப்பு-
அடிக்கடி
முகர்ந்து பார்க்கத்தூண்டும்,
முன் கையில் சுற்றிய
முல்லை மலர்ச்சரம்.

பாலைப்பிரித்தறியும் அன்னம்
இன்று நம்நாட்டில் இல்லை.

தரமான—
நூலைப் பிரித்தறியும் அன்னத்துக்கு
என் வாழ்த்துக்கள்.

முருகு
ஈரோடு.

# எழுத்தும் எழுத்தாளரும்

○


பாவேந்தர் நினைவு போற்றுவோம் 09
-பேராசிரியர். க. அன்பழகன்

செட்டிநாட்டிலிருந்து
சென்னை வரை 28
-பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார்

பாலும் தெளி தேனும் 51
-திருக்குறளார் வீ. முனுசாமி

பாவேந்தருடன் 55
-திரு எஸ். ஆர். சுப்பிரமணியம்

பாவேந்தர்-ஒரு நினைவுச்சரம் 81
-கவிஞர் சிற்பி

கவி அரச அரிமா 91
டாக்டர். நா. ஆறுமுகம்.

பாட்டுக் குழந்தை பாரதிதாசன் 98
-திரு மா. அண்ணாத்துரை

விருந்து 112
-பாவலர்மணி சித்தன்

என் தந்தையின் நண்பர் 120
-செந்தமிழ்த் தொண்டர்
சிவ. கண்ணப்பா

தமிழ்தந்த செல்வம் 124
-திருமதி தமிழ்ச்செல்வம் முத்தையா

பாவேந்தர்-
நான் கண்டதும் கேட்டதும் 135
-திரு வசந்தகுமார்

சுதும்பு மீன் 146
-திரு ஆ. சுந்தரேசன்

பாவேந்தர் பாதையில்
சில சுவடுகள் 150
-கவிஞர் முருகுசுந்தரம்



இவர்-
பேரறிஞர் அண்ணாவைப் போல்
அழுக்குப்படாத அரசியல்வாதி.
நணபர்களுக்கு
இவர் 'ஷவர் பாத்'.
பக்குவம் தெரியாதவர்க்குச்
சுடு பாத்திரம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக
ஆட்டு மந்தையில்
முதன் முதலாக வெளிப்பட்ட
இந்தச் சிறுத்தைப்புலி
தன் புள்ளிகளை எப்போதும்
மாற்றிக் கொண்டதில்லை.

பாவேந்தரால்,
'இளைய ஞானசம்பந்தன்'
என்று பாராட்டப்பட்ட
பேராசிரியர் அன்பழகனார்
பாவேந்தர் பற்றிய
தமது வாலிப நினைவுகளை
இக் கட்டுரையில்
வடித்திருக்கிறார்.

# பாவேந்தர் நினைவு போற்றுவோம்

பேராசிரியர் க. அன்பழகன்

தமிழ் மொழி மறுமலர்ச்சி-கவிதை எழுச்சி ஆகியவற்றை உருவாக்கியவர் என்ற தகுதியால் தமிழ்நாட்டின் வரலாற்றில் தமக்கென ஓர் அழியாத இடத்தை, நீங்காத புகழ் ஒளியைப் பெற்ற பெருமைக்குரியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் அன்னை பெற்றெடுத்த இணையற்ற கவிஞராக மட்டுமன்றி, ஈடற்ற புரட்சிப் பாவலராக, அஞ்சா நெஞ்சு படைத்த பகுத்தறிவுச் சிந்தனையாளராக விளங்கிய பாவேந்தரின் நினைவு நாள் (ஏப்ரல் 21 இல்) சித்திரைத் திங்கள் 9ஆம் நாள் வருகிறது. அவரது பொன்னுடல் மறைந்த நாள் 21-4-64 ஆகும். அவரது உணர்விலே அரும்பி சொற்களிலே மலர்ந்து கருத்துக்களிலே மணங்கமழ்ந்த அப்படிப்பட்ட கவிதைகளைப் புதிதாகப் பெறும் வாய்ப்பு முடிவுற்ற நாள் அந்நாள். தமிழ் மொழியின் மீட்சிக்கும் மறுமலர்ச்சிக்கும், உரிமைக்கும் ஏற்றத்துக்கும், ஆட்சிக்கும் மாட்சிக்கும் எழுச்சிப் பண்பாடி, உணர்ச்சிக் கனல் எழுப்பி, இளைஞர்களின் குருதியிலே சூடேற்றி, இன உணர்வோடு மொழிகாக்கும் போரிலே குதித்திடச் செய்த அந்தக் கவிஞரின் குரல்—ஐந்து பதினேழு ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

கண் மூடிகளாக—கருத்துக்குருடர்களாக, தம்மையே இழிபிறவிகளாக எண்ணிக்கிடந்த ஏமாளிகளான தமிழ் மக்களை அறிவுக்கண் திறந்து காணச் செய்த கவிஞரின் உணர்வுகள், முழக்கங்கள், பாட்டு வரிகள், பகுத்தறிவு விளக்கங்கள், சாதிசமய மூட நம்பிக்கைகளைச் சாடிய கேள்விக் கணைகள்—யாவும் இன்றும் நமதுஉள்ளங்களில் ஒலித்துக் கொண்டுள்ளன. தமிழன் என்று ஒருவன் வாழ்ந்திடும் காலம் வரை—அவை ஒலித்துக் கொண்டிருக்கும் தகுதியுடையன.

புரட்சிக் கவிஞரின் கவிதை, தமிழ் உள்ளளவும் வாழும். அவர் உருவாக்கிய கவிதை மரபும் வாழும்! அவர்தம் வழிவழி வளரும் கவிஞர் தலைமுறையும் வளரும்.

ஆயினும்-
புரட்சிக் கவிஞர் ஊட்டிய உணர்வுகளை
வளர்த்த சிந்தனைகளை
வாழ்வித்தஇனப்பற்றை
மலர்வித்த மொழி ஆர்வத்தை
வடித்த கற்பனையை
தொடுத்த உவமைகளை
தீட்டிய இயற்கையை

வழங்கிய செஞ்சொற்களை
முழங்கிய பாநடையை

அவரது கவிதையைச் சுவைப்பதாலன்றி வேறு வகையால் பெறுதல் இல்லை. அப் பாவேந்தரின் நிலைபெற்ற தோற்றமே, அழியாத வடிவமே, அவருடைய உயிர் புகுந்த ஓவியமே அந்தக் கவிதைகள் தாம்! அவை நம்மோடு வாழ்பவையே! நமக்காகப் பிறந்தவையே! அவையெல்லாம் நம்மினத்தின் வாழ்விற்காகத்தான்! நம்மை வாழவைப்பதற்காகத் தான்! எனவே, பாவேந்தர் இன்றும் வலம் வருகிறார் அவரது கவிதை வடிவில்! நம்மோடு உரையாடுகிறார் பாட்டு நடையில்! நமக்கு உணர்வூட்டுகிறார் அவற்றைப் படிக்கும் நிலையில்! ஆம். அந்தக் கவிஞரின் கவிதைகளைப் போற்றிடும் கடமையைச் செய்வதிலேதான்-தமிழ் இனக் காப்புக்கு ஏற்ற அரண் கண்டவர்களாவோம் என்பதை நாம் மறத்தலாகாது.

அவரது நினைவு போற்றுங் கடமை தமிழர்க்கு எந்நாளும் உரியது எனினும், இந்நாளில் [ஏப்ரல் 21] நாடெங்கும் கொண்டாடுவது நமது கடமை. கவிஞரிடையே 'அரிமா' எனவும், புலவர்களிடையே 'தமிழ்க் களிறு' எனவும் பகுத்தறிவாளர்களிடையே 'ஏறு' எனவும், வலம் வந்த பாவேந்தரிடம் நான் பழகும் வாய்ப்புப் பெற்ற நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

☐

1940 ஆம் ஆண்டு. நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தேன். சிதம்பரத்தில் என் தந்தையார்—ஒரு தொழில் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் புவனகிரி செல்லும்வழியில்—புரட்சிக் கவிஞர் எங்கள் இல்லம் வந்தார். அவரது புவனகிரி [பெருமாத்தூர்] நண்பர்கள் பலர்—என் தந்தையாரிடம் மதிப்புடன் பழகி வந்தனர். அவர்கள் என் தந்தையாரைப்பற்றிக் கூறியிருந்ததனால் கவிஞர் வந்தார். என் தந்தையார் அவர் தோற்றத்தைப் பார்த்தவுடனேயே—அவர் யார் என்பதைப் புரிந்துகொண்டு 'வாங்க, வாங்க, கவிஞரே!' என்று ஆர்வத்துடன் வரவேற்றார். பின்னர் இருவரும்—தன்மான இயக்கம். இந்தி எதிர்ப்பு—முதலானவை பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். பின்னர் உணவருந்தினர். எங்கள்

இல்லம் என்பதால், சைவ உணவையும் (வேறு வழி யில்லை என்று) மகிழ்ச்சியாகவே ஏற்றுக் கொண்டார். அப்போதுதான் அவரை நெருங்கிக் கண்டேன். உணவு முடிந்ததும் 'சிகரெட்' வாங்கிவரச் சொன்னார்; வாங்கி வந்து கொடுத்தேன். 'நீ என்ன படிக்கிறே?' என்றார்.

## முதல் தொடர்பு

பல்கலைக் கழகத்தில் 'இண்டர்மீடியெட்' என்றேன். உடனே மகிழ்ச்சியோடு—'பலே-பலே-அப்படித்தான்—படி. அந்தப் பயல்களுக்கெல்லாம் நமது திறமையைக் காட்டணும். நல்லாப்படி' என்று அன்போடு கூறினார். அதுவே அவரிடம் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு.

அடுத்த ஆண்டு திராவிட இயக்கச் சார்புடைய ஒரு வணிகர் மறைந்ததையொட்டி நடத்தப்பட்ட நீத்தார் நினைவு நாள் நிகழ்ச்சியில் அவர் தலைமையேற்றிட இசைந்து சிதம்பரம் வந்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய பலருள் நானும் ஒருவன். நான் ஓர் இளம் மாண வனாக இருந்து தடையின்றித் தொடர்ந்து பேசியது அவ ருக்கு ஒரு வகையில் வியப்பினை ஏற்படுத்தி இருந்தது.

பின்னர் பாவேந்தர் பேசுகையில் 'ஏதோ மாணவன் அன்பழகன் பேசப்போகிறான் என்று சொன்னேன். இது, பேச்சா இது—பேச்சு—இப்படியா? மூச்சு விடக்கூட நேரம் வேண்டாமா?' என்று சொல்லிவிட்டு, 'மற்ற வர்களெல்லாம் பிறந்து வளர்ந்த பின்னர்தான் பேசு வார்கள். இவன் என்னடான்னா—பேசிக்கொண்டே தான் பிறந்திருப்பான் போலிருக்கு—என் நண்பர் கலியாணசுந்தரம் (மணவழகனார்) தந்த கொள்கைப் பயிற்சி. இப்படித்தான் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். ஆமாம்—அப்படித்தான்' என்றார்.

தொடர்ந்து கவிஞர் ''ஏழ்தா சாகாழியிலே ஞான சம்பந்தன் பாடினாருன்னா—நல்லாத்தான் பாடினாரு—தாளம் தவறுமா—அது கடவுள் அருள் என்கிறார்கள். இப்பொழுது—மாணவன் அன்பழகன் பேசியது கேட் டோமே இது என்னவாம் என்று அவங்களை நீங்க கேளுங்கோ'' என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அன்று கவிஞர் தங்கியிருந்த இடத்தில் அவருடன் இருந்து உரையாடி மகிழ்ந்தேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலரைக் குறித்தும் தன்மானக் கொள்கைக்குள்ள ஆதரவு நிலை குறித்தும் ஆர்வத்தோடு கேட்டார். நான் அறிந்தவற்றைக் கூறினேன்.

அந்த ஆண்டில்—புதுச்சேரியில் சிறப்புடன் நடைபெற்று வந்த ஒரு தமிழ்ச்சங்கத்தில்—கல்லூரி மாணவர்கட்கு எனக் கட்டுரைப் போட்டியும், பேச்சுப் போட்டியும் நடைபெற்றது. அதில் நானும்—அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் சிலரும் கலந்து கொண்டோம். பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள நான் சென்ற போது—புதுவை இயக்கத் தோழர் புவனகிரி இராமலிங்கம் அவர்களுடன் கவிஞர் இல்லம் சென்றேன். அன்பாக வரவேற்று என்னுடைய ஆர்வத்தை வாழ்த்தினார். அந்தப் போட்டிகளில்—பேச்சு—கட்டுரை இரண்டிலும் எனக்குமுதற்பரிசுகள் அறிவிக்கப் பட்டன. அதைக்கேட்டு கவிஞருக்குப் பெருமகிழ்ச்சி. நண்பர்களிடம் எல்லாம் அதையே சொல்லிச் சொல்லித் 'தன்மான இயக்கத்தவர் தரம் எப்படி?' என்றுகேட்டார்.

அடுத்தநாள் மாலை அங்கிருந்த பிரஞ்சு ஆட்சியின் ஆளுநர் பரிசுகள் வழங்க இசைந்திருந்தார். மாலை ஆறு மணிக்கு நிகழ்ச்சி. மாலை ஐந்து மணிக்குக் கவிஞருக்கு ஒருதிடீர் எண்ணம் ஏற்பட்டு—நான் பூட்ஸ் (காலணி) போடாமல் கவர்னரிடம் சென்று பரிசு பெறுவது நன்றாக இராது—எனவே உடனே சென்று 'கட்பூட்ஸ்' வாங்கி வரவேண்டும் என்றார். நான் தயங்கினேன். அவரே என்னையும் அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குச் சென்றார். கடைகளில் ஏறி இறங்கி, அளவு சரிபார்த்து வாங்கிக் கொண்டு திரும்புவதில் எப்படியோ காலம் தாழ்ந்து ஆறரை மணி அளவில்தான் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆளுநர் சிறிதுநேரம் காத்திருந்துவிட்டு முதல் பரிசுகள் இரண்டும் பெறுகிற மாணவனே வந்து சேரவில்லையே—என்று கேட்டு விட்டுப் போய்விட்டார். எனக்கு ஏமாற்

றம் ஏற்பட்டது என்றாலும்—அதைவிட அந்தச் சங்கத்தாருக்கு—நான் ஏமாற்றம் ஏற்படக் காரணமாகி விட்டேன் என்பதை எண்ணி வருந்தினேன். பின்னர் கவிஞரைக் காணச்சென்றேன். அவரும் அதைக்கேட்டு வருந்தினார். ஆனால் உடனே ஆறுதலும் கூறி ஊருக்கு அனுப்பி வைத்தார். புதுவைச் சங்கத்தாரும் பரிசுகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். இருபது ஆண்டுகளுக்குப் பின்—அப்பொழுது நான் எழுதிப்பரிசு பெற்ற கட்டுரையைக் கூட எனக்கு அனுப்பிவைத்தனர் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

## ஆசிரியர் வேலை

அடுத்து 1944 இல் அண்ணாமலையில் பட்டம் பெற்று. சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியும் பெற்றேன். அந்த ஆண்டுகளில் ஒன்றிரண்டு தமிழ்ச்சங்க விழாக்களில்—புரட்சிக் கவிஞருடன் நானும் பேசினேன். அடுத்த ஆண்டு நிகழ்ந்த என்னுடைய திருமணத்திற்குத் தந்தை பெரியார் தலைமை ஏற்க—புரட்சிக் கவிஞரும்—அறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் வாழ்த்துரை வழங்குவர் என்று அழைப்பிதழ் வெளியிட்டிருந்தேன். புரட்சிக்கவிஞர்—வர இயலாதநிலையில் ஓர் அருமையான வாழ்த்து அனுப்பியிருந்தார். புரட்சிக் கவிஞர் என்னிடத்தில் வைத்திருந்த பேரன்பும்—பெரும் நம்பிக்கையும், அந்தக் கவிதை வரிகளில் நடனமிட்ட மொழிப்பற்றும்—இனப்பற்றும்— இயக்க ஆர்வமும் தொண்டுணர்வும்—எப்படியெல்லாம் கவிஞரால் மதிக்கப்பட்டன என்பதற்கு அந்தக் கவிதை வரிகளே சான்று. அடுத்து அவர் சென்னைவரும் வாய்ப்புள்ள போது என்னையும் சந்திக்க விழைவார்.

ஓரிரு முறை நண்பர் செல்லப்பா அவர்களின் பாரி நிலையத்திலும்— திருவல்லிக்கேணியில் திருவாரூர் சுயமரியாதை வீரர் டி.என். இராமன் அவர்கள் தங்குமிடத்திலும் கவிஞர் தங்குவார். ஓரிருமுறை அந்நாட்களில் கலை உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த கவிஞர் கம்பதாசன் அவர்களோடும் எனது இல்லத்திற்கு வருவார். சிறிதுநேரம் உரையாடி விடைபெறுவார்கள்.

ஒருமுறை கம்பதாசன் அவர்கள், பாவேந்தரிடம்

கொண்டிருந்த பேரன்பு (பக்தி என்று கூடக் கூறலாம்) காரணமாக ஒரு பெரிய உணவு விடுதிக்குக் கவிஞரை அழைத்துச் சென்று உயர்ந்த மதுவகைகளை எல்லாம் அவரைப் பருகுமாறு செய்தார்.

கவிஞருடன் நானும்—மற்றொரு தேசிய வார ஏட்டின் ஆசிரியரும் உடன் சென்றிருந்தோம். கம்பதாசன், கவிஞர் போதும் என்றாலும் விடாது வற்புறுத்தி நிரம்பப் பருகுமாறு செய்துவிட்டார். அப்போது கம்பதாசன் நூறு ரூபாய் நோட்டுகளாகச் செலவிடும் வாய்ப்புப் பெற்றிருந்த காலம். 'என் வருமானமெல்லாம் கவிஞருக்கே! என் குருநாதருக்கே!' என்று அவ்வப்போது முழங்கியபடி — ஆர்வத்தோடு செலவிட்டார். விடுதியிலிருந்து ஒரு பெரிய காரில் வீடு வந்தோம்! வரும் வழியிலேயே...கவிஞருக்குக் குமட்டல் ஏற்பட்டு வாந்தி எடுத்தார். அப்பொழுது அவர் என்னை நோக்கிக் கூறினார்—"தம்பி கம்பதாசன் என்னிடத்தில் அன்புள்ளவன்—எனக்கும் இது பழக்கந்தான். ஆனால் அவன் உன்னை அழைத்தால் நீ அவனுடன் போகவேண்டாம். இது (குடி) எல்லாம் உனக்கு ஒத்துக்கொள்ளாது — என்ன நான் சொல்றதை மறந்து விடாதே-நான் வருகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றார் அவர். தமக்கு மது, பழக்கமான ஒன்று என்றாலும்—என்னிடத்தில் வைத்திருந்த அன்பினால் கூறிய அறிவுரை என்பதை நான் மறுக்கவியலாது. இந்நிகழ்ச்சி 1947 இல் நிகழ்ந்தது.

அதற்கு முதல் ஆண்டுதான் புரட்சிக்கவிஞரின் சீரிய தமிழ்த் தொண்டினைப் போற்றி—நிதியளிப்பு விழா ஒன்று அறிஞர் அண்ணாவின் பெரும் முயற்சியாலும், நாமக்கல் செல்லப்பா—திருவாரூர் டி. என். இராமன் முதலானோர் உழைப்பாலும் நிகழ்ந்தது. அதுகாறும் தமிழகத்தில்—அப்படிப்பட்டதொரு விழாவோ—நிதியளிப்போ எந்தக் கவிஞருக்கும் நடைபெற்றதில்லை.

## அண்ணாவால் சிறப்புற்றது

அந்தப் பணியில் நானும் பங்குபெற்றிருந்தேன். கவிஞரின் பெருமை சுடர் விட்டுப் புகழ்ஒளி பரப்பிய காலம் எனினும், அறிஞர் அண்ணாவின் ஆர்வத்தாலும் ஆதரவினாலும் அந்த விழா பெருஞ்சிறப்புற்றது.

ஆயினும் கவிஞர் அவர்கள் எதையும் பொறுமையாக எண்ணிப்பார்த்திடும் இயல்பினர் அன்மையின் அந்த விழா நடத்தியவர்களைக் குறித்தே குறைகாண முற்பட்டார். அதனை ஓரிரு சமயங்களில் என்னிடத்தும் உரைக்கலானார். அதையுங்கூடப் பக்குவமாகக் கூறுது கடுமையான சொற்களையும் பயன்படுத்தி விடுவார். அவரது இயல்பை அறிந்திருந்த நான் அதற்காக அவரைக் கண்டித்து ஏதும் பேசவில்லை, எனினும்—தங்களைப் பாராட்டிப் போற்றி நிதியளித்து வாழ்த்தியவர்களைக் குறித்துத் தாங்களே இப்படிப் பேசுவது சரியல்ல; தேவையுமல்ல என்று விளக்கிக் கூறினேன். அதனை, ஏனோ அவர் ஏற்கவில்லை. ஆனாலும் என்னை அறிந்திருந்த அவர், கோபித்துக் கொள்ளவில்லை என்று தான் நான் ஆறுதல் பெற்றேன்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றும் கட்டம் உருவாகியது. அந்நிலையில் புரட்சிக் கவிஞர் அவர்களும் குத்தூசி குருசாமியார் அவர்களும் தந்தை பெரியார் அவர்களிடம் மாறுபட்ட நிலையில்—அவரிடம் உரிமைக்குப் போராடவேண்டும் என்று வலியுறுத்தினர். அதனை அண்ணா அவர்களும் என்போன்ற தோழர்களும் ஏற்கவில்லை.

புரட்சிக் கவிஞரின் இயல்பு, ஒன்றைப் போற்றினும் எல்லையில்லாத அளவு போற்றிப் புகழுவார். ஒன்றில் மாறுபடினும் போற்றுதலின் மறு எல்லைக்கே செல்வார். இரண்டிலும் அண்ணா அவர்கள் அளவறிந்தே ஈடுபடுவார். எனவே கவிஞர் உள்ளத்தில், அண்ணாவிடமும் எங்களிடமும் மாறுபாடு ஏற்பட்டது. ‘பெரியாரின் போக்குத் தவறு என்ற பின்னர், எதிர்த்துப் போராடத் துணிவில்லாத இவர்கள் கோழைகள்’ என்றார் கவிஞர்.

ஆனால் அதற்காக, அண்ணா அவர்கள் தமது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. அண்ணா அவர்கள் கவிஞரைப் பற்றிக் கூறியது ‘‘அவர் தலைசிறந்த கவிஞர். ஆனால் ஓர் அரசியல் கட்சியை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பது அவருக்குப் பழக்கமில்லாதது. மேலும் புதுச்சேரி அரசியல் போலவே எங்கும் நடத்த

லாம் என்று அவர் கருதுகிறார். நாம் என்ன செய்ய முடியும்?'' என்பது தான்.

அதன் பின்னர்—புரட்சிக் கவிஞர் நேரடியாக எந்தக் கட்சியிலும் தொடர்பு கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். ஆயினும் எல்லாக்கட்சிகளைப்பற்றியும்—தலைவர்களைப் பற்றியும் அவ்வப்போது அவருக்குத் தோன்றும் உள்ளக் குமுறலை—தமது கவிதைகளில்இடம் பெறச் செய்து வந்தார். அதனால் அவரிடம் நான் கொண்டிருந்த தொடர்பும், நாளடைவில் குறையும் சூழ்நிலை ஏற்பட்டது எனலாம். என்றாலும் அவரிடத்தில் கொண்டிருந்த மதிப்பும்—அவர்தம் கவிதையில் கொண்டிருந்த பற்றும் மாறவில்லை; மாறியும் விடாது.

கவிதையுலகில் அவர் ஒரு முடிசூடா மன்னர். புரட்சி உணர்வில் அவர் தமிழ் நாட்டுஷெல்லி; இயற்கையை பாடுவதில் அவர் வால்ட் விட்மன்; வரலாற்றைக் காவியமாக்குவதில் அவர் இளங்கோ; வருணனையில் சொல்வளத்தில் அவர் கம்பர்; காலத்தின் தேவையில் அவர் பாரதி; நம்முடைய உள்ளத்தில் அவர் என்றும் பாவேந்தர்—புரட்சிக் கவிஞர்—இனமுரசு—தன்மான வீரர்—பகுத்தறிவுச் சுடர். ஆனாலும்—அவரது வாழ்க்கையில்—உலகியலில் அவரும் ஒரு மனிதனே! எனவே அவரால் தமிழுலகு பெற்ற பயனை எண்ணுவோர்—அவரைப் போற்றுமலிரார்! போற்றத் தவறார்.

□

தமிழகத்தில் இசையரங்குகளில் எல்லாம் மக்களுக்கு விளங்காத தெலுங்கு கீர்த்தனங்களே, பக்கவாத்தியங்களோடு முழங்கப்பட்டு வந்த காலம். செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் அதுகண்டு வேதனையுற்று தமிழிசை இயக்கம் தோற்றுவித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டு தோறும் தமிழிசை விழா கொண்டாடப்பட்டது. அவ்விழா நாட்களில் இசை

யரசு— தண்டபாணி தேசிகர், ஏழிசைமன்னர் தியாகராஜபாகவதர், நாதசுர சக்கரவர்த்தி இராச ரத்தினம் முதலான பலர் பங்கு பெறுவர். அந்த விழாக் களில் ஓரிருமுறை பாவேந்தர் அவர்களும் வந்து கலந்து கொள்வார்.

தமிழிசை நாடெங்கும் பரவவேண்டும், வேற்று மொழிப் பாட்டு 'சங்கீதமாவதை' மாற்ற வேண்டும் என்னும் தணியாத வேட்கை அவருக்கிருந்தது. எனினும் நமது இசைவாணர்கள் பாடும் தமிழ்ப்பாட்டுகள் பெரிதும் புராணம் பரப்பும் பக்திப் பாடல்களாகவே அமைந்து, வைதிகம் வளர்க்கப்படுவதை அவர் விரும்பவில்லை.

ஒரு இசை விழாவில் தேசிகர் இசையரங்கு நிகழ்த்தினார். பல தமிழ்ப் பாடல்கள் பாடினாலும் இடையில் இரண்டு தெலுங்குக் கீர்த்தனங்கள் பாடினார்.

பாவேந்தர் தங்கி இருந்த இடத்தில் அவரைக் காண வந்த என் கல்லூரித் தோழர்கள், அந்தப் பாட்டரங்கு பற்றி அவரிடம் விவரித்தனர். தெலுங்குப் பாட்டு பாடி னார் என்று கேட்டதும், ஒரு எள்ளல் நகை பிறந்தது அவரிடம். ''நம்மவரின் பஞ்ச புத்தி போகாது' என்று வெகுண்டார். ஏன்? என்றேன் நான். எவ்வளவு பெரிய இசைவாணர் ஆனாலும்—தெலுங்குக்கீர்த்தனம் பாடா விட்டால் தம்மை ஒரு சங்கீத வித்துவான் என்று மதித்து ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்று பயப் படுகின்றனர்!

தமிழ்ப்பாட்டுகளுக்கு என்ன பஞ்சமா? ஒரு முழுப்பாட் டரங்கும் தமிழ்ப் பாட்டுகளே பாடினால் என்ன குடி முழுகிப் போய்விடுமா? அக்ரகாரமும்—பத்திரிகை களும் பாராட்டாவிட்டால்—பாட்டுத் திறமை போய் விடுமா? நம்மவர்கள் 'மான உணர்வு' கொள்ள வேண்டாமா? தமிழால் சிறந்த இசையரங்கு நிகழ்த்த முடியாது என்கின்றனர்—நம் எதிரிகள். அந்தப் பழிச் சொல் உண்மையாவதற்கு அன்றோ, இவர்கள் இடந் தருகின்றனர்!'' என்று கூறித் தமது வெகுளியை வெளிப்படுத்தினார்.

மேலும் தமிழிசை பற்றி அவர் தெரிவிக்கையில்,

''எப்போ வருவாரோ!'' என்று கடவுளைக் கூப்பிடருன்' எவ்வளவு நாளா கூப்பிடருன். தெய்வங்களைப் பற்றிய கதைகளையே பொருளாகக் கொண்டு—பாடிக் கொண்டிருந்தால் என்ன பலன்? மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையை, உழைப்பை, தொழிலை, குடும்ப வாழ்க்கையை, காதலைப் பாடும் பாடல்களைப் பாடினலன்றோ மக்களுக்கு பயன்கிட்டும்—உணர்ந்து, சுவைத்து, களித்து ஏற்றுக்கொள்வர்'' —என்ருர் பாவேந்தர்.

அதன் தொடர் சிந்தனையில் விளைந்த தமிழ் அமுதமே, அவர் இயற்றிய 'இசையமுதம்' எனலாம்.

ஒரு நாள் தேசிகர் பாடிய பாட்டொன்றைத் தோழர் ஒருவர் பாவேந்தரிடம் கூறினர். அப்பாட்டு, கடவுள் உண்மையை வலியுறுத்தும் வகையில்,

''இல்லை என்பான் யாரடா?
தில்லை வந்து பாரடா?''

என்று தொடங்குவது. அது குறித்து ஒரு தமிழ் மன்றத்தில் பேசுகையில், பாவேந்தர், ''அப்படிப் பாடினராம் தேசிகர், இப்படிப் பாடுகிறேன் நான்,'' என்று கூறி,

''இல்லை என்பேன் நானடா''
தில்லை கண்டு தானடா''

என்று மொழிந்தார். நான் தில்லை வந்துவந்து போவது தேசிகருக்குத் தெரியாது—'சிதம்பர ரகசியமே திரையை நீக்கிக் காட்டப்படும் ஒன்றுமற்ற பெரு வெளியே' என்பதும் தெரியாமல்—தில்லைவந்து பார்க்கச் சொல்கிருர் என்ருர் பாவேந்தர்.

பாவேந்தர் மற்றவர் கருத்து—அவர் தம் நம்பிக்கை என்பதற்காக எதையும் பொறுத்தல் அரிதாகும்.எதைக் குறித்தாயினும் தாம் தவறு என்று கண்டவற்றை உடனே கடுஞ்சினத்துடன் கண்டனம் செய்வார். அவரது ஆழ்ந்த புலமையும், தமிழ் மாட்சியை நாட்டும் பற்றும், குறிக்கோள் (கொள்கை) ஆர்வமும், ஒரு வகைக்கவிச் செருக்கும் அதற்கு ஏதுவாகும்.

உள்ளத்திற் பட்டதை உணர்ச்சி கொண்ட வடிவம்

கொள்ளச் செய்வதே கவிதைத் தொழிலாதலின், பாவேந்தரின் உணர்ச்சி வாய்ப்பு நேரிட்ட போதெல் லாம் பொங்கிப் பீறிட்டது போலும்!

மும்மொழி வல்லுநரும்—தனித்தமிழ் இயக்கத் தந்தை யுமான மறைமலை அடிகளார் அவர்களை ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரை நிகழ்த்த அழைத்திருந்தோம்.

மறைமலை அடிகளாரை வரவேற்றுச் சிதம்பரம் தொடர் வண்டி நிலையத்தில் கூடியிருந்த மாணவர்கள் தமிழ் வாழ்க! அடிகள் வாழ்க! இந்தி ஒழிக! தமிழ் வெல்க! என்று முழக்கம் எழுப்பியது கேட்டு அடிகள் மகிழ்ந் தார். பின்னர் 'இராமாயணம்' ஒழிக' என்பதைக் கேட் டும் தலையசைத்தார். அடுத்து 'புராணங்கள் ஒழிக, பெரிய புராணம் ஒழிக' என்னும் முழக்கம் தொடர்ந்த போது அடிகளாருக்கு அது பிடிக்கவில்லை. அடிகளார் அதை நிறுத்தச் சொன்னார். என்றாலும் அவ்வப் போது சிலர் அந்த முழக்கத்தையும் எழுப்பி வந்தனர்.

அடிகளார் தங்குமிடம் சேர்ந்தார். அங்கு என் தந்தை யாரை (மறைந்த மு. கலியாண சுந்தரனார்) யும் என்னை யும் அழைத்து ''மற்றவை எல்லாம் நியாயம்! ஆனால் பெரிய புராணம் ஒழிக, என்பது நியாயமல்ல; அது புராணம் அல்ல; திருத்தொண்டர் வரலாறு; அது வட நாட்டினின்றும் வந்ததல்ல— தென்னாட்டவருடையது.! சிவனைப் போற்றும் சமயம் தென்னாட்டவருடையது! அது ஒழிக என்பது முறையல்ல'' என்று விளக்கினார். அப்பொழுது என் தந்தையார்—பெரிய புராணத்தில் உள்ள அறிவுக்குப் பொருந்தாத கூற்றுக்களையும், தமிழரின் மான வாழ்வுக்கு மாறுபட்டதாக அமையும் ஒழுகலாற்றையும் கூறி, இதனை எப்படி நமது மரபாக ஏற்பது? என்று கேட்டார். 'அப்படி ஐயம் எழுவது, முழுமுதற் கடவுள் சிவபெருமானிடம் பற்றின்மை யிலேயே' என்றார் அடிகள். 'அப்படியானால், சிவப் பற்று கொண்டால் அறிவுக்கு இடமில்லையா?' என்றார் தந்தை. 'எல்லாம் அவன் செயல் என்று சிவத்தை ஏற்றவர்க்கு—பெரியபுராணத்தில் ஏதுவும் குற்றமாகத் தெரியாது' என்று அடிகள் விடையளித்தார். அவரிடம் கொண்டிருந்த மதிப்பால் மேலும் அதுபற்றி அவரிடம்

வாதாடவில்லை. அடிகளாரோ,

> சிவம்—செம்பொருள் எனவும்,
> சிவமதமே—தமிழர் சமயம் எனவும்
> அம்மத அடியார் தம் பெருமையைப்
> பேசுவதே பெரிய புராணம் எனவும்,
> அதை 'ஒழிக' என்று கூறுவதைத்
> தாம் ஒப்பவியலாது என்றும்—விளக்கியுரைத்தார்.

தந்தை பெரியார் அவர்களின் புராண இதிகாச எதிர்ப்புக் கொள்கைகளில் பற்றுக் கொண்டிருந்த என் தோழர்களால் அதனை ஏற்கமுடியவில்லை. அடுத்த சில நாட்களில் அங்கு வருகை தந்த பாவேந்தர் அவர்களிடம் நானும் சில தோழர்களுமாக இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சொன்னோம்.

முதல் கட்டத்தில்—'பலே, பலே' என்றார், 'அப்படித் தான்', 'சரி, சரி' என்றெல்லாம் கூறிவந்தார். 'நம்ம பிள்ளைகள் நல்லாத்தான் முழங்கி இருக்கிறார்கள்' என்றார். அதன் பின் இவ்வாறு கூறினார்: ''அடிகள் பெரிய அறிஞர். ஏராளமாகப் படித்தவர். ஆராய்ச்சியாளர். என்றாலும் அவர் சைவர். அவருடைய சமயத்தைக் குறை சொன்னால், அவரால் பொறுக்க முடியவில்லை. என்றாலும் சைவத்தின் தொன்மையைக் கொண்டு அது தென்னாட்டவர் (தமிழர்) சமயம் என்று நம்புகிறார். தமிழர்களிடம் தோன்றித் தனித்து நின்ற சமயம்—ஆரியத்தால் வந்ததன்று என்பதற்காக—என்பதால் நாமும் மதிக்கலாம். ஆனால் ஏற்க முடியாது. எவ்வளவு பெரிய அறிஞர் ஆயினும்—மத நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் பின்னர் தெளிவு ஏற்படாது.

''என்றாலும்—அவரை மதித்து—'பெரிய புராணம் ஒழிக' என்பதை அன்று நிறுத்திவிட்டீர்களா? அதுவும் சரியே! அவர் நம்மவர். நம்மவர்க்காக—தமிழர்கட்காக வாதாடுபவர்—அதற்காக அவருக்கு மரியாதை கொடுக்கலாம்! அவரது தமிழ்த் தொண்டு பெரிது!

> நுண்ணிய நூல் பல கற்பினும்—மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும,

என்னும் குறள் விளக்கும் அறிவே—மறைமலை அடிகளாரின் பற்று போன்ற நிலையைத்தான்'' என்றார் பாவேந்தர்.

வழக்கமாகக் கிளர்ச்சியை விரும்பும் பாவேந்தர் அன்று வழக்கத்திற்கு மாறாக, அடிகளாரிடம் அவர் கொண்டிருந்த மதிப்பால்—கடுமை காட்டாது பொறுமை காட்டினார் எனல் வேண்டும்.

□

ஒரு முறை அவர் சிதம்பரம் வந்தபோது, பல்கலைக் கழகப் புலவர் வகுப்பு மாணவர்களான, புலவர் நா.மு. மாணிக்கம், புலவர் அரங்கசாமி, தம்பி புலவர் திருமாறன்—முதலானோருடன் அவரைக் கண்டு உரையாடினோம்.

தமிழ்மொழிக்கு அமைந்த இலக்கணங்கள் பற்றியும், தொல்காப்பியத்திற்கும் நன்னூலுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் குறித்தும் விளக்கம் பெற்றோம். தற்காலத்தில் இலக்கணப்படி எழுதாமல்—இலக்கணத்திற்கு மாறாக எழுதுவது வழக்கமாகி வருகின்றதே என்று என் தோழர்கள் வினவினர். ''நன்னூல் தீட்டிய பவணந்திக்குப் பின், இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும், காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஒரு புதிய இலக்கணம் இயற்றப்படாமல் இருப்பது தான் குறை. மொழி உயிருடையது; வளரும். சில மாறுதல்களும் விளையும். அதற்கேற்ப அவற்றின் இயல்பைக் கண்டு ஒரு இலக்கணம் வகுத்திருக்க வேண்டும்'' என்றும் ''அதனால் இலக்கணப் பிழை எல்லாம்—தமிழின் வளர்ச்சி என்று கருதலாகாது. மொழி வளர்ச்சி ஒரு முறையாக நிகழ்வது. அதுவும் ஒரு இலக்கணத்தின் அடிப்படையில் காணப்பட வேண்டும்'' என்றும் விளக்கம் அளித்தார்.

தனித்தமிழ் ஆர்வம் கொண்ட என் நண்பர்கள், ''தாங்கள் இயற்றும் கவிதைகளில் 'தமிழ் உணர்வு' பொங்குகிறது. ஆனால் அதில் சில சொற்கள் தமிழாக இல்லாமல்—பிற மொழிச் சொற்களாக உள்ளனவே. தாங்கள் தனித் தமிழிலேயே கவிதைகள் இயற்றலாகாதா?'' என்றுகேட்டனர். உடனே கவிஞர், '' தனித் தமிழ் நல்லது தான். கூடாது என்பதல்ல. ஆனால் ஒரு

கவிஞனின் உள்ளத்து உணர்வை கவிதையாகவடிக்கும் நிலையில் இயல்பாக வரும் சொல்லை விட்டுவிட்டு, தனித்தமிழ்ச் சொல்லாகத் தேடிப் பயன்படுத்துவது என்பது கவிதையின் உணர்ச்சி வேகத்தைத் தடைப் படுத்தி அதன் அழகைக் குறைத்துவிடும். 'கவிதை' செய்யப்படுவதல்ல— அது உள்ளத்தின் வெள்ளப் பெருக்கு. அது எப்படி வருகிறதோ—அப்படியே அமை வதுதான் அதற்குச் சிறப்பு. தனித்தமிழ், உரை நடைக்கு, பேச்சுக்கு வேண்டியதே. ஆனால் கவிதைக்கு ஒத்துவராது'' என்றார் கவிஞர். கவிதை மன்னரிடம் மறுப்புக் கூற எங்களில் யாருக்கும் துணிவில்லை.

சிறிது நேரம் வேறு ஏதோ பேசிய பின்னர், 'தாங்கள், தனித்தமிழ் நடை கவிதைக்குக் கூடாது என்கிறீர்களா? இயலாது என்கிறீர்களா?'' என்று நான் ஒரு ஐயம் எழுப்பினேன். 'கூடாது என்பது அல்ல. அப்படிக் கூற முடியாது. இயலாது என்றுதான் சொல்லலாம். கவிஞர்கள் உளப்பாங்கும் வேறுபடும். உணர்ச்சிப் பிழம்பாகக் கவிஞன் ஒன்றை உள்ளத்தில் கருக்கொண்டு உயிர்க்கும் போது, எந்த நடையில் அந்தக் கருத்து ஏறி வருகிறதோ, அதுவே பொருத்தம் உடையது. அதை மாற்றுவது ரிப்பயர் (Repair) செய்வது போலாகிவிடும்' என்றார் கவிஞர்.

''அது உண்மை. ஆனால் உணர்ச்சி ஊட்டும் வண்ணச் சொற்கள் தமிழில் இல்லை—என்று கருதலாமா?'' என்று கேட்டேன். ''அப்படிச் சொல்லவில்லை. அந்தச்சொல் எதுவானாலும் பாட்டோசையோடு பொருந்தி நிற்பதாக வேண்டும் அல்லவா? உரைநடை போல் கவிதையை நடைமாற்றம் செய்யமுடியாது'' என்றார். ''உரை நடையோ, கவிதையோ இரண்டும் எண்ணத்திற்குத் தரும் வடிவம் தானே?'' என்றேன். ''பளிச்சென்று மின்னல்போல் தோன்றும் கவிதை, வெளியே புறப்பட உடை தேட முடியுமா?'' என்றார்.

''ஆனால்.. சில சொற்கள் பளிச்சென்று வேற்றுமொழி யாக இருக்கின்றனவே—தகத்தகாயம், சபாஷ், நிஜம், பிரசங்கம், உத்ஸாகம், க்ஷேமம், நிரபராதி, போசனம் போன்ற சொற்கள் தவிர்க்க முடியா

தனவா?'' என்றேன். பாவேந்தர் சிந்தனையில் ஆழ்ந்தார். ''ஏன் முடியாது? முடியும்! அந்த நோக்கத்துடன் கவிதை இயற்றிஞல்''—என்ருர். அவரவர் பழக்கத்தில்—அவரவர்க்கு அச்சொல் பொருள் வேகம் தருவது இயல்பு. எனினும்—தவிர்க்கக் கூடிய சொற்களைத் தவிர்க்கலாம் என்றே எண்ணுகிறேன்'' என்ருர் கவிஞர்

இந்த உரையாடல் நிகழ்ந்தது 1943-ஆம் ஆண்டில். ஒருவகையில் பாவேந்தரின் பெருந்தன்மையான உள்ளம், தமிழ்ப்பற்றில் தவழ்ந்த அறிவு. இளைஞர்களாகிய எம்மிடம் உரையாடியதையே ஒரு மையக் கருத்தாகக்கொண்டு, தனித்தமிழ் குறித்துப் பிறகு ஆழ்ந்து எண்ணத் தலைப்பட்டது. அதன் பயன்—தமிழர்களின் பெரும்பேறு எனத்தகுமாறு— 'தமிழியக்கம்' என்னும், தமிழை மாய்த்திடும் அறியாமையை எதிர்த்து உணர்வேற்றும் ஏடு— தனித்தமிழ் காத்திடும் கொள்கை பரப்பும் கவிதை நூல் பிறந்தது.

ஆம்! 'அரசியல் சீர் வாய்ந்தார்' என்னும் தலைப்பில் முழங்குவது இது.

தெலுங்கு தமிழ் நாட்டினிலேன்?
செத்தவட மொழிக்கிங்கே
என்ன ஆக்கம்?

... ... ... ... ...

நலங்கண்டீர் தமிழ்மொழியால்
நற்றமிழை ஈடழித்தல்
நன்ருே?

... ... ... ... ...

அரசியலார் அறிக்கையிலும்
சுவடியிலும் தமிழ்ப்பெருமை
அழித்திடக்கை
வரிசையெலாம் காட்டுவதோ?
வடமொழியும் பிழைத்தமிழும்
பெருகிவிட்டால்
வருநாளில் தமிழழியும்
வடமொழிமே லோங்குமெனும்

கருத்தோ? நாட்டில்
திருடர்களை வளரவிடும்
ஏற்பாடோ? செல்லுபடி
ஆகா திங்கே!

திருடர்கள் ஜாக்கிரதை இதைத்
திருடருண்டு விழிப்போடி
ருங்கள் என்றால்
வருந்தீமை என்னை? நியா
யஸ்தலத்தை அறமன்றம்
எனில் வாய்க் காதோ?
அருவருக்கும் நெஞ்சுடையார்
அருவருக்கும் செயலுடையார்
அன்றோ இந்தக்
கருவறுக்கும் வினைசெய்வார்
கலப்பாலில் துளிநஞ்சும்
கலத்தல் வேண்டாம்!

பாவேந்தரின் உள்ளத்தில், ''பிறமொழிக் கலப்பினால் தமிழுக்குக் கேடு ஏற்படும்; எனவே தமிழ்ப் பயிரிடை வடமொழிக்களை வளர இடந்தரலாகாது என்னும் எண்ணம் உரம் பெற்றதன் விளைவே, மேலே காணும் கவிதையும் அவை ஒத்தபலவும், தமிழில் வடசொல் கலத்தல் வேண்டாம் என்பார், கலப்பாலில் துளிநஞ்சும் கலத்தல் வேண்டாம்'' என்றார்!

'கணக்காயர்' என்னும் தலைப்பில்,
''தமிழ்மொழியை வடசொல்லுக்கு
மிகத்தாழ்ந்த தென்கின்றான்!
வடசொற்கு மகிழ்கின்றான்!

... ... ... ... ...

வடசொல்இது தமிழ்ச்சொல் இது
எனப்பிரித்துக் காட்டிடவும்
மாட்டான்!

என்றுரைத்ததனாலும் பாவேந்தர் உள்ளம் விளங்கும்.

'கூடத்தர்' என்னும் தலைப்பில்,
தாய்ப்பாலில் நஞ்செனவே
தமிழில் வடமொழி சேர்த்தார்!

தவிர்தல் வேண்டும்!

தமிழ்ப் புலவர் தனித்தமிழில்
நாடகங்கள் படக்கதைகள்
எழுத வேண்டும்!

பாவேந்தர் பாட்டெல்லாம் இன்று தனித்தமிழ் காக்கும் படையாக விளங்குதலைப் பல்லாற்றானும் காணும் போது—பாவேந்தர் தமக்காக அன்றித் தமிழுக்காகவே வாழ்ந்தவர் என்னும் உண்மையை உணர்ந்து உவகை பெறுகிறோம் நாம்!

"தமிழுக்கு அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்னும் உணர்வைத் தந்த பாவேந்தர் மறைந்தாரில்லை; அந்தத் தமிழ் உணர்வாகவே நம்முடன் வாழ்கின்றார்!

வாழ்க பாவேந்தர் உணர்வு!
வெல்க தனித்தமிழ் இயக்கம்!!



ஆயிரம் நூல்களை எழுதியவர்
பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த
அலெக்சாண்டர் டூமாஸ்.
அப்பாதுரையார்--
அந்த வரிசையில்
அடுத்த எழுத்தாளர்.
சுருங்கச் சொன்னால்
இவர் ஓர் எழுத்துப்பட்டறை!

இவர்--
சைவச் சுயமரியாதைக்காரர்;
சுயமரியாதைச் சைவர்!
அரசாங்கச் சலுகைகள்
அறிவிக்கப்படாத காலத்திலேயே
ஆர்வத்தால்
கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.

எளிதில் யாரையும்
மதிக்காத பாவேந்தரின்
இதய மேடையில்
இடம் பெற்ற அறிஞர்.

அன்பு வேளையில்
அணுக்கத் தொண்டராகவும்
ஆய்வு வேளையில்
ஆலோசகராகவும் இருந்தவர்.

நெருங்கிய
நீண்ட நாள்
நண்பர்!
அன்பர்!

பாவேந்தரின்
முப்பரிமாணமும் அறிந்த
மூதறிஞர்!

இவர் எழுதியுள்ள
இந்நுண்ணோக்காடிக் கட்டுரை
பாவேந்தரை நமக்குப்
பல கோணங்களில்
படம் பிடித்துக் காட்டுகிறது.

---

# செட்டி நாட்டிலிருந்து சென்னை வரை.....

---

## பன்மொழிப் புலவர்
## கா. அப்பாத்துரையார்

**செட்டி நாடு வருகை**

1943ஆம் ஆண்டில் நான் செட்டிநாடு கோனாப்பட்டில் ஆசிரியனாகப் பணி செய்து கொண்டிருந்தேன். அவ்வூர் இளைஞரிடையே தமிழ்ப்பற்றையும், தன்மான இயக்கப் பற்றையும் ஊட்டுவதை எனது கடமையாகக் கொண்

டிருந்தேன். திருவாளர்கள் முருகு சுப்பிரமணியம், பெரியண்ணன் ஆகியோரும் வேறு சில இளைஞர்களும், என்னிடத்திலும், எனது கொள்கையிடத்தும் ஈடுபாடும் ஆர்வமும் காட்டி எனக்கு மிகவும் ஆதரவாக விளங்கினர். கோனாப்பட்டில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

இயக்கத்தின் சார்பாகப் பேசுவதற்கு அறிஞர் அண்ணாவை அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அண்ணாவுக்கு முடங்கல் விடுத்தோம்; பணமும் அனுப்பினோம். அவரிடமிருந்து மறுமடல் ஏதுமில்லை. நானே நேரில் சென்று அண்ணாவை அழைத்துவர முடிவு செய்து சென்னைசென்றேன். அண்ணா சென்னையில் இல்லை. நேரே காஞ்சி சென்றேன். அண்ணா காஞ்சியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்

நாடக மேடைக்கே நான் சென்றேன். அண்ணா இராவணன் வேடத்தில் இருந்தார். மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்து, வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்து விட்டுக் கோனாப்பட்டு திரும்பினேன். அண்ணா இம்முறையும் வரவில்லை. மறுமுறை நான் சென்னையில் அண்ணாவைச் சந்தித்த போது, கூட்டத்துக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இதற்குள் செட்டிநாட்டு இளைஞர் சிலர் பாரதிதாசனைக் கூட்டத்துக்கு அழைத்திருந்தனர். அவர் கோனாப்பட்டில் பெரியண்ணன் வீட்டில் தங்கியிருந்தார். நான் நேரில் சென்று கூட்டத்துக்கு அழைத்ததும் ஒத்துக் கொண்டார்.

பாரதிதாசன் கோனாப்பட்டு வருவதற்குச் சில நாட்களுக்கு முன், திருவாளர் சோமசுந்தரம் செட்டியார் என்பவர் அங்கு இலக்கியச் சொற்பொழிவாற்றினார். அவர் பழுத்த சைவர். பெரிய புராணத்திலும், திருநாவுக்கரசர் தேவாரத்திலும் அதிக ஈடுபாடுடையவர். இவரைப்பற்றிப் பாரதிதாசனிடத்தில் கூறினோம். பாரதிதாசன் கோனாப்பட்டுக் கூட்டத்தில் பேசும் போது சைவத்தைக் கடுமையாகக் கிண்டல் செய்தார். சிறுத்

தொண்டர் வரலாற்றையும், இயற்பகை நாயனார் வரலாற்றையும் கடுமையாகச் சாடினார். "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்ற தொடரை எடுத்துச் சொல்லி நகையாடினார். "எந்நாட்டவர்க்கும் உரிய சிவன் பெரிய சிவன்? தென்னாட்டுச் சிவன் குள்ளச் சிவனோ?" என்று கேலி செய்தார்.

திருவாளர் சோமசுந்தரம் செட்டியார் இரசிகமணி டி.கே. சிதம்பரநாதமுதலியார் குழுவைச் சேர்ந்தவர். பாரதிதாசன் கோனாப்பட்டுக் கூட்டத்தில் சைவத்தைக் கேலி செய்து பேசியதைக் கேள்விப்பட்டுக் கொதிப்படைந்தார். அடுத்த கூட்டத்தில் 'எங்கள் சிவனைக் குள்ளச் சிவன்!' என்று ஒருவன் இழித்துப் பேசினானே!' என்று பாரதிதாசனைச் சாடினார். பாவேந்தர் அப்போது செட்டிநாட்டில் தான் இருந்தார். கானாடு காத்தானில் திருவாளர் வை.சு. சண்முகஞ் செட்டியார் இல்லத்தில் தங்கியிருந்தார். திரு.வை.சு.ச. அவர்களும், அவர் துணைவியார் மஞ்சுளாபாயும் பாரதிதாசனிடத்தில் அளவு கடந்த பற்றும், மதிப்பும் கொண்டவர்கள்.

பாரதிதாசன் செட்டி நாட்டில் தங்கியிருந்தபோது அவர் விரும்பியபோதெல்லாம், திடீரென்று எங்கள் இல்லத்துக்கு வருவார். தன்மான இயக்கத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர்பட்டாளம் எப்போதும் அவரைச் சூழ்ந்திருக்கும். என் மனைவி அலமேலு எல்லாருக்கும் விரைவில் விருந்து சமைத்துப் பரிமாறுவாள்.

பாரதிதாசன் கோனாப்பட்டில் தங்கியிருந்த போது, 'வீரசுதந்தரம் வேண்டிநின்றார்' என்ற பாரதியின் பாடலை பாரதி எந்த ராகத்தில் எப்படிப் பாடினாரோ அதே ராகத்தில் உணர்ச்சி பொங்கப் பாடிக் காட்டினார். இப்போது பாடும் ராகம் தவறு என்று குறிப்பிட்டார்.

பாரதியைப் பற்றி மேலும் குறிப்பிடும் போது "பாரதி பெரிய புரட்சிக்காரர். சீர்திருத்தச்செம்மல். பாரதியைப் பற்றி வைதீகச் சார்பான சில செய்திகளைப் பலர் கூறுவார்கள். அந்தக்காலத்தில் பாரதிக்குமேல் சீர்திருத்த

வாதியாக வேறுயாரும் இருந்திருக்க முடியாது. அந்தக் காலத்துச் சமுதாயச் சூழ்நிலை அதற்கு மேல் இடங் கொடுக்கவில்லை. நானும் அப்போது அப்படித்தான் இருந்தேன். பாரதியைப்போல் நானும் அன்று பேராயக் கட்சி(Congress)க் காரன்; கதரைத் தோளில் சுமந்து விற்றவன். நானும் ஆத்திகன்; சுப்பிரமணியர் துதியமுது பாடியவன். அப்போது அவரிடத்திலும் தனித் தமிழ் இல்லை; என்னிடத்திலும் தனித் தமிழ் இல்லை. பாரதி படிப்படியாகச் சீர்திருத்தவாதியாக மாறிவந்ததை நான் என் கண்ணாரக் கண்டேன். பாரதி உயிரோடிருந்திருந்தால் 'சுய மரியாதைக்காரராக' மாறியிருப்பார். என்னைப் போல் தான் பாடியிருப்பார்'' என்று கூறினார் பாரதிதாசன்.

தொடர்ந்து பாரதியைப் பற்றிக் கூறும் போது, ''பாரதிக்கு அழுத்தமான சீர்திருத்த உணர்வுண்டு. சில நேரங்களில் பார்ப்பனீயத்தை வெளிப்படையாகவே எதிர்த்துக் கருத்துக்களைத் தெரிவிக்கத் தயங்க மாட்டார். பாரதியார் பாண்டிச்சேரியில் இருந்த போது நீதிக் கட்சிச்(Justice Party) செய்தித்தாள்கள் அங்கும் வரும். பாரதி அத்தாள்களை விரும்பிப் படிப்பார். ஒரு நாள் பாரதியும், வ.வெ.சு. அய்யரும், நானும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். ஒரு நண்பர் நீதிக் கட்சித்தாள் ஒன்றை அங்குக் கொண்டு வந்தார். வ.வெ.சு. அய்யரைப் பார்த்ததும், அதை மூடி மறைத்தார். அதைக் கண்ட வ.வெ.சு. அய்யர் 'என்ன ஓய்! ஜஸ்டிஸ் கட்சி பத்திரிக்கை கெண்டுவந்திருக்கிறீ ராக்கும்! அதையேன் மறைக்கிறீர்? நீங்களெல்லாம் எங்களை எதிர்த்து, இப்ப பிராமணரா வளர்றீங்க ளாக்கும்! நீங்களெல்லாம் பிராமணனு வளர்ந்துட்டா பிராமணான் அப்படியே இருப்பான்னு உங்க நினைப்போ? ஏய்யா! புல் பனையாகு பனை மலை யாகாதா?' என்று கூறிச் சிரித்தார். அதற்குப் பாரதியார், 'ஓய் அய்யரே! அறிவுத் துறையில் வேண்டுமானால் நீங்கள் அவர்களை வெல்லலாம். வீரத் துறையில் நீர் அவர்களை என்ன செய்து விட முடியும்? பிராமணரல்லாதார் உதைக்க ஆரம்பித்தால் நீங்கள் எங்கே ஓடி ஒளிவீர்?' என்று கேட்டார். அய்யர் பேசாமல் இருந்து விட்டார். பார்ப்பனரை எதிர்க்கும் உணர்வு அந்த நாளில் பாரதியாருக்கு உண்டு. பிரா

மணர்களை 'உண்மையான பிராமணர்; போலிப் பிரா மணர்' என்று பிரித்துப் பேசுவார். உண்மையான வைதீகமும், உண்மையான சீர்திருத்தமும் ஒன்று என்பது அவர் கொள்கை. 'காந்தியின் கொள்கையும் அது தான்' என்று பாரதி கூறுவார்.''—பாரதியைப் பற்றிப் பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் இவை.

பாரதிதாசன் கோனுப்பட்டில் தங்கியிருந்த போது அடிக்கடி கூட்டங்களுக்குச் செல்வார். நானும் உடன் செல்வதுண்டு. ஒரு முறை புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சிற்றன்ன வாசலுக்குப் பாரதிதாசனும், நானும், சில நண்பர்களும் சென்றோம். அங்கே சிவனடியார் சங்கக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. நான் அதில் கலந்து கொண்டேன். எனக்குச் சைவத்திலும் ஈடுபாடு உண்டு. 'என்னய்யா! நீர் சுயமரியாதைச் சங்கத்திலும் உறுப் பினர்! சிவனடியார் சங்கத்திலும் உறுப்பினர்! நல்ல வேடிக்கை!' என்று கூறிச் சிரித்தார் பாரதிதாசன். சிற்றன்ன வாசலில் உள்ள பல்லவர் கால ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்து விட்டு அங்கிருந்த கோவிலுக்குள் நுழைந்தோம். அங்கு ஒரு வேர்ப்பலாமரம் இருந்தது. அதை எங்களுக்குக் காட்டி, ''வேர்ப்பலா என்பது மரத்துள் தனி இனம். இதோ பாருங்கள் இதன் வேரி லேயே பழங்கள் இருக்கின்றன'' என்று சொல்லி ஆளுக் கொரு பழத்தைப் பறித்துத்தந்தார். வேர்ப் பலாப்பழம் வேப்பம் பழத்தை விட சற்றுப் பெரிதாக இருந்தது; மிகவும் இனிப்பாக இருந்தது.

''கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே—இங்கு வேரில் பழுத்த பலா! என்ற எனது பாட்டு வரிகளைக் கேலி செய்து மேடையிலே என்னை எதிர்த்துக் கேள்விகள் கேட்டனர். வேர்ப்பலா என்று ஒரு மரம் இல்லையென்று வாதிட்டனர்'' என்று கூறினார் பாரதிதாசன்.

## முத்தமிழ் நிலையம்

பாரதிதாசன் கானாடு காத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் இல்லத்தில் தங்கியிருந்த போது, அவரு டைய நூல்களை வெளியிடவும், அவர் நாடகங்களை நடத்தவும் 'முத்தமிழ் நிலையம்' என்ற பெயரால் ஓர்

அமைப்பை ஏற்படுத்துவதென்று முடிவுசெய்யப்பட்டது அந்த அமைப்பில் முக்கியப் பங்கு வகித்தவர்கள் செட்டி நாட்டு இளைஞர்களான முருகுசுப்பிரமணியமும், பெரியண்ணனும் ஆவர். முதலில் பாரதிதாசனின் இயல், இசை, நாடகப் படைப்புக்களை 'இன்ப இரவு' என்ற பெயரில் அரங்கேற்றம் செய்ய முடிவு செய்யப் பட்டது. சென்னையில் முத்தமிழ் நிலையத்தின் தலைமை யகத்தை நிறுவ எல்லாரும் முடிவு செய்தனர். முத் தமிழ் நிலையப் பணிகளை முன்னின்று நடத்துவதற்கும் அதை மேற்பார்ப்பதற்கும், என்னை வரும்படி பாரதிதாசன் அழைத்தார். நானும் சென்னை செல்ல வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்ததால், அவர் அழைப்பை ஏற்றுக் கொண்டேன். சென்னை செல் வதற்கு என்னைத் தூண்டிய அடிப்படைக் காரணங்கள் பல உண்டு.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 'சுயமரியாதைக் காரனுக' இருப்பது எவ்வளவு தொல்லையானது என்பதைப் பட்டு அறிந்தவர்களே உணர்வர். அவன் கடவுளுக்கும், சமயத்துக்கும் எதிரியாகக் கருதப் பட்டான். நான் கோனுப்பட்டில் வாழ்ந்த போது பார்ப் பனருக்கு மட்டுமல்லாமல், செட்டிமார்களுக்கும் நான் எதிரியாகக் கருதப்பட்டேன். தன்மான உணர்வும், தமிழ் உணர்வும் கொண்ட செட்டிநாட்டிளைஞர் கள் என் பக்கம் இருந்ததால், என்னையாரும் ஒன்றும் செய்யமுடியவில்லை.

நான் சைவப்பிள்ளைமார் குலத்தில் பிறந்தவன். என் மனைவி அலமேலுவல்லம்பர்(வல்லத்துவேளாளர்என்றும் கூறுவர்)வகுப்பைச்சேர்ந்தவள். கலப்பு மணம் செய்து கொண்ட காரணத்தால், சாதி எதிர்ப்பும் எனக் கிருந்தது.

1943 ஆம் ஆண்டில்—பாரதிதாசனின் செட்டிநாட்டு வருகைக்கு முன்—கோனுப்பட்டில் 10 நாட்கள் தமிழ் விழா ஒன்று நடத்தினேம். அந்த விழாவிற்குத் தலைமை தாங்கவோ, சொற்பொழிவாற்றவோ யாரும் முன் வரவில்லை. முதல் மூன்று நாட்களும் நானே தலைவன்; நானே பேச்சாளன். கூட்டமும் குறைவாகத் தான் இருந்தது. தமிழ்ச்சுவையுணர்ந்த செட்டி மக்கள்

நான்காவது நாள் திரளாக மண்டபத்தில் கூடினர். நானே உள்ளே நுழைய முடியாதவாறு கூட்டம்! அதன் பிறகு இராஜா.சர். முத்தையாசெட்டியாரையும், நீதிக் கட்சித் தொடர்பும் தமிழ்ப்பற்றும உடைய புதுக்கோட்டை முஸ்லீம் அமைச்சர் ஒருவரையும் விழாவிற்கு அழைத்து வந்தோம்.விழா எதிர் பார்த்த தற்கு மேல் சிறப்பாக முடிவுற்றது.

தமிழ்நாட்டின் தெற்கில் ஒரு சிற்றூரில் வாழ்வதை விடச் சென்னை போன்ற பெரிய நகரத்தில் இருந்தால் இலக்கியப் பணிகளை விரிவாகச் செய்ய இயலும் என்ற எண்ணம் அடிக்கடி என் உள்ளத்தில் தோன்று வதுண்டு. என் விருப்பத்தைச் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக உரிமையாளருக்குத் தெரி வித்தேன். அவருக்கு என்னைப் பிடித்திருந்தாலும், என் கலப்பு மணத்தைப் பிடிக்கவில்லை. 'சாதியில்லாத உம் மனைவியை நீக்கி விட்டு வந்தால், உங்களுக்கு வேலை தருவதோடு சென்னையில் தங்க எல்லா வசதிகளும் செய்து தருகிறோம்' என்று கடிதம் எழுதியிருந்தார்.

மேலே குறிப்பிட்ட எல்லாச் செய்திகளையும் பாரதிதாசனிடம் எடுத்துச் சொன்னேன். சென்னை சென்றால் இலக்கியத்துறையில் நான் வளர்வதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதை உணர்ந்த பாரதிதாசன என்னை எப்படியும் சென்னை கொண்டு செல்ல முடிவு செய்தார். சென்னை சென்றதும் பாரதிதாசன் முத்தமிழ் நிலையத்தைத் துவக்கினார். நிலையத்துக்கென்று தனி வீடும் வாடகைக்கு எடுக்கப்பட்டது. முத்தமிழ் நிலையம் துவக்கப்பட்ட ஆறும் நாள் சென்னை புறப்பட்டு வரும் படி பாரதிதாசனிடமிருந்து கடிதம் வந்தது. கடிதம் வந்ததும் நான் சென்னை புறப்பட்டேன். அன்று புகைவண்டியில் எனக்கு இடம் கிடைக்கவில்லை. அதே நாளில் சென்னையின் மீது ஜப்பானியரின் குண்டு வீச்சு நடைபெற்றது. இரண்டாம் உலகப்போர் நடை பெற்றுக் கொண்டிருந்த நேரம் அது. அடுத்த நாள் செனனை புறப்பட்டேன். முத்தமிழ் நிலையக் கட்டிடத்தில் தங்குவதற்கு எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் சென்னை சென்றிருந்த நேரத்தில் திராவிடர்க்கழகத் துக்கு ஒரு பொதுச்செயலாளரை நியமனம் செய்யும்

முயற்சியில் பெரியார் ஈடுபட்டிருந்தார். அண்ணாவைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்யப் பெரியாருக்கு விருப்பமில்லை. எனவே திங்களுக்கு ரூ600/= சம்பளத்தில் என்னைப் பொதுச் செயலாளராகப் பெரியார் நியமனம் செய்தார். என்னைப் பொதுச் செயலாளராகப் போட்டதற்குக் கட்சியில் எதிர்ப்புக் கிளம்பியது. எனவே நான் அப்பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். அதன் பிறகு நாவலர் நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராக அமர்த்தப்பட்டார். நெடுஞ்செழியனுக்கும் கேட்ட சம்பளம் வராத காரணத்தால், அவரும் அப்பதவியிலிருந்து விலகி விட்டார். அதன் பிறகு அண்ணா சம்பளமில்லாமல் பொதுச்செயலாளர்பதவியை ஏற்ருர். டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி நடத்திக் கொண்டிருந்த 'லிபரேட்டர்' ஏட்டில் எனக்குத் துணையாசிரியர் வேலை கிடைத்தது.

முத்தமிழ் நிலையத்தில் 'இன்ப இரவு' நாடக ஒத்திகை நாள்தோறும் மும்மரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சென்னையில் குடியிருக்க ஒரு வீடு பார்த்துக் கொண்டு, அலமேலுவை அழைத்துவரக் கோணுப்பட்டு சென்றேன்.

## சென்னை வாழ்க்கை

சென்னை அருணாசல ஆசாரித் தெருவில் 12 ஆம் எண் வீட்டில் நான் குடியேறினேன். பாரதிதாசனும் தொடர்ந்து பத்துத் திங்கள் எங்கள் வீட்டிலேயே இருந்தார். அப்போது பெரியாரைத் தவிர, இயக்கத்தைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும், தொண்டர்களும் பாரதிதாசனைக் காண என் இல்லம் வருவர். திருவாளர் ம.பொ.சி போன்ற மாற்றுக் கட்சித் தலைவர்களும், எழுத்தாளர்களும்,பாவலர்களும் பாரதிதாசனைக் காண வருவதுண்டு. பாரதிதாசன் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்தபோது தான், அவருக்குப் பொற்கிழி வழங்கும் விழா நடை பெற்றது. ரொக்கமாக ரூ25,000/= அவருக்கு வழங்கப்பட்டது. தமிழகத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், கலைஞர்களும் அவ் விழாவில் பங்கு கொண்டனர். தமிழகத்தில் வேறு எந்தக் கவிஞருக்கும் இவ்வளவு சிறப்பாக நிதியளிப்பு விழா நடை பெற்றதில்லை.

நிதியளிப்பு விழாவில் பெற்ற தொகையைப் பாரதிதாசன், என் மனைவி அலமேலுவிடம் தான் கொடுத்து வைத்திருந்தார். ரூ25,000/= என்பது அக்காலத்தில் மிகப்பெரிய தொகை. பாவேந்தருக்கு நிதி கிடைத்ததும், அவருடையதுணைவியார் திருமதி பழனியம்மாளும், பெண்களும் என் இல்லம் வந்தனர். பெண்களுக்குக் கொஞ்சம் நகைகளும், நல்ல புடவைகளும் எடுக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். சீர்திருத்தக்காரரான பாவேந்தர், பெண்கள் நகையணிவதையும், ஆடம்பரமாக உடையுடுத்துவதையும் வெறுப்பவர். என்றாலும், அவரிடத்தில் பக்குவமாக எடுத்துச் சொல்லி ரூ7000/=க்கு நகைகளும் புடவைகளும் வாங்க இசைவு பெற்றோம். நானும் அலமேலுவும் உடன் சென்று பாவேந்தரின் துணைவியாருக்கும், மக்களுக்கும் தேவையான நகைகளும் புடவைகளும் எடுத்துத் தந்தோம். என்னையும், அலமேலுவையும் தவிர வேறு யார் இதில் தலையிட்டிருந்தாலும் பாவேந்தர் அனுமதித்திருக்கமாட்டார். இதைப் பற்றி நான் அண்ணாவிடம் சொன்னபோது "நல்ல வேலை செய்தீர்கள்! பாரதிதாசனுக்கு எல்லா அறிவும் உண்டு; பிழைக்கும் அறிவு மட்டும் கிடையாது. நிச்சயமாக அந்த ஏழாயிரமும் மிஞ்சும்" என்றார்.

'இன்ப இரவு' நாடக அரங்கேற்றம் தொடர்பாகப் பாரதிதாசன் சேலத்துக்கும் வேறு சில ஊர்களுக்கும் சென்றார். நாங்கள் குடியிருந்த வீட்டின் தொடர்பாக வழக்கு நடந்து கொண்டிருந்ததாலும், வேறு பலசிக்கல்களாலும் அவ் வீட்டை மாற்ற வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை மூன்றாம் சந்தின் கோடி வீட்டில் குடியேறினோம். அது இசுலாமியர் வாழும் பகுதி. அந்த வீடு பெரியது; வளமனை (Bungalow). அதன் உரிமையாளர் ஒரு முஸ்லீம். அவருக்கு இசுலாமிய மனைவியர் சிலரும், இரண்டு இந்து மனைவியரும் இருந்தனர். அவருடைய இந்து மனைவியருக்குப் பாதுகாப்பாகவும், துணையாகவும் நாங்கள் இருப்போம் என்ற கருத்தில் வாடகையில்லாமலே குடியிருக்க எங்களை அனுமதித்தார். ஆனால் வாடகையில்லாமல் குடியிருக்க நாங்கள் மறுத்து விட்டோம். பாரதிதாசன்திங்கள் தோறும் வாடகை ரூ40/= கொடுக்கத் தாமே முன் வந்தார். அவரும் எங்களுடன்

அதே வீட்டில் தங்கினர்.

சென்னையில் மாசிலாமணி முதலியார் என்ற சிறந்த சித்த மருத்துவர் ஒருவர் வாழ்ந்தார்; அவர் பாரதிதாசனுக்கு மிகவும் வேண்டியவர். அவர் வீட்டிற்குப் பின்புறம் இருந்த ஒரு சிறிய அறையில் ஒரு திங்கள் தங்கியிருந்தோம். அப்போது சென்னையில் நடிகவேள் இராதா நாடகம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது தான் பாரதிதாசனுக்கும் எங்களுக்கும் மனவேறுபாடு ஏற்பட்டுப் பிரியவேண்டியசூழ்நிலை ஏற்பட்டது.

சென்னைத் திருவல்லிக்கேணி வீட்டில் இருந்த போது 'வருங்காலத்தமிழகம்' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதித் தரும்படி திருவாளர் சம்பந்தம் என்ற இயக்கத் தோழர் என்னிடம் கேட்டார். நானும் எழுதி முடித்திருந்தேன். அந்த நூலின் கையெழுத்துப் படியைப் பெறுவதற்காகத் திரு சம்பந்தம் என் வீட்டுக் கதவைத் தட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்தார். நான் அப்போது வீட்டில் இல்லை. உள்ளே நுழைந்த சம்பந்தத்தைக் கண்ட பாரதிதாசன் ''உள்ளே வராதே!'' என்று சொல்லி விரட்டி விட்டார். அடுத்த நாள் சம்பந்தம் என்னைத் தனியாகச் சந்தித்து, நடந்தவற்றைக் கூறி வருந்தினர்.

நான் வீட்டில் இல்லாத நேரங்களில் பாரதிதாசன் தம் நண்பர்களுடன் கூடிக் குடித்து விட்டுக் கும்மாளமிடுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகப் பாவேந்தருக்கும் எங்களுக்கும் இருந்த குடும்ப நட்புத் தேய்புரிப் பழங் கயிருகி இறுதியில் இற்று விழுந்தது. அவரோடு ஒன்ருகத் தங்கும் நிலை மாறியது.

நான் பாரதிதாசனைப் பார்த்துச்
சொன்னேன்:

''நீங்கள் பெருங்கவிஞர். உங்களுடன் நெருங்கிப் பழகி உங்கள் சிறப்பையெல்லாம் நான் அறிந்து சொண்டேன். நம் பிரிவு துன்பமானதுதான். என்ருலும், நாம் இனி எங்கு வேண்டுமானலும் வெளியில் சந்தித்துக் கொள்ளலாம்; வீட்டில் வேண்டாம்'' என்றேன். அதன் பிறகு பாரதிதாசன் என் இல்லத்துக்கு வருவதில்லை.

புலவர் குழுவிலும், வேறு சில கூட்டங்களிலும் இருவரும் சந்திப்பதுண்டு. எங்கள் நட்பைப் பிரிப்பதற்காக எதிரிகள் வேலை செய்வதாகப் பாரதிதாசன் அப்போது அடிக்கடி என்னிடம் சொல்லுவார்; வருந்துவார். எங்கள் வெளிநட்புத் தொடர்ந்தது; ஆனால் வீட்டு நட்பு அறுந்தது.

**உணவுக் கொள்கை:**

புலால் உணவு தான் பழந்தமிழர் உணவு என்ற கொள்கையில் பாரதிதாசன் உறுதியானவர்; புலால் உணவு உண்டால் தான் வீர உணர்வு மேலோங்கி நிற்கும் என்பதிலும் அளவு கடந்த நம்பிக்கையுடையவர். ஆனால் சைவ உணவு தான் தமிழர் உணவு என்பதில் நான் அதிக நம்பிக்கையுள்ளவன். இந்தக் கொள்கை வேறுபாடு எங்களை எந்த விதத்திலும் பாதித்ததில்லை.

நாங்கள் இருவரும் எப்போதும் அருகருகே அமர்ந்து உண்ணும் வழக்கமுடையவர்கள். அவருடைய இலையில் எல்லாவிதமான புலவும் மீனும் வகைவகையாகப்பரிமாறப்படும். எளிய மரக்கறி உணவு என் இலையில் பரிமாறப்படும். அவரவர் அவரவருடைய உணவை விரும்பிச் சுவைத்துச்சாப்பிடுவோம். நான் மரக்கறி உணவு சாப்பிடுவதை அவர் கேலி செய்ததுமில்லை; கண்டித்ததுமில்லை.

பாரதிதாசனுக்கு மிகவும் நெருக்கமான இசுலாமிய நண்பர் ஒருவர் அடிக்கடி அவரைத் தேடி வருவார். அவர் ஒரு நாள் பாவேந்தரைப் பார்த்து,'' நீர் புலால் உணவுதான் தமிழர் உணவு என்ற கொள்கையுடையவர். உமது நண்பர் அப்பாதுரை அக் கொள்கைக்கு எதிரானவர். தமிழர் உணவான புலாலை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், கொள்கையளவில் அவர் ஆரியர் தானே?'' என்று கேட்டார்.

''அதெப்படி? அவர் கொள்கைப்படி அவர் நடக்கிறார். நம்முடைய கொள்கைப்படி நாம் நடக்கிறோம். கொள்கை ஒன்றும் நடப்பு வேறாகவும் இருப்பதுதான் தவறு'' என்று விடையிறுத்தார் பாரதிதாசன்.

**தமிழியக்கம்**

மறைமலையடிகளிடம் ஒரு முறை நான் பேசிக் கொண்

டிருந்த போது 'பாரதியும் கவிஞனில்லை; பாரதிதாசனும் கவிஞனில்லை. இருவருமே வடசொற்களைக் கலந்து பாட்டெழுதுகிறார்கள்.' என்று ஒரு கருத்தை வெளியிட்டார்.

''வட சொற்களை மிகுதியாகக் கலந்து பாட்டெழுதுவதை நான் வரவேற்கவில்லை. என்றாலும் மிக அரிதாக ஏற்ற இடங்களில் ஓரிரு வடசொற்களைக் கலக்கும் போது கவிதையழகு மிகுதியாகிறது. வள்ளுவர், கம்பர் போன்ற பெருங் கவிஞர்களும் இதற்கு விலக்கானவர் அல்லர். அவ்வாறு பயன் படுத்தும் அவ்வரிய சொற்களைத் தமிழாகவே எடுத்துக் கொள்ளலாம் என்பது என் கருத்து,'' என்று நான் மறைமலையடிகளிடம் சொன்னேன்.

''வட சொற்களை நேரடியாகத் தமிழ்க்கவிதையில் பயன் படுத்த வேண்டியதில்லை. அவற்றுக்கு ஒப்பான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம்: அல்லது புதிதாகப் படைத்துக் கொள்ளலாம்'' என்று மறைமலையடிகள் மீண்டும் சொன்னார்.

''சமஸ்கிருதம் நமக்கு எதிரான மொழியன்று. நீங்களே காளிதாசனின் கவிதையழகில் நெஞ்சைப் பறிகொடுத்துச் சாகுந்தலத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறீர்கள். சாதிவருண வேறுபாடு உடையவர்கள் அதைப் பயன்படுத்துவதாலேயே நாம் அதை ஆரியம் என்று எதிர்க்கிறோம். இலக்கியவளமும், கருத்துச் செறிவும் உள்ள சமஸ்கிருதச் சொற்களை மிக இன்றியமையாத இடங்களில், இலக்கண வரம்புக்கு உட்படுத்திப் பயன்படுத்துவதில் கவிதையழகு மிகுதியாகிறது'' என்பதை நான் மீண்டும் சொன்னேன், அக்கருத்தை ஓரளவு சரியென்று மறைமலையடிகள் ஏற்றுக்கொண்டார்.

மறைமலையடிகளைச் சந்தித்தது பற்றியும், அவரிடம் மொழித்தூய்மை பற்றிஉரையாடியதுபற்றியும், அடுத்த முறை பாரதிதாசனைச் சந்தித்தபோது கூறினேன். அதைப்பொறுமையோடுகேட்டுக் கொண்டிருந்த பாரதிதாசன் ''அது சரி! கம்பனுக்கும் எனக்கும் என்ன முடிச்சு?'' என்று கேட்டார்.

''கம்பன் வட சொல்லைத் தம் பாடல்களில் அளவோடும்

அழகோடும் கலந்து பாடியிருக்கிறான்; நீங்களும் அவ்வாறு பாடியிருக்கிறீர். மற்ற கவிஞர்கள் சொல்லழகு தனித்தனிச் சொல்லில் இருக்கும்படி பாடுவது வழக்கம். ஆனால் கம்பன் சந்தத்தையும் சொல்லையும் இணைத்து எத்தனை எத்தனை தந்திரம் காட்ட முடியுமோ அத்தனையும் தன் பாடல்களில் காட்டியிருக்கிறான். தெரிந்தோ தெரியாமலோ கம்பனின் இந்த உத்தியை உங்கள் பாடல்களில் கையாண்டிருக்கிறீர்கள்'' என்று நான் சொன்னேன்.

"எப்படி?'' என்றார் பாரதிதாசன்.

அவருடைய 'காதல் நினைவுகள்' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள 'ஒரே குறை' என்ற பாடலை எடுத்துச் சொன்னேன். 'அன்பிருக்கும்' என்று தொடங்கும் பாடல்அது. 'இருக்கும்! இருக்கும்!' என்று முடியும் அந்தச்சந்த உத்தி கம்பன் பாட்டிலும் காணப்படுகிறது என்பதைக்கூறி, அக்கம்பராமாயணப்பாடலையும்'சொன்னேன். பாரதிதாசன் ஒத்துக் கொண்டார். இனி எழுதவிருக்கும் நூல்களைத் தனித் தமிழிலேயே எழுதப் போவதாகவும் கூறினார்.

சென்னையில் எங்கள் வீட்டில் தங்கியிருந்தபோது, நான் எழுதிய 'தமிழ் வாழ்க! என்ற நூலைக் கையில் வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தார் பாரதிதாசன். பிறகு அதைக் காட்டி 'நீங்கள் பேசியதா?' என்று கேட்டார்.

''நீங்கள் செட்டிநாடு வருவதற்குக் கொஞ்ச நாட்களுக்கு முன் கோனாப்பட்டில் பத்து நாட்கள் தமிழ் விழா நடத்தினேன். அந்த விழாவில் நான் பேசியவற்றையும், பேச நினைத்தவற்றையும் தொகுத்துத் 'தமிழ் வாழ்க' என்ற பெயரில் இந்நூலை எழுதினேன். 'தமிழ் வாழ்க!' என்பது ஒரு மந்திரம். தமிழ் இயல் வாழ்க; தமிழ் இசை வாழ்க: தமிழ் நாடகம் வாழ்க; தமிழ் மருத்துவம் வாழ்க; தமிழ் வாணிகவியல் வாழ்க—என்று ஒவ்வொரு துறையிலும் தமிழ் மொழி மற்ற மொழிகளைவிட எவ்வாறு மேம்பட்டு விளங்குகின்றது என்பதை மையமாக வைத்து ஆய்வு செய்து இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூல் வெளிவந்ததும் திருவாளர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஐம்பது படிகள்

வாங்கிப் பெரியார், அண்ணா முதல் தமிழ் நாட்டில் உள்ள இயக்கத்தலைவர்களுக்கும், அறிஞர்களுக்கும் அனுப்பி வைத்தார்' என்று நான் சொன்னேன்.

''மிகச் சிறந்த நூல்; தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்!' என்று பாராட்டினார் பாரதிதாசன். இந்த நூல்' கருத்தை மையமாக வைத்துத்தான் தமது தமிழியக்கத்தைப் பாட்டு வடிவில் பாரதிதாசன் எழுதினார். நான் எவ்வெத்துறைகளில் தமிழ் செழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேனோ, அவற்றோடு திரைப் படம் போன்ற வேறு துறைகளையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

'வருங்காலத் தமிழகம்' என்ற எனது வேறொரு நூலுக்குப் பாரதிதாசன் முன்னுரை எழுதியுள்ளார். அம் முன்னுரையில், ''திரு.க. அப்பாத்துரை 'தமிழ் வாழ்க' என்று உரை நடையில் எழுதியதை நான் தமிழியக்கமாகப் பாட்டில் எழுதியிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். 'வருங்காலத் தமிழகம்' என்ற நூலைப் பற்றிக் குறிப்பிடும் போது, அந் நூல் தொடர்பான வேறு சில செய்திகளையும் நான் கூறியாக வேண்டும். இந்த நூலையும், மு. வரதராசனார் எழுதிய கி.பி. இரண்டாயிரத்தையும் நூலாக வெளியிட்டவர் இயக்கத் தோழர் திருவாளர் சம்பந்தம் என்பவர். அவரைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். 'வருங்காலத் தமிழகம்' நன்கு விற்பனையாயிற்று. ஆனால் இன்று வரை எனக்குப் பணம் வரவில்லை.

இந்நூலை புருஃப் பார்த்துத் திருத்தியவர் பாரதிதாசன். சந்திப்பிழைகளே இருக்கக் கூடாது என்பதில் பாரதி தாசன் மிகவும் கண்டிப்பானவர். சில செய்யுள் வரிகளில் முற்றுப் புள்ளிகள் வரும் இடத்தில் கூடச் சந்தி போட்டுத்தான் முற்றுப் புள்ளி வைப்பார். இலக்கணத்தைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறை விளங்கும்.

பாரதிதாசனின் தமிழியக்கமும் வேறு சில காப்பியங்களும் வெளியான பிறகு, மறைமலையடிகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 'பாரதிதாசனின்

தமிழச்சியின் கத்தி என்ற காப்பியத்தைப் படித்தேன். அழகிய தனித்தமிழ்க் காப்பியம்' என்று பாராட்டினர். பாரதிதாசனின் பிற்காலப் படைப்புகள் யாவும் தனித் தமிழில் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளே பாரதிதாசனின் தனித் தமிழ் மலர்ச்சிக்குத் திருப்பு முனைகளாக அமைந்தவை.

குயிலும் திருக்குறள் புத்துரையும்.

1947-ஆம் ஆண்டில் பாரதிதாசனைச் சென்னையில் ஒருமுறை சந்தித்தபோது 'குயில்' என்ற பெயரில் 'பாட்டிதழ்' ஒன்று தொடங்க இருப்பதாகவும், அதில் செய்திகளும், விளம்பரங்களும் கூடப் பாட்டிலேயே வெளியாகும் என்றும் என்னிடம் குறிப்பிட்டார். முதல் இதழும் அனுப்பி வைத்தார். அவ்வேட்டில் திருக்குற ளுக்குப் புத்துரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந் தார். அம்முயற்சியில் தமக்குத துணை புரிய வேண்டும் என்று சொல்லி ஒரு நண்பரை என்னிடம் தூதாக அனுப்பி வைத்தார். நானும் இசைந்தேன்.

மீண்டும் ஒருமுறை புலவர் குழுவில் நானும் அவரும் சந்தித்த போது திருக்குறளுக்குப் புத்துரை எழுதுவது பற்றி நீண்டநேரம் உரையாடினேம்.

பெரியார் ஒரு முறை என்னிடம் திருக்குறளுக்குப் புத்துரை எழுதும்படி தூண்டினர். அப்போது 'கடவுள் வாழ்த்து என்பதை மாற்றி மனித இனத்தின் குறிக் கோள் என்று அதற்குத் தலைப்புத் தரவேண்டும்' என் றும் கூறினர்.

''நான் திருவள்ளுவரையும் உயர்வாக மதிக்கிறேன்; உங்களையும் உயர்வாக மதிக்கிறேன். உங்களுக்காகத் திருவள்ளுவருடைய கொள்கையைப் பொய்ப்பிக்க நான் விரும்பவில்லை, அதேபோல் திருவள்ளுவருக்காக உங்களுடைய கொள்கையைப் பொய்ப்பிக்கவும் நான் விரும்பவில்லை. உங்கள் இருவருடைய கொள்கையும் ஒன்று என்று நான் எப்போது நினைக்கிறேனே அப் போது எழுதுகிறேன்'' என்று பெரியாரிடம் சொன் னேன்.

இதை நான் பாரதிதாசனிடம் கூறியபோது ''பெரியார் சொன்னது கிட்டத்தட்ட சரிதான்; ஆனல் முழுக்கவும்

சரியில்லை. ஆனால் பெரியார் சொன்ன குறிக்கோளின் அடிப்படையிலேயே தொடக்க காலச் சைவசித்தாந்தமே அடங்கியிருக்கிறது. நடுவில் ஆரியம் கலந்ததால் அதன் தோற்றங்களெல்லாம் மாறியிருக்கின்றன. சைவ சித்தாந்தத்தைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு படித்தால், திருவள்ளுவருடைய கருத்துக்குப் போகலாம்'' என்று அவர் குறிப்பிட்டார். பாரதிதாசன் கூறிய இந்த விளக்கம் எனக்குப் பிற்காலத்தில் பெரிதும் கை கொடுத்து உதவியது. இந்த அடிப்படையில்தான் நான் திருக்குறளுக்கு உரை எழுதத் தொடங்கினேன். பாரதிதாசன் இப்போது உயிரோடிருந்தால், அந்த உரையை விரும்பி வரவேற்றிருப்பார். காந்தியடிகள் ஒருமுறை இலண்டன் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது *நல்லகுறிக்கோளை நாடிச் செல்லும் உள்ளப் பண்புதான், நாகரிகத்தின் வளர்ச்சியாக அமைந்தது' என்று குறிப்பிட்டார். கடவுளுக்கு அவர் கொடுத்த இலக்கண விளக்கமும், திருக்குறளின் கடவுள் வாழ்த்துக் கொள்கையும் ஒன்று தான் என்பது என் கருத்து.

### கோவை முத்தமிழ் மாநாடு

1950-ஆம் ஆண்டு மேத் திங்கள் 27, 28 ஆகிய நாட்களில் முத்தமிழ் மாநாடு ஒன்று கோவையில் நடைபெற்றது. தாய்க்கழகத்திலிருந்து பிரிந்து தி.மு.க தனிக்கட்சியாக இயங்கத் தொடங்கியநேரம். தி.மு.க. தன் சொந்த வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. நாவலர் ச சோமசுந்தரபாரதியார் மாநாட்டுத் தலைமை ஏற்றிருந்தார். இம்மாநாட்டில் என் பங்கு அதிகம்.

இம் மாநாட்டில் 'திராவிடம்' என்ற சொல் கடும் சொற்போருக்குக் காரணமாகியது. நாவலர் பாரதியார் 'திராவிடம்' என்ற சொல்லைக் கடுமையாகச் சாடினார். 'திராவிடர்' என்ற சொல்லுக்கு 'ஓடிவந்தவர்' என்று பொருள். அமிழ்தமனைய 'தமிழ்' என்னும்சொல்லிருக்கத் திராவிடம் என்ற சொல்லை ஏன் கையாள வேண்டும் என்பது அவர் வாதம். 'திராவிட முன்னேற்றக் கழகம்'

---

* A tendency towards good end is the evolution of civilization— Mahatma Gandhi.

என்பது 'தமிழர் முன்னேற்றக் கழகம்' என்றிருந்தால் சிறப்பு என்று அவர் வற்புறுத்தினர். பாரதிதாசனும் நாவலர் கொள்கையை ஆதரித்துப் பேசினர்.

அதற்கு அண்ணா ''நான் தமிழ் உணர்வு அற்றவன் அல்லேன். என் வீட்டில் உள்ள பெரியார் படத்தின் கீழ் 'தமிழர் தலைவர் பெரியார்' என்று தான் எழுதிவைத்துள்ளேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்று நான் கட்சிக்கு பெயர் வைத்துள்ளது கொள்கையின் அடிப்படையில்!'' என்று பேசினர். நான் அண்ணாவை ஆதரித்துப் பேசினேன்.

அப்போது மாற்றுக் கட்சிக்காரர் சிலர் பெரியாரைத் தமிழர் அல்லர் என்று கூறிக் கண்டனம் செய்தனர். திராவிட மொழிகள் பேசப்பட்ட நிலப்பரப்புகள் எல்லாம் அப்போது பிரிக்கப்படாமல் ஒரே மாநிலமாக அமைந்திருந்தன. இந்தக் காரணங்களை உள்ளத்தில் கொண்டு, கொள்கை அடிப்படையில் அண்ணா திராவிடத்தை ஏற்றார்.

முத்தமிழ் மாநாட்டில் தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு குழுமம்(Board) அமைக்கவேண்டும் என்று பாரதிதாசன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அண்ணாவுக்கு அது விருப்பமில்லை. என்றாலும் அதை அவர் எதிர்க்கவில்லை. தமிழ் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்களாக நானும், நாவலர் நெடுஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப் பட்டோம். ஆனல் அக்குழுமம் பின்னர் இயங்கவில்லை.

அண்ணாவுக்கும் பாரதிதாசனுக்கும் கருத்து வேறுபாடுகள் முன்பும் இருந்தன; அப்போதும் இருந்தன. தி.மு. கழகத்திற்குள் தமிழ்வளர்ச்சிக்கென்று தனிக் குழுமம் அமைப்பது, கட்சிக்குள் கட்சியாகி விடுமோ என்று அண்ணா கருதியிருக்கலாம். அண்ணா நுண்ணிய அரசியல் அறிஞர். அரசியல் நோக்கில் அண்ணாவின் கருத்துச் சரியே. தமிழ் வளர்ச்சியைத் தி.மு.க. தனது உயிர்த்துடிப்பாகக் கொண்டிருக்கும் போது, தமிழ் வளர்ச்சிக்கென்று தனி அமைப்புத் தேவையில்லை என்பது அண்ணாவின் கருத்து.

தமிழ் வளர்ச்சிக் குழுமத்தை இயக்குவதற்கும், அதற்

குச் சட்ட திட்டங்களை வகுக்கவும் விரும்பிய பாரதிதாசன் அண்ணாவின் கருத்தையறிந்துவர என்னை அனுப்பினார். நான் அண்ணாவை அணுகிப் பாரதிதாசன் கருத்தைச் சொன்னேன். தமிழ் வளர்ச்சிக் குழுமக் கூட்டத்துக்கு அண்ணா வரமறுத்து விட்டார். நாவலர் நெடுஞ்செழியனையும் போக வேண்டாம் என்று கூறித் தடுத்து விட்டார்.

அண்ணாவின் விருப்பமின்மையை நான் பாரதிதாசனிடம் வந்து சொன்னேன். "நமக்குத் தி.க.வும் வேண்டாம் தி.மு.க.வும் வேண்டாம். தமிழர்க்கென்று தனிக்கழகம் ஒன்று அமைப்போம்; நீ வந்து விடு" என்று சொன்னார்.

"நீங்கள் அமைக்க விரும்பும் தனித் தமிழ்க் கழகத்துக்கு என் ஒத்துழைப்பு (Moral Support) என்றும் உண்டு;ஆனால் நான் அதில் அங்கம் வகிக்கமாட்டேன். தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகிய உயரிய கொள்கைகளைப் பரப்புவோம்; ஆனால் தி.க.வையோ, தி.மு.க.வையோ திட்டக்கூடாது" என்று நான் சொன்னேன். தமிழ்த் தேசியக் கட்சியைச் சம்பத் துவக்கிய போதும் நான் இக் கருத்தைத்தான் வற்புறுத்தினேன். அவர்கள் அதன்படி நடக்கத் தவறியதும் நான் அதிலிருந்து வெளியேறிவிட்டேன்.

பாரதிதாசன் என் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தி.மு.க.வின் மேல் இருந்த வெறுப்பின் காரணமாக அவர் பேராயக் கட்சிக்குக் (Congress) கூடச் சென்று விட்டதாகக் கேள்விப்பட்டேன். பேராயக் கட்சிக் காரராகத் தேர்தல் மேடைகளில் பேசிப் பேராயக் கட்சிக் காரராகவே இறந்தார் என்றும் கேள்விப்பட்டேன். அவர் இறந்தபோது, கதர்க்கொடியால் மூடித்தான் அவர் பிணத்தை எடுத்ததாகக் கூறினார்கள். எந்த அளவு உண்மை அது என்று எனக்குத் தெரியாது.

புலவர் குழு:

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களால் முன்னின்று நடத்தப்பட்ட புலவர் குழுவில், முற்போக்குப் புலவர்களும், பிற்போக்குப் புலவர்களும் சரிசமமாக இருந்தார்கள். இரண்டு குழுவினர்க்கும்

சில சமயங்களில் பலமான சொற்போர்களும், மோதல் களும் ஏற்பட்டதுண்டு. சென்னையில் நடைபெற்ற புலவர் கூட்டத்தில் இரண்டு குழுவும் அடிதடியில் இறங்கும் அளவுக்குப் பாவேந்தர் சினம் பொங்கப் பேசினார். நிகழ்ச்சி எனக்குத் தெளிவில்லை. புலவர் குழுவிலிருந்து இருதரப்புத் தீவிரவாதிகளும் வெளி யேறினர். இறுதியில் நானும் இலக்குவனாருந்தான் மிஞ்சினோம்.

புலவர் குழுவில் எதிர்ப்புணர்ச்சியோடு இரண்டு கட்சிகள் இருந்ததற்கு அரசியல் வேறுபாடு ஒரு காரணம்; கொள்கை வேறுபாடு மற்றொருகாரணம். 'தெ.பொ.மீ. கிரேக்க மொழியிலிருந்து தமிழ் வந்ததாகச் சொல் கிறார்;' என்று பாவாணர் குற்றம் சாட்டுவார்.

பாவாணரின் ஆய்வுகள் தவறானவை; முறையற்றவை என்று தெ.பொ.மீ. கூறுவார். இரண்டு கட்சிக்காரர் களுக்கும் நான் மிகவும் நெருக்கமானவன். என்னு டைய கூட்டத்தில் தெ.பொ.மீயோ, துரை. அரங் கனாரோ அல்லது அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர் களோ தமிழை எதிர்த்துப் பேசியதில்லை. என்னைத்தவிர வேறு யாராலும் பாவேந்தர் கோபத்தைச் சமாளித் திருக்க முடியாது.

## தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாவேந்தரின் பங்கு

பாரதிதாசனின் இலக்கியப் பண்புகளை ஆய்வு செய் வதற்கு முன் பாரதியின் இலக்கியப் பண்புகளை ஆராய வேண்டும். கம்பர் காலத்திலிருந்து பாரதி காலம் வரை கவிதை ஒரு குறிப்பிட்ட மரச்சட்டத்துக்குள் சிக்கிக் கிடந்தது. கவிதையின் வெளித்தோற்றம் மட்டும் இருந்ததே தவிர, உள் உயிர் படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்தது. இடைக் காலத்தில் சிறந்த கவிஞர் கள் சிலர் இருந்தாலும், அவர்கள் அந்த மரச் சட்டத் துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தனர். பாரதி அந்தச் சட்டத்தை உடைத்து, யாப்பிலும் கருத்திலும் புதுமை செய்தார். பாரதியின் கவிதைப் பண்பை முழுக்க முழுக்கப் புதிது என்று பலர் நம்பினர். உண்மையில் அது புதிதன்று; மிகவும் தொன்மையானது.

தொல்காப்பியர் காலத்துக்கு முன் முத்தமிழ் இருந்தது. தொல்காப்பியர் காலத்தில் கூட இயற்றமிழ் தான் பெரிதும் வளர்ச்சியுற்றது. இசைத்தமிழும் நாடகத் தமிழும் நாளாக நாளாகத் தேய்ந்து அழிந்தன. இருந்த ஒரு சில நூல்களும் நம்மை எட்டவில்லை. முத்தமிழ்ப் பண்பு மக்களிடையில் இருந்தது.புலவர்கள் மதியாத காரணத்தால் தேய்ந்தது. சங்ககாலத்தில் படைக்கப்பட்ட முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தைச் சங்கப் புலவர்கள் காப்பியமாக ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் செயற்கையான கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல், சிலப்பதிகாரம் வெளியில் நின்ற காரணத்தால், சங்கப் புலவர்கள் அதை ஏற்கவில்லை. முத்தமிழ் விரவிய இலக்கியம் மக்கள் இலக்கியமாகக் கருதப்பட்டது; புலவர் இலக்கியமாக மதிக்கப்படவில்லை.

பாரதி, இயல் அறிந்த பெருங் கவிஞர்; இசை அவருக்குத் தெரியும்; நாட்டியமும் கட்டாயம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் நாட்டியச் சூழ்நிலையில் வளர்ந்தவர். முத்தமிழ் அறிந்த பள்ளு, குறவஞ்சிக் கவிஞர்கள் சிலர் பாரதிக்கு முன் இருந்தாலும், அவர்களால் பழைய சட்டத்தை உடைத்து வெளியில் வரமுடியவில்லை. சட்டத்தை உடைக்கும் பணியைத் துணிந்து செய்தவர் பாரதியே!

சொல்ல விரும்புவதை இயலாக வாயுரைக்கச் சொல்லி, அதையே ராகத்தோடு இசையாகப்பாடி, அதையே செயல் முறையாக நாடகமாக்கியவர் பாரதி.பாரதியின் கண்ணம்மா தெளிந்த இயல்; தித்திக்கும் இசை; திகைக்க வைக்கும் உணர்ச்சி நாடகம். இந்த முத்தமிழும் பிணைந்த பண்பு துவக்க காலத்தில் பாரதிதாசனிடம் இருந்தது. முதல் தொகுதியில் உள்ள 'புரட்சிக் கவியில்' பாரதியின் பாரதிதாசனைக் காணலாம்.

பாரதிதாசன் வளர வளர, அவர் இயற்பண்பை வளர்த்த அளவு கவிதையில் இசைப் பண்பையும் நாடகப்பண்பையும் வளர்க்கவில்லை. இயலையும், இசையையும் தனித் தனியே பிரித்து அவற்றுக்குத் தனித்தனி இலக்கியங்கள் படைக்கத் தொடங்கிவிட்டார். இசையமுதும், இரணியனும் அவற்றுக்குச் சான்றுகள்.

'தமிழில் காப்பியங்கள் அதிகமில்லை' என்று நான் ஒரு முறை பாரதிதாசனிடம் சொன்னேன். 'நான் நிறையக் காப்பியம் எழுதப் போகிறேன்' என்று அவர் சொன்ஞர். அவர் சொன்னபடியே காப்பியங்கள் நிறைய எழுதினர். ஆனல் பாரதியின் முத்தமிழ்ப் பண்பைக் கைவிட்டுவிட்டார்.

விருத்தம் பாடத் தகுந்தது என்பது பாரதிதாசன் கொள்கை. விருத்தம் நாடகத் தமிழைச் சேர்ந்தது என்பது என் கொள்கை. பாரதிதாசன் அதை ஒத்துக் கொண்டார்.

'ஏன், அகவலும் பாடத் தகுந்தது என்று தானே முன்னோர் நினைத்தனர். ஆனல் அகவலை இன்னராகம் என்றில்லாமல், எல்லாராகத்திலும் ராகமாலிகையாகப் பாடினர். விருத்தத்திற்கென்று தனி ராகம் இருந்தது' என்று கூறிஞர் பாரதிதாசன். அக்கூற்று உண்மை.

''கலிப்பா நாடகத்தமிழ் முறையைச் சேர்ந்தது. கிரேக்க மொழியில் உள்ள ode-ம் கலிப்பாவும் ஒன்று'' என்பது என் கருத்து.

காப்பியப் பண்பைப்பற்றி ஓர் இலத்தீன் தொடர்...... அதன் பொருள் என்னவென்ருல்'Begin with the end' என்பது தான். இலியாதிலும் (Iliad) சுவர்க்க இழப்பிலும் (Paradise Lost) காப்பியம் முடியும் இடத்தில் தொடங்குகிறது. மேலும் படிப்பவன் கீழே வைக்க முடியாதபடி புதினத்தின் சுவையோடு (Novel Interest) காப்பியம் தொடர்ந்து செல்ல வேண்டும். இப் பண்புகள் யாவும் சிலப்பதிகாரத்தில் தான் முழுக்க முழுக்க அமைந்திருக்கின்றன; வேறு தமிழ்க்காப்பியங்களில் இல்லை. இதை தான் பாரதிதாசனிடம் கூறினேன்; அவரும் ஒத்துக் கொண்டார்.

பாவேந்தரின் காப்பியங்கள் Episode—போல அளவில் சிறியனவாக இருந்தாலும் அளவிறந்த, நுண்ணிய காப்பியப் பண்புகள் மிகுந்தவை; நிலை பேறுபெற்றவை.

கவிஞர் பாரதிதாசன்

பாரதிக்கு இரண்டுவிதமான பாதிப்புகள் உண்டு. வடமொழி இதிகாச— இலக்கியப் பாதிப்பு ஒன்று; மேலை

நாட்டுக் கவிஞர்களான ஷெல்லி, கீட்ஸ் ஆகியோரின் பாதிப்பு மற்றொன்று. பாரதிக்குச் சங்க இலக்கியப் பாதிப்பு கிடையாது.

பாரதிதாசனுக்குத் துவக்ககாலத்தில் பாரதியின் பாதிப்பும் பிற்காலத்தில் சங்க இலக்கியப் பாதிப்பும் இருந்தன. என்றாலும்அவர் படைப்புக்களில் பெரும் பகுதிஅவருக்கே உரித்தான தனித் தன்மை மிக்கவை.

பாரதிக்கு வடமொழி, இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய பிற மொழிகளில் தேர்ச்சி உண்டு. பாரதிதாசன் தனித் தமிழ் கவிஞர். பிரெஞ்சு ஆட்சியில் இருந்த புதுச் சேரியில் பிறந்து வாழ்ந்தாலும் அவருக்குப் பிரெஞ்சு இலக்கியப் பாதிப்பும் கிடையாது.

தான் சரியென்று நினைத்ததை எவருக்கும் அஞ்சாமல் பின் விளைவுகளுக்குச் சிறிதும் கவலைப்படாமல் எவன் எழுதுகிறானோ அவன் தான் உண்மைக் கவிஞன். பாரதிதாசனிடம் இப் பண்பு முனைப்பாகவே இருந்தது. வரலாறு சில கவிஞர்களைப் படைத்ததுண்டு; இவர் வரலாற்றைப் படைத்த கவிஞர்.

ஆங்கில இலக்கிய உலகில் தமக்கென்று ஒரு கால கட்டத்தை (Age) உருவாக்கியவர் ஷேக்ஸ்பியர். தமிழில் தமக்கென்று தனிக் காலகட்டத்தை உரு வாக்கிய பெருமை பாரதிதாசனுக்கும் உண்டு. இவருக் கென்று தனிப்பட்ட இலக்கிய வரலாறு, தமிழ் உள்ள ளவும் இருக்கும்.

பாரதியை உலகமெங்கும் விளம்பரப் படுத்தவும், அவர் இலக்கியங்களைப் பரப்பவும் ஆற்றல் வாய்ந்த ஒரு பின்னணி இருக்கிறது. பாவேந்தருக்கு அது இல்லை. அப்படி இருந்திருந்தால், இவர் வாழ்ந்த காலத் திலேயே நோபல் பரிசு பெற்றிருப்பார்.



தமிழ் நாட்டுப் பேச்சாளர்கள்
சில சமயங்களில் மட்டும்
பொறி பறக்கும்,
'சிகரெட் லைட்டரைப்' போன்றவர்கள்.

திருக்குறளார்--
கொளுத்தியதிலிருந்து
அணையும் வரை
நகைச்சுவைப் பொறி பறக்கும்
விழுப்புரம் மத்தாப்பு!
இவர் அவசரமாக
வீசி எறிந்த மத்தாப்பைச்
சில பேச்சாளர்கள்
தங்கள் கையில்
எடுத்து வைத்துக் கொள்வதுண்டு.

இவர் நகைச் சுவை
கடன் வாங்காத
சொந்தச் சரக்கு.

திருக்குறளார்
தமிழ் நாட்டு மார்க் ட்வைன்;
சே சே! அப்படிச் சொல்லக் கூடாது.
மார்க் ட்வைன்
அமெரிக்கத் திருக்குறளார்.

ஒரே பெரியார்!
ஒரே அண்ணு!
ஒரே திருக்குறளார்!

திருக்குறளார்-
தமக்கே உரிய நகைச்சுவையோடு
இக்கட்டுரையில்
பாவேந்தரைப் பற்றிப் பேசுகிறர்.

# பாலும் தெளிதேனும்

*திருக்குறளார்*
*வீ. முனுசாமி*

பாவேந்தர் பாரதிதாசன் கடலூர் வந்தால், என் அச்சகத்திற்கும் வருவார். இலக்கியம் அரசியல் எல்லாம் பேசுவோம்.

பாவேந்தர் ஓர் இலக்கியப் 'பயில்வான்.' அவர் தோற்றம், பார்வை, பேச்சு யாவும் முரட்டுத்தனமாக இருக்கும். யாரையும், எதையும் வைத்துப் பார்க்கமாட்டார்.

எதைப்பற்றி உள்ளத்தில்—எப்போது என்ன நினைக்கி ருரோ அதை அப்படியே பலர் முன்னிலையில் கொஞ்சம் கூட அஞ்சாமல், கூச்சப்படாமல் போட்டு உடைத்து விடுவார். அது அவருடைய பண்பு. பின் விளைவுகளைப் பற்றியும் கவலைப்படமாட்டார்.

சிதம்பரத்துக்கு அருகில் காட்டு மன்னர்குடியில் திருவாளர் சத்தியதாஸ் என்பவர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணி புரிந்து வந்தார். அவருக்குத் தமிழிலும் பாவேந்தர் பாட்டிலும் அதிக ஈடுபாடு உண்டு. அவர் பாவேந்தரை அழைத்துத் தம் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற ஆண்டுவிழாவில் பேச வைக்க விரும்பினர். அவ்விருப் பத்தை என்னிடம் தெரிவித்தார். நான் பாவேந்தரைக் கண்டுபேசி ஒப்புதல் வாங்கிக் கொடுத்தேன்.

பள்ளியில் இலக்கிய மன்ற விழாவுக்கு நாள்குறிப்பிட்டு, அன்று விழாவுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் விமரிசையாகத் தலைமையாசிரியர் செய்திருந்தார்; அழைப்பிதழ் அச்சிட்டு ஊர்ப்பிரமுகர்களுக்கு அனுப்பி யிருந்தார். பெருங் கவிஞர் பேச வருகிருர் என்று ஊர் மக்கள் பள்ளிக்குத் திரளாக வந்திருந்தனர். அவ்விழா வுக்கு வந்திருந்த ஊர்ப்பிரமுகர்கள் எல்லாரும் பேராயக் கட்சி (Congress)யைச் சார்ந்தவர்கள்; தீவிர வைண வர்கள்.

கவிஞர் என்றவுடன் நீளக் கோட்டும், தலையில் உருமா லும், காதில் கடுக்கனும், கைத்தடியுமாகப் பழங்கால முறைப்படி தோன்றுவார் என்று எல்லாரும் எதிர் பார்த்துக் காத்திருந்தனர். ஆனல் பாவேந்தர் நவீன உடையோடும், அச்சுறுத்தும் மீசையோடும், கையில் சிகரெட் டின் (Tin) நெருப்புப் பெட்டி சமேதராக மிடுக் கோடு பள்ளியில் நுழைந்தார். இவர் தோற்றத்தைப் பார்த்ததும் ஊர்ப்பிரமுகர்கள் முகஞ்சுளித்தனர்; அவர் கள் நெற்றியில் நிரம்பியிருந்த நாமத்தைப் பார்த்து இவர் முகஞ்சுளித்தார்.

கூட்டம் தொடங்கியது. பாவேந்தர் வாயிலிருந்து 'சுயமரியாதைக் கருத்துக்கள்' அருவியைப் போல் குதித்துப் புரண்டுவந்தன. அவர் சொற்களின் வீச்சு

சம்மட்டி அடியாக விழுந்தது. மாணவர்களுக்குப் பள்ளி யில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடல்களின் மேல் அவர் கவனம் திரும்பியது. பிள்ளையார் வாழ்த்தாக ஔவையார் பாடிய பாடல் ஒன்று அவரிடம் மாட்டிக் கொண்டது. அப்பாடல்:


பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்குநான் தருவேன்—கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

''என்ன ஏமாற்று இது. அவனவன் பத்து வருஷம் பெரும் புலவர்கிட்ட பாடங் கேட்டாலும் இயற்ற மிழையே கரைகாண முடியல. ஓர் அணுவுக்கு பாலும் தேனும் கொழுக்கட்டையும் வாங்கிப் புள்ளையாருக்குப் படைச்சிட்டா முத்தமிழும் வந்திடுமா? முத்தமிழ் என்ன அவ்வளவு 'சீப்பாப்' போச்சா? இதை ஒரு பாட்டுன்னு இவ பாடிட்டா...முண்டம்! இதை மாணவருக்குப் பாடமா வேற வெச்சிட்டானுக... இந்த நாடு உருப் படுமா?'' என்று விளாசித் தள்ளிவிட்டார். அங்கு அமர்ந்திருந்த பக்தர் கூட்டத்தில் சலசலப்பு. பாவேந் தர் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. கூட்டம் முடிந்தது. தலைமையாசிரியர் முகத்தில் ஈயாடவில்லை.

ஒரு வாரத்தில் தலைமையாசிரியர் சத்தியதாஸ் காட்டு மன்னார் குடியிலிருந்து திருக்கோவிலூர் மாற்றப்பட் பட்டார். இச்செய்தியை அறிந்து நான் மிக வருந்தி னேன். அடுத்த முறை நான் பாவேந்தரைச் சந்தித்த போது,'' என்ன... இப்படிப் பண்ணீட்டீங்க... உங்க பேச்சோட எதிரொலி... பாவம்... சத்தியதாஸ்... புள்ளை குட்டிக்கார... அவனைத் திருக்கோவிலூர் மாத்திட் டாங்க!'' என்று வருத்தத்தோடு சொன்னேன்.

அதற்குப் பாவேந்தர் சிரித்துக் கொண்டே ''இப்ப என்ன அதுக்கு? சத்தியதாஸைத் திருக்கோவிலூர் பள்ளியிலே ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல் லுங்க... நான் அங்கே போய்ப் பேசற... தானா திருக் கோவிலூரிலிருந்து காட்டுமன்னார்குடி மாத்திட்டுப் போரு...'' என்றார் அவர். எப்படி பதில்?–அவர்தான் பாவேந்தர்.

○



பூதானத் தொண்டர்களுக்கு
'எஸ்.ஆர்.எஸ்' என்பது
ஓர் உற்சாகச் சொல்.

'எஸ்.ஆர்.எஸ்'--என்ற
மூன்றெழுத்துக்குத்
தன்னலமற்ற உழைப்பு,
தொண்டு,
துணிச்சல், என்று
பலபொருள்கள் உண்டு.

இலக்கியமும்
சமூகத் தொண்டும்
இவருடைய இரண்டு கண்கள்!
சர்வோதயம்
இவருடைய உடம்பு.

அறிஞர் அண்ணாத்துரை
இளைய தலைமுறைக்கு 'அண்ணா.'
எஸ்.ஆர்.எஸ்
இளைய தலை முறைக்கு 'அண்ணாச்சி,,'

பாரதிதாசன் போன்ற
கவிஞர்கள் தொடர்பும்
அரவிந்தர் போன்ற
ஆன்மீக-வாதிகள் தொடர்பும்

ப.ஜீவானந்தம்
பி. ராமமூர்த்தி
ஈ.எம்.எஸ்.நம்பூத்ரி பாத்
எம்.ஆர். வெங்கட்ராமன் போன்ற
அரசியல் வாதிகளின் தொடர்பும்
இளமையிலிருந்தே
இவருக்கு இருந்தன.

தமிழ் நாடு என்றவுடன்
ஜெயப்பிரகாஷ் நாராயணன்
நினைவில் தட்டுப் பட்டது
திரு.எஸ்.ஆர்.எஸ்.அவர்களின்
உருவம் தான்.

பன்னிரண்டாம் வயதில்
பாரதியார் சங்கமும்,
பத்தொன்பதாம் வயதில்
பாரதி கவிதா மண்டலமும்
நடத்திய செயல் வீரர்.

பாரதிதாசன்—
வாத்தியார் சுப்புரத்தினமாகக்
கதர்ச்சட்டை அணிந்து
தேசியப் பாடல்கள்
பாடிக் கொண்டிருந்த நாளிலிருந்து,
அவர் பாவேந்தராக மடிந்தவரை
அன்பராகவும்,
அணுக்கத் தோழராகவும் விளங்கியவர்.

இக் கட்டுரையின் மூலம்
நம்மையெல்லாம்
பாரதிதாசனுக்கு
மிக அருகில்
அழைத்துச் செல்கிறார் எஸ்.ஆர்.எஸ்.

---

# பாவேந்தருடன்

---

## திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம்.

பாவேந்தர் இயல்பாகவே ஒரு போராட்டக்காரர். புதுச்சேரியில் அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு போராட்ட

வாழ்க்கை. ஏறக்குறைய 1925-ஆம் ஆண்டிலிருந்து அவர் எதிர்கட்சியாகவே இருந்தார். அவர் ஒரு கட்சியில் உறுப்பினராக இருந்தார் என்று சொல்லுவதைவிட அவரே ஒரு கட்சியாக—பாரதிதாசன் என்ற தனி மனிதனே ஒரு ஸ்தாபனமாக விளங்கினர்.

'பர்த்திலெமி' என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவர் புதுச்சேரியிலிருந்து பிரெஞ்சுப் பாராளுமன்றத்துக்கு நின்ருர். அவருக்காகப் பாரதிதாசன் தேர்தல் பணியாற்றினர். தேர்தலில் ஓட்டு எண்ணுவதில் வீண் கலகங்கள் நடத்தி ஓட்டை எதிர்க்கட்சிக்காரர்கள் ஏமாற்றிவிடும் பழக்கம் உண்டு. கூனிச்சம்பட்டு என்ற ஊர் புதுச்சேரியில் இருந்து பத்துமைல் தொலைவில் உள்ளது. பாரதிதாசன் அங்கு பள்ளி ஆசிரியராய்ப் பணிபுரிந்தார். பர்த்திலெமி தேர்தலின் போது, கூனிச்சம்பட்டு ஓட்டுச்சாவடியில் பாவேந்தர் பணிபுரிந்தார்.

தேர்தல் அன்று மாலை ஓட்டுப் பதிவு முடிந்தவுடன் சீல் வைத்த ஓட்டுப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு புதுச்சேரி வந்தடைந்தார். புதுச்சேரி மாநிலத் தேர்தல் அதிகாரியிடம் ஓட்டுப் பெட்டிகளை நேரில் ஒப்படைத்தார். ஓட்டுச் சாவடியிலிருந்து ஓட்டுப் பெட்டியை எடுத்து வந்த குற்றத்திற்காகக் கைதுசெய்யப்பட்டார். தண்டனையும் அடைந்தார். அதே நேரத்தில் வேறு குற்றங்களைச்சாட்டி 'ஆத்மசக்தி' பத்திரிகை ஆசிரியர் திரு. சாரங்கபாணிச் செட்டியார், 'தேச சேவகன்' ஆசிரியர் சைகோன் சின்னையா முதலியார் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். எல்லாரும் சில மாதங்கள் சிறையில் இருந்து விடுதலை பெற்றனர்.

புதுச்சேரித் தேர்தல் காலங்களில் பாரதிதாசன் ஒரு சிங்கம். அவருடைய பேனவின் கர்ஜனையைக் கேட்டவுடன் அரசியல் நரிகள் ஊளையிட்டு ஓட்டமெடுக்கும். தேர்தல் முடிந்தவுடன் மக்கள் பல நாட்களுக்குக் கவிஞரின் தேர்தல் இலக்கியத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள்.

மாசி மாதத்தில் வரும் மகவிழா புதுச்சேரியில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படும். வெளியூர்களில் இருந்து சுமார் நூறு சாமிகள் கடலில் மகமுழுக்காடு

வதற்குப் புதுவைக் கடற்கரைக்கு வரும். அவற்றுள் புதுச்சேரிக்கு 20 மைல் தூரத்திலிருந்து வரும் மயிலம் முருகப் பெருமானும், 40 மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் செஞ்சி அரங்கநாத சாமியும் விழாவுக்கு அணி செய்யும் கடவுள்கள். ஒருமுறை 'மயிலம் சுப்பிரமணியர் துதி அமுது' என்ற அற்புதமான பக்தி இலக்கியத்தைப் படைத்து மகவிழாவில் பாரதிதாசன் வெளியிட்டார். அதில் வரும் திருப்புகழை அருணகிரியார் திருப்புகழ்ப் பாக்களுடன் இடையில் செருகிவிட்டால், இடைச் செருகல் என்று கண்டுபிடிக்க முடியாது.

ஒரு முறை தேர்தல் நெருங்கும் நேரம். மகவிழா வந்தது. மயிலம் முருகர் வீதி உலாவுக்குத் தெருவெங் கும் பந்தல் போட்டு அலங்கரிக்கப்படுவது வழக்கம். அவ்வாண்டு அலங்காரம் பாரதிதாசன் தமிழ்வாளின் வீர வீச்சுக்கள்தாம். 'அநியாய ஆட்சியை அழிக்கவா முருகா!' என்று தொடங்கிய அவர் பாடல்கள் எதிர்க் கட்சியின் ஆதரவை மக்கள் மனத்திலிருந்து அழித்த தோடல்லாமல், எதிர்க்கவும் வலிமை தந்தன. அந்தத் தேர்தலில் 20 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த கட்சி படு தோல்வியடைந்து ஆட்சி பீடத்திலிருந்து இறக்கப் பட்டது.

இன்று உள்ள வ.உ.சி. உயர்நிலைப் பள்ளிக்கு அப் போது மிசியோன் பள்ளி என்று பெயர். அந்த நாளில் புதுவை அரசியல் அமைப்பில் முதல் வகுப்பு இரண் டாம் வகுப்பு என்று இரண்டுவகை வாக்குச் சீட்டுகள் உண்டு. பிரஞ்சுக்காரர்களும், தங்களைப் பிரெஞ்சுக் காரர்கள் என்று பதிவு செய்துகொண்ட இந்தியர்களும் முதல் வகுப்பு வாக்காளர்கள். பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த இந்தியப் பகுதியில் பிறந்து 21 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் இரண்டாம் வகுப்பு வாக்காளர் கள். வாக்காளர் பட்டியலில் இரண்டுவகை இருந்த அநீதியை எதிர்த்துப் பாவேந்தர் குரல் கொடுத்தார்.

பாவேந்தர் சார்ந்திருந்த கட்சி செல்வண்ண நாயக்கர் கட்சி. அப்போதெல்லாம் தனியார் பெயரில்தான் புதுவையில் கட்சிகள் இருப்பது வழக்கம். பிரெஞ்சு ஆட்சியில் அப்போது புதுவையில் வழக்கில் இருந்த வாக்காளர் வேறுபாட்டை ஒழிக்கப் பாடுபட்ட அரசியல்

தலைவர் திரு. செல்லான் நாயக்கர் ஆவார். அவர் மக்கள் செல்வாக்குப் பெற்ற வழக்கறிஞர். வாக்காளர் பட்டியலில் இருந்த இந்த அநீதிக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து எழுத்துப்போர் புரிந்தவர் பாவேந்தர். பாவேந்தரின் இம்முயற்சி வெற்றிபெற்ற நேரம், அவர் பணிசெய்த பள்ளியில் ஆண்டுவிழா எடுக்கப்பட்டது. அவ்விழாவில் மாணவர்கள் ஒரு நாடகம் ஏற்பாடு செய்திருந்தனர். கதை, வசனம், பாட்டு எல்லாமே பாவேந்தர்தாம். வெள்ளையருக்கும் இந்தியருக்கும் வெவ்வேறு வாக்காளர் பட்டியல் இருந்ததை எதிர்த்துக் கிடைத்த வெற்றியைத் தம் நாடகப் பாட்டில் புகுத்தினார்.

பல்லவி

கூவாயோ கருங்குயிலே
யாரும் ஒன்றென்று (கூவாயோ)

அநுபல்லவி

ஏவலர் இந்தியர்
இரண்டாம் தொகுதியென்றார்
அக்குறை நீங்கிற்றென்றே
இனிதாய் நன்றே (கூவாயோ)

தொகையறு

ஒரு குடைக் கீழ் நின்ற
வருள் சிலருக்கு வெயில்...
சிலருக்கு வெயிலோ?

குவிந்த பொருளோ
விடியுமோ சமமாக..
அடையாத தெவ் வகையிலோ? (கூவாயோ)

பாட்டு இன்னும் நீளம்—

இந் நாடகத்திற்கு அழைக்கப்பட்டிருந்த கவர்னர், கல்வி இலாகா அதிகாரி, மற்ற பிரெஞ்சுக்காரர் ஆகியோருக்கு இப்பாட்டு மொழி பெயர்த்துச் சொல்லப் பட்டது. இந்த நாடகத்தில் கல்வியின் சிறப்புப் பற்றி அருமையான பாடல் ஒன்றும் எழுதியிருந்தார்.

உலகமே உயர்வடைவாய்
உள்ளவர்க் கெல்லாம் நீயே தாய்!

நலந்தரும் சமத்துவம்
நாடுதல் மகத்துவம்
நண்ணுவாய் சுதந்திரத்வம் —(உலகமே)

கலகமேன்? சண்டைகளேன்
கருத்தெலாம் பேதம் கொள்வதேன்?
கலன் செல்லும் பாதையில்
காரிருள் வெளிக்கு
கல்வியே சுடர் விளக்கு (உலகமே)

இந்த இரண்டு பாடல்களிலும் வெளிப்படுத்திய சிறந்த கருத்துக்களுக்காகப் பிரெஞ்சு அறிஞர்களால் பாவேந்தர் பெரிதும் பாராட்டப் பட்டார். குடியரசுக் கொள்கைகளை விளக்கும் பாடல்களை எழுதி மாணவர்களுக்குப் பள்ளிகளில் தெளிவுண்டாக்க வேண்டும் என்று அவர்கள் பாவேந்தரைக் கேட்டுக் கொண்டனர்.

1928 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். புதுச்சேரியில் நடிகர் எம்.கே. ராதா நாடகக் குழுவினர் இரண்டு மாதங்கள் தங்கித் தொடர்ந்து நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தனர். அப்போது பாரதியாரின் நினைவு நாள் வந்தது. செப்டம்பர் 11ஆம் நாள் மாலை ஆனந்தரங்கம் பிள்ளை இல்லத்தில் பாரதி விழா நடைபெற்றது. பாரதிதாசன் தலைமை தாங்கினார். நாடகக் கலைஞர்களும் பாரதி விழாவிலே கலந்து கொண்டு பக்க வாத்தியத்துடன் பாரதி பாடல்களைப் பாடினார். பாரதிதாசனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ஆனால் பாரதி பாடல்களை அவர்கள் பாடிய முறை இவருக்குப் பிடிக்கவில்லை.

பாரதியார் எப்படிப் பாடுவார் தெரியுமா?" என்று கேட்டு விட்டு அவரே பாட ஆரம்பித்தார். 'பக்தியினாலே தெய்வ பக்தியினாலே' என்ற பாட்டு! சபை ஆழ்ந்த அமைதிக்குச் சென்றது; சிறிது நேரத்தில் உணர்ச்சி மயமாகியது. பாவேந்தரின் குரல் கணீரென்றிருக்கும். பக்தியினாலே என்று பிலகரி ராகத்தில் மேல் நிலையில் சிறிது நேரம் நிறுத்துவார். அப்போது குரலில் ஒரு ரவை பறக்கும். அந்த நாத ஒலியில் ஒரு மத்தாப்பு வெடிக்கும். அதற்குப் பின்பு இரண்டொரு முறை அவர் பாடக் கேட்கும் வாய்ப்பு எனக்கிருந்ததுண்டு. ஆனால்

என் நினைவில் பசுமையாக இருப்பது, 1928 செப்டம்பர் 11இல் ஆனந்தரங்கம் பிள்ளை இல்லத்தில் அவர் பாடக் கேட்டதுதான். அது போல் மற்றைய நாள் பாடல் களைச் சொல்ல முடியாது.

1930—31-இல் பாவேந்தருக்குச் சம்பளம் சுமார் அறுபது ரூபாய்தான். கடன், மற்றுமுள்ள பிடித்தங்கள் போக ஒருமுறை ரூ34/=தான் கைக்கு வந்தது. அவருக்குச் சம்பளம் வரும்நாள் என்று சிலருக்கு வாசனை அடிக்கும். கலகலப்பாக அவர் முன்வந்து நிற்பார்கள். திருவாளர்கள் பச்சையப்ப உடையார், கந்தசாமி ஆச்சாரி, எம். என். சாமி முதலியோர் பெரும் பாலும் வாடிக்கைக்காரர்கள்போல. இவருக்குக்கிடைக் கிறதோ ரூ 34/=இதில் வாடிக்கையாக உதவிகள் செய்து அவர் இயல்பு.

பச்சையப்ப உடையார் என்பவர், தாளத்தில் வல்லவர். 108 தாளங்களிலும் தமக்குப் பயிற்சி உண்டு என்று சொல்லுவார். பாவேந்தரும் அவரது தாளஞானத்தில் அதிக மதிப்பு வைத்திருந்தார்.

எம். என். சாமி என்பவர் சிறந்த நடிகர், நடிப்புக் கலை அவரிடம் கைகட்டி நிற்கும். பத்துப் பதினைந்து பேரே கூடியுள்ள சபையில் கவிஞர் அவரை நடிக்கச் சொல்லு வார். அவர் சோகமாக நடித்தால் எல்லாரும் கண்ணீர் விடுவர். சிருங்காரம் நடித்தால் கலகலவென்று நகைப் பர். கந்தசாமி ஆச்சாரி பாவேந்தருடன் சிலம்பு விளை யாடுபவர்; சங்கரன் குளம், கொட்டடி என்ற சிலம்புப் பயிற்சிக் கூடத்தின் முக்கியஸ்தர்; வயது தளர்ந்த காலத்திலும், உடல் கட்டுடன் விளங்கினர். வைத்தியம் கூடக் கொஞ்சம் தெரியும். இவர்களைப் போன்றவர் இன்னும் பலபேர். மாதா மாதம் உதவிகள் மௌன மாகவே நடக்கும்.

□

1935-ஆம் ஆண்டு. பாவேந்தர் அப்போது அதிகமாக சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். 'இவ்வளவு அதிகமாக சுருட்டைப் புகைத்தால் உடல் நலம் அதிகம் பாதிக்குமே; அவரிடம் சொல்லக் கூடாதா?' என்று குயில் சிவா அவர்களைக் கேட்டேன்.

'நீதான் சொல்லேன்' என்றார் சிவா.

'இப்படிச் சுருட்டுப் பிடிக்கின்றீர்கள்; உடலுக்கும் கெடுதல், பார்ப்பதற்கும் நன்றாயில்லை' என்றேன் பாவேந்தரைப் பார்த்து. 'என்ன செய்யச் சொல்றே?' என்று கேட்டார் பாவேந்தர்.

'எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்ல வேண்டும் என்று நினைத்த நான் 'எப்படியோ விட்டு விட வேண்டும்!' என்றேன். 'சரி' என்று பாதி சுருட்டைக் கீழே எறிந்து விட்டார். எனக்கு அதிர்ச்சியாகி விட்டது. சிவா அவர்களும் எதிர் பார்க்கவில்லை. நான்கு நாட்கள் சென்றன. வழக்கம் போல் எல்லா வேலைகளையும் செய்தார்.

'சுப்பிரமணியா! சுருட்டு வேண்டாமின்னியே, இப்ப என்ன செய்யறது?' என்றார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை; ஊமையாய் விழித்தேன். பக்கத்திலிருந்த சிவா 'பீடி பிடிக்கிறது' என்று அவருக்கே உரிய முறையில் கூறிச் சிரித்தார். 'சொல்றியே கொண்டாயேன்' என்றார் பாவேந்தர். நான் ஓடிப் போய் பீடிக்கட்டு ஒன்று வாங்கி வந்தேன். அதனைப் பற்ற வைத்தார். சில நாட்களில் பீடி எண்ணிக்கை பெருகிவிட்டது. 'இந்த பீடி இவ்வளவு பிடித்தால்' என்று நான் தொடங்கினேன்.

'என்னதாம் செய்யறது?'—பாவேந்தர் கேட்டார்.
'பீடி வேண்டாம்!' என்றேன்.

உடனே வாயிலிருந்த பீடியைக் கீழே போட்டார். மூன்று நாட்கள் சென்றன. அன்பர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களிடம் 'சுருட்டுப் பிடித்தேன்; வேண்டாம் என்றான். விட்டு விட்டேன். பீடி பிடித்தேன். அதையும் வேண்டாம் என்றான்; அதையும் விட்டு விட்டேன். இப்ப என்னப்பா பண்றது?'' என்றார் பாவேந்தர். அவர்கள் முன்னும் தெரியாமல் பின்னும் தெரியாமல் விழித்தனர். சிவா நாயக்கர் உடனே 'பொடி போடேன், என்று கூறி அவருக்கே உரிய சிரிப்பை ஒலித்தார். என்னைப் பார்த்து ''ஏம்பா அவர் தான் சொல்லிட்டாரே! அப்ரம் என்ன?' என்றார்.

உடனே நான் பொடி வாங்கி வந்தேன். சில தினங்களில் பொடி மேல் சட்டை மேல் விளையாடத் தொடங்கியது. 'இது மிக மிக மோசம். பொடி சட்டையெல்லாம் ஆகிவிடுகிறது' என்றேன். உடனே பொடி மட்டையைத் தூக்கி எறிந்தார். நான் ஓடி ஒரு காப்பி கொண்டுவந்தேன். பேசாமல் குடித்தார். யாருமே பேசவில்லை. என் மனதில் ஒரு திகில்.

அடுத்து சில தினங்கள் சென்றன. 'சுப்ரமண்யா! சுருட்டுப் பிடித்தால் வேண்டாம்; பீடி பிடித்தால் வேண்டாம்; பொடி போட்டால் வேண்டாம். இப்போ என்னப்பா பண்றது?' என்றார் பாவேந்தர். உடனே சிவா அவர்கள் 'சிகரெட்' என்று சொல்லிச் சிரித்தார்.

'இதாப்பா அவர் தான் சொல்லிட்டாரே!' என்று குலுங்கக் குலுங்கச் சிரித்தார். நான் ஓடிப்போய் சிகரெட் வாங்கி வந்தேன். 'கொஞ்சமாத்தான் பிடிப்பேன்' என்று சிவா நாயக்கரைப் பார்த்துக் கண்சிமிட்டினார் பாவேந்தர்.

சுருட்டு வேண்டாம் என்று சொன்னதும் விட்டது—பீடி, பொடியை விட்டது—என்னால் மறக்கவே முடியவில்லை. இந்தப் பழக்கங்களை நினைத்தவுடனே நிறுத்துவது யாருக்கும் எளிதான காரியம் அல்ல. பாவேந்தரின் மனத்திட்பமே நினைத்ததும் பழக்கத்தை விட முடிகிறது.

□

1936-ஆம் ஆண்டு. கவிதா மண்டலம் காரியாலயத்தில் ஒரு நாள் பச்சையப்ப உடையார், குயில் சிவா நாயக்கர், தம்புசாமி முதலியார், பேராசிரியர் பஞ்சாபிகேசய்யர் முதலியோர் அமர்ந்திருந்தனர். பஞ்சாபிகேசய்யர் 'தெலுங்கு சமஸ்கிருதம் போன்று தமிழில் கீர்த்தனைகள் பாடமுடியாது. அப்படி ஏதோ பாடினாலும் அவை தாளத்திற்கும் சங்கதி போட்டுப் பாடுவதற்கும் ஒத்து வராது' என்றார்.

'அது என்னப்பா அப்படிச் சொல்றான். தமிழில் ஏன் முடியாது? எவ்வளவு கடினமான தாளத்திலும் தமிழில் பாடமுடியும். லாவணியைச் சவுக்க தாளத்தில் பாடுவது கடினம்; பாட்டிலிருக்கிறது. இதோபார்' என்று

'ஸ்ரீமதி இவளார்' என்ற அவரது லாவணியைப் பாடிக் காட்டினார். 'உடையாரே தாளம் போடு' என்றார். அப்போது அவர் பாடியது தாளத்தில் எத்தகைய அபார ஞானம் அவருக்கு இருந்தது' என்பது வெளியாயிற்று.

தியாகராசர் கீர்த்தனைபோல் தமிழில் பாடமுடியாது என்று மறுபடியும் வற்புறுத்தினார் பேராசிரியர் .பேச்சு ஒருவாறு முடிந்து 12-மணிக்கு எல்லோரும் எழுந்தனர். கவிஞர் மட்டும் உட்கார்ந்திருந்தார். திடீரென்று 'சுப்ரமண்யா அவன் என்ன சொன்னான்? தியாகராசர் கீர்த்தனை போல் தமிழில் பாடமுடியாது. அது என்ன தியாகராசர் கீர்த்தனை? இங்கு ஏதாவது இருக்கா?" என்று கேட்டார்.

'இருக்கிறது' என்று சுதேசமித்திரன் வாரப் பத்திரிகையில் 'மொழிபெயர்ப்பும் இசையமைப்பும்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த பத்துத் தியாகய்யரின் கீர்த்தனைகளைக் கொடுத்தேன்.

சாப்பிட்டுவிட்டு வந்தவுடன் கவிஞர் எழுதினார். 'நிஜமர்ம முலயனு' என்ற தியாகய்யர் கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு தியாகராசருடைய முத்திரையுடன் எழுதினார். 'உடையாரே பாடு!' என்றார்; அவருடன் சேர்ந்தும் பாடினார்.

அவன் என்னமோ சொன்னானே 'சங்கதி, அதெல்லாம் போட்டுப் பாடு என்றார். அவரும் பாடி விட்டு, 'இந்தப் பாட்டு அற்புதம்! அற்புதம்!' என்றார். பத்துக்கீர்த்தனைகளை மொழிபெயர்த்துக் கவிதாமண்டலத்தில் வெளியிட்டோம்.

□

பாரதியைப் பற்றிப் பாவேந்தர் பேசத் தொடங்கினால், உண்மை இதயத்தின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கொண்டுவரும். மேடையேறிப் பேசும் போது யாருக்கும், எதற்கும் அஞ்சாமல் உண்மையை அப்படியே பேச வேண்டும் என்பது அவர் கொள்கை. அக்கொள்கையை அவர் அப்படியேகடைப்பிடித்ததோடு,எனக்கும் அதே கொள்கையை ஆலோசனையாகவும், எச்சரிக்கையாகவும் வழங்கினார்.

1937 ஆம் ஆண்டு புதுச்சேரி தொழிலாளர் இயக்கத்தின் வேகமான நாட்கள், அப்போது என் பேச்சில் சூடு அதிகம் என்பார்கள். தூவ்போ வீதியும் மகாத்மா காந்தி வீதியும் சந்திக்கும் முனையில் அந்த நாளில் ஒரு வெற்றிலைபாக்குக்கடை இருந்தது. அதன் சொந்தக்காரர் சந்திரன் என்பவர். அந்தப் பெட்டிக்கடைதான் பாவேந்தரும் அவர் நண்பர்களும் சந்திக்கும் அரசியல் தலைமையகம்.

வாத்தியார் வந்துவிட்டால் எத்தனை மணி நேரமானாலும் சந்திரன் இருக்கையில் அமரமாட்டார். பாவேந்தர் மேல் அவருக்கு அப்படி ஒரு பக்தி. பாவேந்தர் பள்ளிப் பணியை முடித்துக்கொண்டு நேரே வீட்டுக்குப் போக மாட்டார். அந்த வெற்றிலைபாக்குக் கடையில் வந்து உட்கார்ந்து, நடப்பு அரசியலைப்பற்றிய விவகாரங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருப்பார். அவருடைய அரசியல் நண்பர்கள் செய்திகளைத் தாங்கிவரும் புறாக்களைப் போல் தொப்புத் தொப்பென்று அவ்விடத்தில் தோன்றுவார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்கும் செய்திக்குத் தக்கவாறு சிலிர்த்துக் கொள்வார்கள்.

பாவேந்தர் அத்தகையவர்களைப் பார்த்து 'என்ன ஆசாரி சிலுத்துக்குது! என்ன விஷயம்?' என்பார்,

'அவன் என்ன நினைச்சுக்கினு இருக்கான் தெரியிலெ' என்பார் ஆசாரி.

'அவன்! இன்றைய யார் அவன்?'
என்று தமக்கே உரிய பாணியில் கேட்பார் பாவேந்தர்.

'நல்ல காலம். கையிலே அப்போ *பரங்கு, இல்ல. இருந்தா தம்பி இந்நேரம் ‡பெள்ளவாரிக்கு போயிருப்பார்'—இது ஆசாரியின் பதில்.

பாவேந்தர் 'அட! என்னப்பா இவன் யாருன்னு சொல்ல மாட்டேன்கிறான்!' என்று மடக்கி எதிரி முகாமின் உள் நடப்புச் செய்திகள் பலவற்றை அவர்கள் வாயிலாகத் தெரிந்து கொள்வார்.

* பரங்கு—குத்துவாள் ‡. புதுச்சேரி சுடுகாடு.

அந்தக்கடையில் அவர் ஒருநாள் அரசியல் விசாரணை யில் ஈடுபட்டிருந்தபோது நான் ஒரு பொதுக்கூட்டத் திற்குப் போவதற்காக அவ்வழியே நடந்து சென்றேன். என்னுடன் ஒரு சிறு கும்பல் வந்து கொண்டிருந்தது; கவிஞரைக் கண்டதும் கூட்டத்தை ஒதுக்கி விட்டு நான் அருகில் சென்று எனது வணக்கத்தைச் சொன்னேன். 'கூட்டத்திற்குப் போகிறேன்' என்றேன்.

'ஊம் போபோ! நல்லாப் பேசறீன்னு சொன்னாங்க. நல்லாப் பேசுப்பா! நீ சொல்றதைத்தா ஜனங்க கேட் பாங்க. அந்த வெண்டைக்கா முதலி எல்லாம் இலக் கணத்தோட வெகு நல்லாத்தான் பேசுவாங்க. ஆனால், ஜனங்க கேட்க மாட்டாங்க.

ஏன் தெரியுமா? நீ உன்மையைப் பேசற ஒன்னு சொல் றேன்உனக்கு! மேடையில ஏறிஞ உண்மையே பேசு. ஏன் தெரியுமா? உன்னிடம் படிப்பில்லே— பணமு மில்லே. அவனெல்லாம் படிப்பால தப்பிச்சுக்குவான். மற்றவன் பணத்தால் தப்பிச்சுக்குவான். நீ உண்மை யாலதான் நிலேக்கணும்' என்றார் பாவேந்தர்.

இன்னும் அந்தச் சொற்கள் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இது நட்ட நடுத்தெருவில், ஒரு கும்பலே வைத்துக் கொண்டு அவர் எனக்கு இட்ட கட்டளை என்றே சொல்லுவேன். அவரது கொள்கை மேடையேறிப் பேசும் போது உள்ளத்தை அப்படியே கொட்டுவது.

□

1940 ஆம் ஆண்டு, 18 மாதங்கள் சிறையில் கழித்து விட்டு, நான் விடுதலேபெற்று வெளியேறிய நேரம். விடு தலே பெற்று வெளியில் வந்ததும், அன்று மாலே பாவேந்தரைப் பார்ப்பதற்காகச் சென்றேன். மிஷன் வீதியில் மயிலம் மடத்துக்கு எதிரில் முனேப் பங்களா வீட்டில்பாவேந்தர் குடியிருந்தார்; என்னேக் கண்டதும் துள்ளி வந்து கைகளேப் பிடித்து வரவேற்றார்.

'சிறையில் உனக்கு அதிகத் தொந்தரவு கொடுத்தார் களாமே!'' என்றெல்லாம் விசாரித்துத் தமது உள்ளக் குழைவினே உணர வைத்தார். சிறையில் இருக்கும் போது, வெளியிலிருந்து வரும் செய்திகள் பலவாறுகக்

கூட்டியும் குறைத்தும், வேறு வடிவம் பெற்றும்வரும். அவ்வாறு வந்த செய்திகளில் ஒன்று, திருவாளர் செல்லன் நாயக்கர் அவர்கள் எங்கள் இயக்கத்துக்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்தார் என்பது. நான் பொதுக்கூட்டங்களில் வழக்கறிஞர்களைத் தாக்கிப் பேசிய காரணத்தால், என் மீது சுமத்தப்பட்ட எந்த வழக்குக்கும், எந்த வழக்கறிஞரும் ஆஜர் ஆகக்கூடாது என்று வழக்கறிஞர்கள் மன்றத்தில் ஸ்ரீமான் நாயக்கர் கூறினர் என்பதே அச்செய்தி. அதைப் பற்றியும், அம் மன்றத்தின் முடிவினை மீறி ஸ்ரீமான் சவரிநாதன் என்ற வழக்கறிஞர் எனக்காகப் பேச முன் வந்தது பற்றியும், இன்னும் வேறுபல செய்திகள் பற்றியும் நானும் பாவேந்தரும் நெடுநேரம் வரையில் பேசிக் கொண்டிருந்தோம்.

''நீங்கள் கூடச் செல்லன் நாய்க்கரை ஆதரித்ததாகச் சிறைக்குள் செய்தி அடிப்பட்டது'' என்று நான் பாவேந்தரைப் பார்த்துக் கூறினேன். அவர் மீது இப்படி யாராவது சொன்னல், அதை எப்போதும் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டார். அத்தகைய கட்டுக் கதைகளின் கர்த்தா யாரென்று யூகித்துக் கொண்டு 'இது அவன் வேலை' என்று மட்டும் சொல்வார். இது என்னைப்பற்றிய விவகாரமாதலால் வழக்கத்துக்கு மாருகப் பதட்டம் கொண்டார்.

''எவன் சொன்னன்? செருப்பால் அடி! ஏம்பா! இதோ ஒன்றரை வருடம் சிறையில் கழித்து வந்து நிக்கற உனக்குப் பாதகமாய் பேசறவனேட நான் ஒத்து இருப்பேனு? அந்தச் செல்லான் நாய்க்கர் ஒண்ணும் பூதமல்ல. ஒரு வேளை அவர் ஆட்சிக்கே வந்துட்டா, அந்த ஆட்சியை 24 மணி நேரத்தில் கீழே இறக்கி விட எங்கிட்ட சரக்கிருக்குது'' என்று ஆவேசப்பட்டுப் பேசினர் பாவேந்தர்.

பிறகு சில தினங்கள் கழித்துக் கூப்பிட்டனுப்பினர். சினிமாவுக்குப் பாட்டெழுத ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. டி.கே. சண்முகம் கம்பெனியார் படம் எடுக்கிருர்கள். நீ வரியா? வாயேன். இவ்வளவு நாள் சிறையில் கிடந்தையே! வா போயிட்டு வருவோம்'' என்ருர்; சரி என்றேன். அடுத்த இரண்டு தினத்தில் புறப்பட்டோம்.

ஈரோட்டில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. பாட்டெழுத வேண்டியபடம் 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்! பெரியாருடைய வீட்டில் தான் பத்துப் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தோம்.

பலதினங்கள் காலை எழுந்தவுடன் பெரியாரைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் ஊரில் இல்லாத நாட்களில் தான் பார்க்கமுடியாது. பெரிய வாசலில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து, அவரது பற்களைக் கழற்றிச் சுத்தம் செய்து கொண்டிருப்பார்; மிகவும் சுறு சுறுப்பாக இருப்பார்.

''வாங்க வாங்க! வாங்க ஐயா! நல்லா தூக்கம் வந்துதா? ஒன்னும் அசௌகரியமில்லையே! படம் புடிக்கறுங்களா?'' என்று பரிவோடு பாவேந்தரை விசாரிப்பார் பெரியார். பிறகு தமது தங்கையை அழைத்து 'ஐயா பாரதிதாசன் வந்திருக்காங்க' என்பார். பாவேந்தரும் யாரிடத்திலும் காட்டாத அடக்கத்தோடும் மரியாதையோடும் நடந்து கொள்வார். மற்றவர் யாரானாலும் பாவேந்தர்தான் முன்னே பேசுவார். பெரியார் ஒருவரிடம் மட்டுந்தான்—அவர் பேசட்டும் என்று பௌவியத்தோடு காத்திருப்பார். பெரிய குடும்பத்தில் தந்தையாரிடம் சிறு பிள்ளைகள் பேசும்போது, அன்பும் பாசமும் பக்தியும் கொந்தளிக்குமே அம்மாதிரி இருக்கும்.

இலை போடுவார்கள். பெரியார் 'உக்காருங்கோ! உக்காருங்கோ!' என்பார். ஒன்றும் பேசாமல் சாப்பிடுவோம். காலை ஆறு மணிக்கே எங்கள் காலைச் சிற்றுண்டி ஏற்பாடு செயயப்படும். பாவேந்தர் இரவில் எவ்வளவு நேரம் விழித்திருந்தாலும், எழுவது மட்டும் அதிகாலையில் எழுந்து விடுவார். காலையில்தான் மிகத் தெளிவாக இருப்பார். எதையும் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டே இருப்பார். சில சமயங்களில் படுக்கையிலே உட்கார்ந்து கொண்டு தலையணை ஒன்றை முன்பக்கம் வைத்துக் கொள்வார். எதையோ நோக்கிக் கொண்டிருப்பார். பேசுவதில் கூடத் தனி மகிழ்ச்சி தென்படும். பாட்டெழுதுவதும் கூடக் காலையில்தான். இவ்விடத்தில் பாவேந்தரைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

புதுச்சேரி அரசியலில் அவரது திறமையான எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத பொருமைக்காரர்களும், அவரது தமிழ்வாள் வீச்சின்முன் நிற்க முடியாதவர்களும் அவரைக் கொள்கை ரீதியில் எதிர்க்க முடியாமல் அவர் குடிக்கின்ருர் என்ற குற்றச்சாட்டைத் தொடங்குவார்கள். அவ்வாறு பாவேந்தரைக் குறை கூறுபவர்களுள் பலர் பீப்பாய்க் குடியர்கள். அவர் காலத்துப் புதுச்சேரி அரசியல் தலைவர்கள் எல்லாரும் குடிப்பவர்கள் தாம். புதுச்சேரி மண்ணில் குடியின்வேர் ஆழமாக ஊன்றிக் கிடக்கின்றது மன்ருேரம் சொன்ஞர் மனையில் வேதாளம் சேரும்; வெள்ளெருக்குப் பூக்கும் என்பார்கள். குடிவேர் விட்ட வீடும் குட்டிச்சுவராகிக் கிடக்கும் என்பதற்குப் பல சான்றுகள் புதுச்சேரி நகரத்தைச்சுற்றிக்கிடைக்கும்.

பாவேந்தரின் அரசியல் பகைவர்கள் 'அவர் குடிக்கிருர்; குடித்தால் தான் பாட்டெழுதுவார்; அவர் குடிப்பதற்கு அளவேயில்லை!' என்றெல்லாம் பேசுவது வழக்கம். நான் பாவேந்தரை அருகிருந்து நீண்ட நாள் பார்த்தவன். அவர் சில சமயங்களில் குடிப்பதுண்டு. தினமும் குடித்தாக வேண்டும் என்ற நிலை அவருக்குக் கிடையாது.

குடித்து விட்டுப் பாட்டெழுதும் பழக்கம் அவரிடத்தில் இல்லை. ''சீச்சீ! குடித்துவிட்டுப் பாட்டெழுதுவதா?'' என்று ஒருமுறையன்று, பல முறை பாவேந்தர் கூறியிருக்கிருர்.

கண்ணதாசன், கம்பதாசன் போன்ற கவிஞர்கள் Mood உண்டாகக் குடிப்பதாகச் சொல்லியிருக்கிருர்கள். பாவேந்தருக்குப் பாட்டெழுத அவ்வித Mood ஒன்றும் வேண்டுவதில்லை.

எழுதத் தொடங்கிஞல் கையில் உள்ள சிகரெட் வாய்க்குப் போகாது. கொளுத்திய சிகரெட் ஒரு தடவை ஊதியது, மறுதடவை ஊதாமல் அப்படியேகையிலேயே சாம்பலானதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர் எழுத்து தெளிவான உணர்விலிருந்து வருவது. நமக்கு நடக்கப் போகும் நிகழ்ச்சி அவருக்கு எப்போதோ உணர்வில் தோன்றிவிடுகிறது.

'வார்த்தைகள் அவரிடம் கைகட்டி நிற்கும்' என்று வ.ரா. சொல்லுவார். உணர்வும் அப்படித்தான்.

சில கவிஞர்களுக்கு உணர்ச்சி தள்ளுவண்டி போன்றது. பீடி, சிகரெட், சாராயம், கஞ்சா ஆகியவற்றைப் போட்டால் தான் அவர்கள் கவிதை வண்டி நகரும்.

சிலர் சூழ்நிலையைத் தயாரித்து எப்போதும் தங்களை அதில் வைத்துக் கொண்டிருந்தனர். தாகூரும், மேலை நாட்டுக் கவிஞர் சிலரும் அப்படித்தான். ஆனால் பாரதி தாசன் முற்றிலும் மாறுபட்டவர். அவர் எப்போதும் தெளிந்த உணர்வு நிலையிலேயே இருப்பார். இன்னும் அவருடைய சொற்களால் சொன்னால் 'நடைப்பிணங் கள் மத்தியிலே, வறுமையென்னும் தொல்லையிலே' அவர் தமது உணர்வை மங்கவிட்டதில்லை; கற்பனை யைத் தேடி அலைந்ததில்லை.

காலைப் பத்திரிகை வந்தது. 'குவட்டாவில் பூகம்பம்' என்ற முழுத்தலைப்பு முன்பக்கத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. சென்னை ஆரிய சமாஜத் தலைவர் பண்டிட் ஞானி என்பவர் பூகம்பத்தால் இறந்து போனார் என்ற செய்தியும் வெளியாகியிருந்தது. 'இந்த ஞானி இருக்கானே ரொம்ப நல்லவன்' எனக்கு ரொம்பவேண் டியவன்' என்றார் பாவேந்தர்.

'இந்த மாதம் கவிதா மண்டலத்துக்குக் குவட்டா பூகம்பமே தலையங்கமாக இருக்கலாம்' என்று கூறி னேன் நான்.

காலை ஏழு மணிக்கு பத்திரிகை அலுவலகத்திலேயே உட்கார்ந்து எழுதினார். அவர் எழுதத் தொடங்கினால் அடித்தல் திருத்தல் ஒன்றும் இருக்காது. முடித்த கவி தையை 'இந்தா' என்று மெதுவாகத் தூக்கி எறிவார்; பிறகு அதைப் பார்க்க மாட்டார்.

அந்தக் குவட்டா கவிதையில் ஓர் உவமை—'பானை வெடிக்கையிலே பருக்கை தப்புவதுண்டோ?'. உலகக் கவிஞர்களுள் எவரும் கையாளாத உவமை இது. அவ ருக்கே சொந்தமான, இரவல் வாங்காத, தழுவல் இல் லாத கற்பனை!

பாவேந்தரின் கற்பனைகளும், உவமைகளும் மிக அற்புத மானவை. அவற்றைச் சுவைத்து மகிழ்வதை விட்டு விட்டு, அவருடைய சொந்தப் பலஹீனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுபவர்கள் அறிவில்லாதவர்கள். ஒரு கவிஞனின் தனிப்பட்ட வாழ்க்கையையும் அவன் படைப்பையும் ஒப்பிட்டுப் பேசுவது பொருத்தமற்றது. குயிலின் தோற்றத்துக்கும் அதன் குரலுக்கும் என்ன சம்பந்தம்? கவிஞனைக் காணத் தெரியாத கபோதிகள், தங்களுடைய கையாலாகாத் தனத்தை, அவர்மீதுபுழுதிவாரி இறைத்து மெய்ப்பித்துக் கொள்கிறார்கள்.

□

இனி ஈரோட்டில் திரு.டி.கே. சண்முகத்தின் ஒத்திகைச் சாலைக்குச் செல்வோம். கதையில் எந்தெந்த இடங்களில் பாட்டு வேண்டும் என்று ஷண்முகம் சொல்வார்; மெட்டையும் பாடிக் காட்டுவார்.

ஐந்தே நிமிடங்களில் பாட்டு தயாராகிவிடும். டி. கே. எஸ் மகிழ்ச்சியில் திகைத்து நிற்பார். ஒத்திகையின் போது பாட்டின் அழகுதான் எல்லாருடைய வாயிலும் அடிபடும்.

பாரதிதாசன் சினிமாவுக்குப் பாட்டெழுதுவது அதுதான் முதல் தடவை. ஒரு நாள் படம் எடுக்கும் காட்சியைப் பார்க்க என்னை அழைத்துப் போனார். அடிபட்ட ஒருவர் ஆற்றில் உருண்டுவரும் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தனர். அக்காட்சியில் நடித்தவர் திரு. சகஸ்ரநாமம். அவருக்கும் அதுதான் முதற்படம். அவரது நடிப்பைப் பாவேந்தர் மிகவும் பாராட்டினார்.

அந்தப் படத்தின் இயக்குநர் திரு. ராவ் என்பவர்; நல்ல திறமை வாய்ந்தவர். ஒத்திகையின் போது அவர் நடித்துக் காட்டியதைக் கவிஞர் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். திரு. ராவ் ஒரு நல்ல குடியர். ஒத்திகையில் ஐந்து நிமிடத்துக்கு ஒருமுறை உள்ளே போய் ஒரு கோப்பை குடித்துவிட்டு. வருவார். பாரதிதாசனுக்கு அதைப் பொறுக்க முடியவில்லை. 'என்னப்பா இவன் இப்படிக் குடிக்கிறான்?' என்று அவர் எதிரிலேயே கூறினார்.

ஏதோ ஓர் இரண்டாந்தர நடிகை தனக்குப் படத்தில்

பாட்டுவேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். பாவேந்தர் 'இந்தப் பெண்ணுக்குப் பாட்டு நன்ருயிருக்காது' என்ருர்.

'உண்மைதான்! என்ன செய்வது? இந்த டைரக்டரின் பரிவு அவளுக்கு அதிகம்; அதனுல் பிடிவாதம் செய்கிருள். நீங்கள் பாட்டை எழுதிக் கொடுத்து விடுங்கள்' என்ருர் டி.கே. சண்முகம்.

'அப்போ, படம் கண்ருவியா இருக்கும்' என்ருர் பாவேந்தர்.

அந்தப் பாட்டைப் பின்னுல் வெட்டி விட்டால் போகிறது. அவசியமானுல் அவள் சம்பந்தப்பட்ட காட்சி முழுவதையுமே வெட்டிவிட வேண்டியது தான்'' என்ருர் சண்முகம்.

அதைக் கேட்டதும் மனத்தில் சிறிது வேதனை அடைந்தார் பாவேந்தர். ''பார்த்தியா சினிமா உலகம் எப்படியிருக்கிறது? எவ்வளவு செலவழித்துப் படம் எடுக்கிருன்! பின்னர் முழுவதையும் வெட்டி விடலாம் என்கிருனே! எத்தனை ஊதாரித்தனம்'' என்று கூறி வருந்தினுர்.

ஒரு நாள் பாரதிதாசன் அவர்களிடம் ஐம்பது ரூபாய் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்டு நானும் அவரும் தனியே உலாவப்போனேம். 'பார்த்தியாப்பா! தமிழுக்கு எவ்வளவு நல்லகாலம்! ஐம்பதுரூபாய் கொடுக்கருனே!'' என்ருர்.

''நன்ருய்ச் சொன்னீர்கள். அவர்கள் ரூபாய்500/= கொடுத்திருப்பார்கள். உங்கள் கைக்கு வரும்போது அது ஐம்பதாகிவிட்டது. அதற்கே நீங்கள் இவ்வளவு சந்தோஷப் படுகிறீர்கள்'' என்று நான் சொன்னேன்.

''சே!சே! அப்படியெல்லாம் இருக்காது—பாவேந்தருக்கும் படக்கம்பெனிக்கும் தொடர்பு ஏற்படுத்திய நபரின் பெயரைச் சொல்லி—அவன் அப்படியெல்லாம் செய்ய மாட்டான்'' என்ருர்.

சில மாதங்கள் கழித்து ஒரு நாள் ''சுப்ரமணியம்! நீ சொன்னது சரி. அந்தப் படக்கம்பெனியிலிருந்து பாட்டுக்காக அவன் ரூ500/= தான் வாங்கியிருக்கான். நம்ம கிட்ட ஐம்பதுதான் கொடுத்தான்'' என்றார் பாவேந்தர்.

□

1935-ஆம் ஆண்டில் ஒருநாள் திடீரென்று 'எழுத வேண்டும்' என்றார் பாவேந்தர். காகிதம் எழுதுகோல் கொண்டுபோய் வைத்தேன். எழுதிக்கொண்டே இருந்தார்; மதியம் உணவுக்குக்கூட எழுந்திருக்கவில்லை. சுமார் மூன்று மணிக்கு முடித்தார். ஓர் அழகான சிறுகதை உருவாகியிருந்தது.

''இதை ஆனந்த விகடனுக்கு அனுப்பு'' என்றார்; அனுப்பி வைத்தேன்.

''அவன் அதை ஏதாவது போட்டானா?'' என்று வாரா வாரம் விசாரிப்பார் இரண்டுவாரங்கள் கழிந்தன. ''அவன் அதைப்போடவில்லையென்றால் திருப்பி அனுப்பி விடச்சொல்லி எழுது'' என்றார்; அப்படியே எழுதினேன். மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதமும் எழுதினேன். ஆனந்தவிகடனிடமிருந்து பதில்ஏதுமில்லை. அக்கதையை வெளியிடவுமில்லை. அதை நினைக்கும் போதெல்லாம் பாவேந்தருக்குக் கோபம் வரும். ''ஏன் இப்படிச் செய்யறானுங்க! பாரதியார் எழுத்தை இப்படித் தான் பாழடித்தானுங்க!'' என்பார் அவர்.

ஒரு வருடத்துக்குப் பின்னால் ஒரு நாள் காரசாரமாக ஆனந்த விகடனுக்கு ஒரு கடிதம் எழுதி, அவரே கைப்பட முகவரியும் எழுதி என்னிடம் கொடுத்து 'இதை அனுப்பு' என்றார்; அனுப்பி வைத்தேன். ஒன்றிற்கும் பதில் இல்லை. பல வருடங்களுக்குப்பின்னால் கூட அதே நினைவுதான். அது அழகுணர்ச்சியோடு எழுதப்பட்ட காதல் கதை; ரோமியோ ஜூலியட் கதை போன்றது. காதலி புதைக்கப்பட்டதற்குப் பின்னால் காதலன் சமாதிக்கு வந்து கதறுவதும், தோண்டிப்பார்ப்பதும் அதன்பின் அந்த அழுகல் சகதக்கா, சீழுக்கா ஆசை வைத்திருந்தேன் என்று விரக்தியடைவதும் போன்ற கருத்துக்கொண்ட கதை. அற்புதமான வசனங்கள்.

ஆனந்த விகடனும் வெளியிடாமல் மற்றவர்க்கும் பயன் படாமல் போயிற்று ஓர் அழகுக் கதை.

□

புதுச்சேரியில் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் திருப்புளிசாமி ஐயா என்பவர் பெரிய தமிழ்ப் புலவர். பாவேந்தர் அவரிடம் தமிழ் பயின்றார். திருப்புளி சாமி ஐயாவின் மகன் கிருஷ்ணமூர்த்தி என் வகுப்புத் தோழன். பள்ளியை விட்டவுடன் அவன் சென்னைச் சித்திரச்சாலையில் சேர்ந்து நல்ல தேர்ச்சி பெற்றான்; சிலை வடிக்கும் கலையில் தனித்திறமை பெற்றான்.

"தலைப்பாகை இல்லாமல் பாரதியார் எப்படியிருப்பார்?" என்று நான் கேட்ட போது, "தலை வழுக்கையுடன், முண்டாசு இல்லாத பாரதி மிகவும் அழகாயிருப்பார். பாரதி முண்டாசு அணிந்ததே தலை வழுக்கையை மறைக்கத்தான்" என்றார் பாவேந்தர். அத்தகைய தோற்றத்தில் பாரதியின் உருவச்சிலை ஒன்றை அமைத்து விடவேண்டும் என்று எங்களுக்கு ஓர் ஆசை பிறந்தது.

ரூ500/= திரட்டிக் கிருஷ்ணமூர்த்திக்கு முன் பணம் கொடுத்தோம். சிலை வடிக்கும் பணி துவங்கியது. பாவேந்தர் காலையும் மாலையும் கிருஷ்ணமூர்த்தி வீட்டுக்குப் போவார். சிலையின் முன்னேற்றத்தை மிகவும் அக்கறையோடு கவனிப்பார்; ஏதாவது மாறுதல் வேண்டுமென்றால் கூறுவார்.

பாரதியின் வழுக்கைத்தலைக்கு ஒரு 'மாதிரி' (Model) தேவைப்பட்டது. பாவேந்தரின் நண்பர் குயில் சிவாவின் அண்ணன் திரு. சிவக்கொழுந்து நாய்க்கரின் தலை ஏறக்குறைய பாரதியார் தலை மாதிரிதான் இருக்கும் என்று கூறினார் கவிஞர். 'வா. அவரிடம் போவோம்' என்றார் கிருஷ்ணமூர்த்தி. கிருஷ்ணமூர்த்தி, பாவேந்தர், நான் ஆகிய மூவரும் சிவக்கொழுந்து நாய்க்கர் வீட்டுக்குப் போனோம். வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த சிவக்கொழுந்து நாயக்கர் பாவேந்தரை வரவேற்றார். மூவரும் எதிர்த் திண்ணையில் அமர்ந்தோம்.

பாவேந்தர், "அண்ணே! இந்தத் தம்பி (கிருஷ்ண மூர்த்தியைக் காட்டி) திருப்புளிசாமி வாத்தியார் இருந் தாரே அவர் மகன்; சிலை செய்வதில் மிகக்கெட்டிக் காரன்; பாரதியார் சிலையைச் செய்துகிட்டிருக்கான். செத்த கொஞ்ச திரும்பேன்; தலையை மட்டும் காட் டேன்; வேறெதையும் காட்டாதே! (நகைத்தல்) உன் தலை பாரதியார் தலையாட்டம் இருக்குதாம்." என்றார். நாய்க்கர் சிரித்துக் கொண்டே திரும்பி உட்கார்ந்தார். கிருஷ்ண மூர்த்தி சில நிமிடங்களில் அவரது தலையின் வழுக்கைப் பகுதியை மிக அழகாகப் படம் பிடித்தது போல் எழுதிவிட்டான்.

சுமார் இரண்டு மாதங்கள் தினமும் காலையில் பள்ளிக் கூடம் போகும்போதும் 11-30க்குப் பள்ளிவிட்டுத்திரும்பி வரும் போதும் சிலையைப் பார்ப்பார். அந்தச் சிலையை உருவாக்குவதில், கவிதை எழுதும்போது சிகரெட் கூட ஊதாமல் எப்படி உணர்ச்சியின் உருவாய் இருப்பாரோ, அவ்வித உணர்வோடு இருப்பார். வேறு எதிலும் அவ்வித அக்கறை காட்டியதை நான் கண்டதில்லை.

சிலைப்பணி நடந்து கொண்டிருந்த போது எனக்கு மூன்றாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 18 மாதங்கள் சிறையில கழித்துவிட்டு நான் வெளியே வந்தபோது, அந்தச் சிலையைச் சக்தி கோவிந்தன் அவர்களுக்கு விற்று விட்டதாகக் கூறினார்கள். நான் வேதனைக் கடலில் ஆழ்ந்தேன். பாவேந்தரும் இவ்வளவு சிரமப்பட்டு உருவாக்கியது போய்விட்டதே என்று அங்கலாய்த்தார்.

அண்மையில் விசாரித்ததில் சிலை சக்தி கோவிந்தன் அவர்கள் வீட்டில் இல்லை என்று தெரிந்தது. காரைக் குடியில் யார் வீட்டிலோ பாரதியார் என்று தெரியாமல் ஓர் அலங்காரப் பொருளாக அது இருக்கும் என்று நினைக்கிறேன்.

□

புதுச்சேரித் தொழிலாளர் இயக்கத்தைத் தொடக்கத்தி லிருந்து பாரதிதாசன் ஆதரித்து வந்தார். ஆலைத் தொழிலாளர்கள் பலர் திராவிடர்க் கழகத்தைச் சேர்ந்த

வர்கள். கைத்தறி நெசவாளர்கள் பலர் திராவிடர்க் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ரோடியர் மில் தொழிலாளர் களின் தலைவர் திரு. சுந்தரராசு உறுதிமிக்க திராவிடர்க் கழகத்தவர். அரங்கேசன் என்பவரும் அப்படித்தான். திரு. அரங்கேசன் அடிக்கடி பாவேந்தரைச் சந்தித்து இயக்க நிலைமையை எடுத்துக் கூறுவார். தொழிலாளர் இயக்கத்தை எதிர்த்து வந்தவர்களைப் பாவேந்தர் பல வருடங்களாக எதிர்த்து வந்திருக்கிறார். நாங்கள் இளை ஞர்கள்; அனுபவமில்லாதவர்கள் நாங்கள் எங்கு ஏமாந்து விடுவோமோ என்ற கவலை அவருக்குண்டு.

அந்நாளையத் தொழிலாளர் இயக்கத்தின் குறிக்கோள் தொழிற் சங்கம் அமைத்துக் கொள்ள உரிமைகோருவது தான். தொழிற் சங்கம் அமைக்க முன் வருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் தண்டனை கிடைக்கும் வகையான சட்ட அமைப்பு அன்றையப் புதுவை அரசியலில் இருந்தது. அந்தச் சட்டத்தை எதிர்த்து, மீறித் தொழி லாளர் ஒன்றுபட்டு அப்போது போராட்டம் நடத்தினர். 1936ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் தேதி உள்ளி ருப்பு வேலைநிறுத்தம் நடத்திக் கொண்டிருந்த தொழி லாளர் மீது,வெளியிலிருந்த போலீசார் யந்திரத்துப்பாக் கியால் சுட்டனர். அத்துப்பாக்கிச் சூட்டில் 15பேர்கள் உயிரிழந்தனர். ஆலையும் தீப்பற்றி எரிந்தது. மக்களும் தொழிலாளர்களும் கொதிப்பான மனநிலையில் இருந்த னர். டிசம்பர் மாதத்தில் தாவீது என்பவர் சுடப்பட்டார் அரசியல் கண்ணோட்டத்தில் அந்நிலையில் தோழர் வ.சுப்பையாவும், வழக்கறிஞர் சவரிநாதனும் தொழி லாளர் சார்பில், பாரிஸ் சென்று பிரான்ஸ் நாட்டு அமைச்சரவையை அணுகினர்.

இவர்கள் பாரிஸ் சென்று திரும்பியதன் பயனாகப் புதுவைக்குத் தொழிற்சங்க உரிமைகள் கிடைத்தன. பிரான்ஸ் நாட்டு முன்னேற்றமான தொழிற் சட்டங் களும் இங்கு அமுல் படுத்தப்பட்டன. மேற்படி சட்டங் களின் நகல் ஒன்றைத் திரு. சுப்பையா பாரிஸிலிருந்து அனுப்பி வைத்தார். பிரெஞ்சு மொழியில் இருந்த அதனைப் புதுவைத் தொழிலாளர்கள் புரிந்து கொள்ள ஆவல் கொண்டனர். அப்போது இரவு பகலாகக் கண் விழித்துப் பாவேந்தர் அதனைத் தமிழாக்கிக் கொடுத் தார். இப்பணியில் திருவாளர் ராமாநுஜம், வாத்தியார்

கண்ணுசாமி ஆகியோர் உடனிருந்து உதவி புரிந்தனர். சட்டத்தைத் தமிழில் செய்தால் அது வறட்டுப் பாறை யாகஇருக்கும். ஆனால் பாரதிதாசன் தமிழாக்கம் செய்த தால்அது தனிச்சுவையோடு இருந்தது என்பேன். அரும் பாடுபட்டுக் கிடைத்த அந்த உரிமையை மக்களுக்கு வழங்குவதில் அவருக்கு அளவிலாத மகிழ்ச்சி.

பாரீஸ் பயணம் முடித்துத் திரு. சுப்பையா ஜூலை மாதத்தில் புதுவை திரும்பினார். அப்போது ஓர் அற்புத மான வரவேற்புக் கவிதை எழுதித் தந்தார் பாவேந்தர். ''அழிவார்கள் என்றிருந்த அந்த நிலைமாற்றித் தொழி லாளர் என்ற நிலைக்குக் கொண்டுவந்தாய்'' என்பது அப்பாட்டில் ஒரு வரி. அவரது உள்ளப் பூரிப்பை அந்த வரவேற்பில் காண முடிந்தது.

சக்தி வாய்ந்த போராட்டமும், அதனை அடக்க அரசு எடுத்த கடுமையான அடக்குமுறையும், துப்பாக்கிச் சூடும், மக்களின் மகத்தான தியாகமும் சிறிய புதுச் சேரியில் புதிய புரட்சிச் சூழ்நிலையை உருவாக்கின. ஆளுங்கட்சியினர் இராஜிநாமா செய்யவேண்டும் என்று புதுவை மக்கள் கோரிக்கை விட்டனர். ஆயிரம் சைக்கிள் களில் இளைஞர்கள் ஒவ்வொரு சட்டசபை உறுப்பினர் வீட்டுக்கும் போய் இராஜிநாமா கேட்டனர். என்ன நடக்குமோ? துப்பாக்கிச் சூடு நடக்குமோ? என்று மக்கள் அச்சமும் பீதியும் கொண்டவர்களாய் இருந் தாலும், அதே நேரத்தில் இராஜிநாமாவைப் பெற்றாக வேண்டும் என்ற உறுதியும் கொண்டிருந்தனர்.

ஊர்வலம் நடந்த மறுதினம் மகாஜனக் கட்சியின் நிர் வாகக்குழு திவான் கந்தப்ப முதலியார் வீதியில் உள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் கூடியது. முப்பது சட்டசபை உறுப்பினர்களின் இராஜிநாமாக் கடிதம் தோழர் சுப்பையா கைக்கு வந்தது. பாவேந்த ரின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. கூட்டத்தில் அவரால் உட்கார முடியவில்லை.

எழுந்து நின்றார். ''எத்தனை வருஷமா? எத்தனை வருஷமா? என்னென்ன பாடுபட்டிருப்போம். அதில் எல்லாம் ஒன்றும் வரவில்லை. இதோ பாத்தியா!'' என்று தோழர் சுப்பையாவின் கையில் இருந்த இராஜி

தாமாகக் கடிதங்களை வாங்கிக் கூட்டத்துக்குக்காட்டினார். மகிழ்ச்சியால் கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டே பேசினார். அதுபோல் அவர் தம்மை மறந்து மகிழ்ச்சியில் கூத்தாடியதை வேறு எங்கும் யாரும் பார்த்திருக்க முடியாது. அதைத் தமது சொந்த அரசியல் வெற்றியாகவே பாவித்து மகிழ்ந்தார் பாவேந்தர்.

□

1958-என்று நினைக்கிறேன். பூமிதான யாத்திரை செய்து கொண்டிருந்தேன். எங்கள் யாத்திரை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ வழியாகச் சென்றது. பாரதிதாசன் உள்ளே இருக்கிறார் என்று யாரோ வந்து கூறினார்கள். மற்றவர்களை அனுப்பிவிட்டு நான் உள்ளே போனேன். ஒரு பெரிய கூடம்—அதில் உயர்ந்த ரகக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நான்கு அல்லது ஐந்து பேருடன் பாவேந்தர் உரையாடிக் கொண்டிருந்தார். எதிரே வெள்ளி நாணயங்களும் நோட்டுகளுமாக ஒரு சிறு குவியல் கிடந்தது. வழக்கம் போல் விரல்களை மடக்கியபடி சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்தார். நான் எதிரேபோய் 'வணக்கம்' என்றேன். ஏற இறங்க என்னைப் பார்த்தார்.

'வாப்பா! உட்கார்! எப்போ வந்தே? என்ன துணியெல் லாம் இப்படி?' (அப்போது காலை முதல் நடந்ததால் துணியெல்லாம் செம்மண் படிந்திருந்தது.) என்று கேட்டார். நான் களைப்பாகவும் இருந்தேன். குளிர்ந்த பானம் கொண்டு வரச் சொல்லி கனிவோடு 'குடி குடி' என்றார். 'என்ன இப்படியெல்லாம் அலையறே!' என்று என் அருகில் குனிந்து 'என்ன பணம் கிணம் இல் லையா? வெட்கப்படாதே! இதோ!' என்று எதிரே கிடந்த குவியலைக்காட்டி 'உனக்கு வேண்டியதை எவ் வளவேனும் எடுத்துக்கப்பா!' என்றார்.

நான் பரவசமானேன். என் கையைப் பிடித்துப் பணத் தின் பக்கம் நகர்த்தினார். மறுபடியும், 'உனக்கு வேண்டி யதை எடுத்துக்கப்பா' என்றார். அவரின் மனம் நான் நன்றாய் அறிந்தது—வார்த்தைகள் வெறும் உபசார மல்ல—உண்மையிலேயே நான் ஏதாவது எடுத்துக்

கொள்ள வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

எனது களையான முகமும் எனது இயற்கைக்கு மாறுன் தூசிபடிந்த ஆடைகளுமே அவரின் மனதை வேதனை அடைய வைத்தன போலும். பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாரும் எழுந்து கொண்டார்கள். பாவேந்தரின் மனதிற்கு, நான் இவ்வளவு உகந்தவன் என்று அவர் கன் கண்டதுதான் அவர்களை எழுந்து நிற்கச் செய்தது. எனக்கு அப்போது பணம் ஒன்றும் தேவையில்லை என்று அவரிடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டேன்.

"பாருப்பா இந்தப் பிள்ளை" என்று அங்கிருந்தவர்களிடம் சொல்கிருர். நான் அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

❑

1961 ஆம் ஆண்டு சென்னை ஆண்டர்சன் ஹாலில் தமிழ்ப் பயிற்சி மொழி மாநாடு நடந்தது. திருவாளர் சக்தி சீனிவாசன் (இப்போது A.I.R இல் இருக்கிருர்) தான் ஏற்பாடுகள் யாவும் செய்தார்.

டாக்டர் மு. வரதராசனும் பாவேந்தரும் பேச வேண்டியவர்கள். ஏராளமான கல்லூரி மாணவர்கள் பேச முன் வந்தனர். இந்த இரு பெரும் அறிஞர்கள் பேசும் போது நான் தலைமை வகிப்பது எனக்கு வெட்கமாயிருந்தது. என் மனநிலையை உணர்ந்து கொண்ட பாரதிதாசன் என் பக்கத்தில் அமர்ந்தார்.

'பரவாயில்லை, பரவாயில்லை. நான் இருந்தால் என்ன? நீ பாட்டுக்குப் பேசு' என்ருர். டாக்டர் மு.வ. பேசி முடித்தார். அடுத்துத் தாம் பேசிவிட்டுப் போய்விட வேண்டும் என்ருர் பாவேந்தர். மாணவர் பலர் பேச வேண்டும் என்று உற்சாகமாகயிருந்தனர். இவர் பேசி முடித்தால் கூட்டம் கலைந்துவிடும். 'நீங்கள் கடைசியாகப் பேச வேண்டும்' என்று சொல்ல எனக்குத் துணிவில்லை. பாவேந்தரின் மகன் மன்னர் மன்னன் பக்கத்தில் இருந்தார். 'அப்பா பேசிவிட்டால் கூட்டம் கலைந்து விடும்; அவரிடம் சொல்ல வேண்டும்' என்றேன். சொன்னதும் "சரி சரி" என்று அமர்ந்து விட்டார்.

அன்று 'தாய் மொழியில் கல்வி' என்ற தலைப்பில் அற்புதமான பேச்சு. மு.வ. வின் தமிழ்ப்பணியைப் பாராட்டி விட்டு 'எல்லா நல்லா தாம் பண்றே. பின்ன ஏன் பயம்? எல்லாவிடங்களிலும் தமிழ் தான் வேண்டும்—என்று சொல்றது தானே? ஏன் தயக்கம்?' என்று மு.வ.விடம் கூறினார். நெஞ்சிலுற்றதை நேரில் கூறும் அவரது இயல்பினை மு.வ. மிக மிகப் பாராட்டினார்.



மைக்கேல் ஏஞ்சலோவும்
லியனார்டோ டாவின்சியும்
கவிதை பாடத்தெரிந்த சிற்பிகள்.
பாலசுப்பிரமணியம்
பாட்டையே சிற்பமாய்ப்
படைக்கும் கவிஞர்.

இவர் தோட்டத்தில்
நிலவுப் பூக்களும் உண்டு;
நெருப்பு மலர்களும் உண்டு.

ஒளிப் பறவையாய்ச்
சிறகை விரிக்கும்
உயர்ந்த கற்பனைகளுக்குச்
சொந்தக்காரரான சிற்பி
பாவேந்தரின்
கடைசிக் கால நிகழ்ச்சிகளை
நினைவு கூர்கிறார்.

# பாவேந்தர்—
# ஒரு நினைவுச் சரம்

கவிஞர் சிற்பி

1954-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெள்ளி விழாக் கொண்டாடியது. அப்போது நான் தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவன்.

வணக்கத்துக்குரிய என் ஆசிரியரும், பாவேந்தரின் அன்பிற்குரிய மாணாக்கருமான கவிஞர் மு. அண்ணாமலை

வாயிலாகப் புரட்சிக் கவிஞரைப் பற்றி (அப்போதெல்லாம் பாவேந்தரை அப்படித்தான் அழைப்பது வழக்கம்) நிறைய நிறையக் கேட்டு மகிழ்ந்த நான் அவரைக் கண்ணாரக் காணக் கொதித்துக் கொண்டிருந்தேன். ஆனால் வெள்ளிவிழாவையொட்டிப் பாவேந்தரின் கவிதையை மட்டுமே படித்து நிறைவு கொள்ள வேண்டியதாயிற்று.

ஓரிரு மாதங்களில் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்ய நேர்ந்தது. வெள்ளி விழாவில் பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய பலருக்கு சிறப்பு டாக்டர் பட்டம் வழங்கப் பட்டது. அவர்களில் ஒருவர் நாவலர் சோமசுந்தர பாரதியார். அவர் பட்டம் பெற்றபோது பட்டமளிப்பு விழா மன்றத்தில் எழுந்த கரவொலியும் மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்க நெடு நேரமாயிற்று. இந்நிகழ்ச்சி, அந்நாள் தமிழக ஆளுநராக இருந்த ஸ்ரீபிரகாசாவுக்குப் பெரும் வியப்பை உண்டுபண்ணியது. இதனால் நாவலர் பாரதியாரைக் கௌரவிக்க இரண்டொரு மாதம் கழித்து மற்றொரு விழாவைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவுக்கு நாவலர் பாரதியாருடன் ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ ஆகியோரும் பாவேந்தர் பாரதிதாசனும் அழைக்கப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் பாவேந்தர் தங்கியிருந்தார். மாணவர் கூட்டம் அவரை மொய்த்துக் கொண்டது. அப்போது நான் ஆசிரியராகவும். ச. மெய்யப்பன் துணை ஆசிரியராகவும் இருந்து நடத்தி வந்த முத்தமிழ் மலர் கையெழுத்து ஏட்டினை அவர் பார்வைக்குப் பணிவுடன் கொடுத்தேன். மாணவர்களின் ஓவிய வண்ணமும் காவிய நேர்த்தியும் பார்த்து மகிழ்ந்து 'நறு மலர் இஃதே' என்று எழுதிக் கையொப்பமிட்டுத் தந்தார். மற்றொரு மாணவர் தயாரித்த மலரை அவர் பார்த்துக் கொண்டிருந்தபோது அதன் ஆசிரியரான மாணவர், ஒரு பாராட்டுக்கவிதை எழுதித் தர வேண்டினார். பாவேந்தர் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் மீண்டும் அம்மாணவர் வற்புறுத்திக் கேட்டதும் இரண்டு வரிகள் எழுதினார். பிறகு அந்த மாணவரை ஏறிட்டுப் பார்த்து 'இதற்குப் பொருள் சொல்' என்று

கர்ஜித்தார். பயந்து நடுங்கிப் போன பையன் ஏதோ சொன்னன்.

'மூணுவது சீர்லே மோனே சும்மாவா போட்டிருக்கேன்?' என்று முழங்கியதும் அந்த அறை நிசப்தமாகி விட்டது. நல்ல வேளையாக அதற்குள் மற்ற அறிஞர்களோடு புகைப்படம் எடுத்துக் கொள்ள யாரோ கவிஞரை அழைத்தார்கள். அவர் வரமுடியாது என்று மறுத்தார். இதைக் கேள்விப்பட்டு உடனே அந்த அறைக்கு தெ.பொ.மீ யே நேரில் வந்து 'கவிஞர் இல்லாமல் புகைப்படமா?' என்று கூறி அவரை அழைத்துச் சென்ருர். அக்காட்சி உணர்ச்சிமயமாக இருந்தது.

பாராட்டு விழாவில்பாவேந்தர் ஒரு நெருப்புச் சூருவளியாகப் பேசினர் என்று மட்டுமே இப்போது நினைவில் நிற்கிறது.

□

அடுத்த முறை நான் பாவேந்தரைக் கண்டது ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் தியாகராய நகரில் அவர் தங்கியிருந்த நாட்களில். 1963 மே மாதத்தில் ஒருநாள் நானும், என் நண்பர் மணிவாசகர் நூலகம் மெய்யப்பனும், இலக்கியப்பதிப்பகம் சோமையாவும் பாவேந்தருக்கு அணுக்கத் தொண்டராக விளங்கிய கவிஞர் பொன்னடியானுடன் பாவேந்தரைக் காணச் சென்ருேம்.

என் முதல் கவிதைத் தொகுப்பான 'நிலவுப்பூ' அச்சாகிக் கொண்டிருந்தது. அத்தொகுப்புக்குப் பாவேந்தரின் அணிந்துரைக் கவிதை பெற்றே தீரவேண்டுமென்ற கட்டாயம் எனக்கு. அதற்காகத்தான் பாவேந்தர் இல்லத்துக்குப் போனேம்.

நாங்கள் காத்திருக்கக் கவிஞர் பொன்னடியான் பெரிய ஹாலில் தட்டி வைத்து மறைக்கப்பட்ட பகுதியிலிருந்த பாவேந்தரிடம் அனுமதிபெறச் சென்ருர். நாங்கள் அழைக்கப்படுமுன் அறையில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களைப் பார்வையிட்டேன். பெரும்பாலான படங்களில் பாண்டியன் பரிசு படத் தொடக்க விழாவில்

பாவேந்தரும் சிவாஜி கணேசனும் காட்சி தந்தனர். பாவேந்தரின் ஆசைக் கனவான பாண்டியன் பரிசு படம் வெளிவராத கதை பலருக்கும் தெரியுமே!

விரைவில் நாங்கள் பாவேந்தர் முன்னால் அழைக்கப் பட்டோம். பத்தாண்டுகளுக்கு முன் கம்பீரமான தோற் றத்தோடு திகழ்ந்த கவிஞர் ஓரளவு சோர்வோடு காட்சி யளித்தார். கட்டிலில் எழுதுகிற அட்டையோடு அமர்ந் திருந்தார். அவருடைய மாணவர் மு. அண்ணாமலையின் மாணவன் நான் என்றதும் ''அப்ப... நீ என் பேரன்...' என்று சொல்லிக் கொண்டே என்னை அணைத்து நெற்றி யில் முத்தமிட்டார். என் மேனி சிலிர்த்துப் பரவச முற்றது.

கவிழ்ந்து சாய்ந்து எழுதிக் கொண்டிருப்பது தம் வழக் கம் என்று சொல்லிப் புறங்கைகளைத் தூக்கிக் காட் டினார். கருமையாக இரண்டு புறங்கைகளும் தழும்பு பாய்த்திருந்தன. தமிழ்க் கவிதை முற்றத்தில் காலத் தால் அழிக்க முடியாத சுவடுகளைப்பதித்த பாவேந்தரின் கரங்களில் இருந்த தழும்புகள் யுத்தகளம் சென்று வந்த போர் மறவனின் வீரத் தழும்புகளை எனக்கு நினை வூட்டின.

பின்னர் அச்சாகியிருந்த கவிதைப் பகுதிகளை அவர்பால் தந்து அணிந்துரை வேண்டினோம். இரண்டு நாள் கழித்து வந்தால் படித்து விட்டு அணிந்துரை தருவதா கத் தெரிவித்தார். அந்தக் கவிதைச் சந்நிதானத்திலி ருந்து வணங்கி விடைபெற்றோம்.

இரண்டு நாள் கழித்து—காலைப் பொழுதில் நானும் சோமையாவும் பல் வகைக் கனிகளையும ஒரு தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு போனோம். 'இதெல்லாம் எதுக்கு...' என்று சொல்லிய பாவேந்தர், 'பழனியம்மா' என்று மனைவியாரை அழைத்து அவற்றை எடுத்துக் கொண்டு போகச் சொன்னார். விரைவில் அம்மையார் பழச் சுளைகளையும் கீற்றுக்களையும் தட்டுக் களில் கொண்டு வந்து வைத்தார்.

நம்ம சாயல்...கவியிலே இருக்கு...இன்னும் நீட்டா (நீளமாக) எழுதணும்' என்றார் பாவேந்தர். பிறகு ஒரு

தாளை எடுத்து, 'என் கையெழுத்து சரியா இருக்காது... இதை நீயே பிரதி செய்...' என்று அணிந்துரைக் கவிதையைக் கொடுத்தார். கவிதையை நான் பிரதியெடுத்தேன். கவிதை இது.

அண்ணா மலைப்பல் கலைக்கழகப் பேராசான்
அண்ணா மலையென் அரியதமிழ் மாணவனின்
கண்ணான மாணவன்நான் என்று கழறித்தம்
கையெழுத் துப்படியைக் கண்ணுக் கெதிர்வைத்தே
அண்டியசீர்ப் பொள்ளாச்சிக் கல்லூரி ஆசான்நான்
அரிய நிலவுப்பூக் கவிதைநூல் நான்செய்தேன்
கண்செலுத்த வேண்டுமென்றார்; மாட்டேனென்று
சொல்வேன்
கவிதை ஒவ்வொன்றும் அமிழ்தாக நான் கண்டேன்

பாட்டுத் திறம்கண்டேன் பாலசுப் பிரமணியம்
பாவாணர் செய்தஅப் பச்சைத் தமிழ்நூலில்
நாட்டுத் திறம் என்னே நாற்கவியும் முத்தமிழும்
நல்கும் பயன்என்னே நாவூறிப் போனேன்நான்
வீட்டிற் குறட்டைவிட்ட செந்தமிழர் கண்விழிக்க
வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்
பாட்டை திறக்க வந்த பாலசுப் பிரமணியம்
பைந்தமிழ்ப் பாவாணர் புகழ்பெற்று வாழியவே!

இந்தக் கவிதை என்னைப் பூரிப்பில் ஆழ்த்தியது. பிரதியெடுத்துக் கையொப்பமிடப் பாவேந்தரிடம் கொடுத்ததும், 'நான் என்ன எழுதியிருக்கிறேன்; நீ எப்படி எழுதியிருக்கிறாய்?' என்று கேட்டார். கடைசி வரியில் நான் 'பாட்டைத் திறக்க' என்று ஒற்றுப் போட்டுஎழுதியிருந்தேன். ஒற்றை அடித்துத்திருத்தி, 'பாதை திறக்க என்ற பொருளில்தான் பாட்டை திறக்கண்ணு போட்டிருக்கேன்' என்று சொல்லிக் கையொப்பமிட்டார். பாவேந்தர் இப்படிப் பாராட்டியதை வாழ்நாள் முழுதும் மறக்க முடியாது பணிந்து வணங்கி விடைபெற்றோம். அப்போது பாவேந்தர். 'இப்ப நான் மத்திய அரசு எடுக்கும் பாரதி வரலாற்றுப்பட த்துக்கு உரையாடல் எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்று தெரிவித்தார். அது ஏன் பயன்படுத்தப்படாமல் போயிற்று எனத் தெரியவில்லை.

அதே சமயம் நிலவுப்பூ அச்சுப் பகுதிகளையும், ஓவியங்

கலையும் பாராட்டிவிட்டு 'நம்ம மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் புத்தகத் தயாரிப்பு அவ்வளவு நல்லா வரலே...' என்று வருத்தப்பட்டுக் கொண்டதும் எனக்கு நன்கு நினைவில் நிற்கின்றது.

□

1963 செப்டம்பர் 22-ஆம் நாள் பொள்ளாச்சி நகரில் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலமும் நானும் மற்றும் பல பாரதி அன்பர்களும் ஒன்றாக இணைந்து மிகப் பிரம்மாண்டமான பாரதி விழா நிகழ்ச்சி ஒன்றுக்குத் திட்டமிட்டோம். ஒருநாள் முழுவதுமாகக் காலைமுதல் இரவு வரை நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டன.

எஸ். இராமகிருஷ்ணன், சிலம்பொலி செல்லப்பன், ரஷ்ய நாட்டுத் தமிழ் மாணவி இசபெல்லா முதலிய பற்பல அறிஞர்களும் கவிஞர்களும் கலந்து கொண்ட பெருவிழாவுக்குப் பாவேந்தரையும் அன்புடன் அழைத்திருந்தோம்.

விழாநாளன்று பயணியர் விடுதியில் காலை ஏழரை மணிக்கே பாவேந்தர் வந்து சேர்ந்து விட்டார். எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும்படி பாவேந்தரின் துணைவியார் பழனியம்மாளும் உடன் வந்திருந்தார். வந்த உடனேயே முகச்சவரம் செய்ய ஆள் வேண்டுமென்று கேட்டார். பக்கத்திலிருந்த முடி வெட்டும் நிலையத்துக்குப் போகலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. 'அதெல்லாம் ஒத்து வராது..இங்கேயே ஒருத்தரைக் கூட்டிவா' என்று கர்ஜித்தார். அவ்வாறே உடன் கட்டளையை நிறைவேற்றினோம்.

மயிலஞ்சந்தை என்ற இடத்தில் பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. காலையில் என் தலைமையில் கவியரங்கம், பாவேந்தர் முன்னிலையில் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியில்

'அலையாடும் தென்புதுவை
  அழகாடும் பட்டினத்தின்
கலைபாடும் குயிலான
  கவியரசர் பாவேந்தர்

சிலைபோல வீற்றிருக்கச்
 சிறியேன் அவர்திருமுன்
குலம்பாடி நலம்பாடக்
 குறுக்கிட்டேன் மன்னிப்பீர்.'

என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நான் கவிதை பொழிந்தேன். இளங்கவிஞர்களின் கவிதைகளைத் தலையசைத்துச் சுவைத்து மகிழ்ந்தார் பாவேந்தர்.

தொடர்ந்து கருத்தரங்கம் நிகழ்ந்தது. பிற்பகல் இசை நிகழ்ச்சி, சிறப்புச் சொற் பொழிவுகள். ரஷ்யப் பெண் மணி இசபெல்லாவின் உரை. பாவேந்தர் தம் உரை நிகழ்த்தக் காத்திருந்ததில் ஓரளவு பொறுமை இழந்து போயிருந்தார். இதனிடையே அவருக்கு முன்பே அறிமுகமாயிருந்த சிலர் அவரை ஆளியாறு அணைக் கட்டுக்குப் போய் வந்துவிடலாம் என்று அவரை விழாவை விட்டு அழைத்துப் போய்விடத் திட்டமிட்ட னர்.

விழாப் பொறுப்பாளர்களான எங்களுக்குக் கிடைத்தற் கரிய நிதி கை நழுவிப் போய்விடக் கூடாதே என்ற அச்சம் வந்து விட்டது. அதனால் மற்ற பேச்சாளர்களை விரைவு படுத்தினோம். எனினும் இரவாகி விட்டது. பாவேந்தர் பேசத் தொடங்கும் போது, பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆவலோடு காத்திருந்தனர். அப்படி யொரு கூட்டத்தை, ஓர் இலக்கியவிழாவுக்கு அது வரை பொள்ளாச்சி நகரம் சந்தித்ததில்லை. பாவேந்தர் தம் பேருரையில் பாரதியோடு தமக்கேற்பட்ட உறவை யும், அன்பையும் உணர்ச்சியோடு எடுத்தியம்பினார். பாரதி பாடல்கள் பலவற்றை எப்படிப்பாடவேண்டும் என்று பாடிக் காட்டினார். சில பாடல்கள் பிழையாகப் பதிக்கப்பெற்றிருப்பதாகவும் மொழிந்தார்.

உரையாடல் போலவும், இசை நிகழ்ச்சி போலவும்— ஒரு சொற்பொழிவு போலல்லாமல்—ஒரு கலை நிகழ்ச்சி போலவும் பாவேந்தர் உரை அமைந்தது. 'கோல்கைக் கொண்டு வாழ்' என்ற பாரதி வரியைத் தவறாகப் புரிந்து கொண்ட சுதேசமித்திரன் பத்திரிக்கையைக் கேலி செய்தார். கதாகாலட் சேபங்கள் 'கீர்த்தனாரம்பத் திலே' என்று தொடங்குவதை எடுத்துக்காட்டி 'ஒரு

புதுரம்பம் கண்டுபிடிச்சிருக்கான்—கீர்த்தனாரம்பம்' என்றுகிண்டல் பண்ணினார். பாவேந்தரை மேடையில் பேச வைக்க முடிந்ததே என்ற பெரிய நிம்மதி ஏற்பட்டது.

❂

அன்றிரவு பாவேந்தரும் பழனியம்மாளும் பயணியர் விடுதியில் தங்கினர். அதிகாலையிலேயே நண்பர் பழனியப்பன் இல்லத்திலிருந்து சூடான இட்டலியும், காரமான குழம்பும் கொண்டுவரப்பட்டது. பாவேந்தர் இச்சிற்றுண்டியை வெகு ரசனையோடு உண்டார்.

மதிய உணவுக்கும் பாவேந்தரின் பழைய நண்பர் குமாரசாமிபிள்ளை வீட்டுக்குப் போகும்வரை பல செய்திகளைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தார். கூட்டத்தின் நிதிக் குறைபாட்டைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது பாவேந்தர் 'துண்டை விரிச்சு கூட்டத்தில் தண்டணும்' என்றார். 'தண்டல்' என்ற சொல் எனக்கு அப்போது புதுமையாக ஒலித்தது; அதனால் சிரித்தேன். கவிஞர் கே.சி.எஸ். என்னைக் கடிந்து அப்படிச் சொல்வது தென் ஆர்க்காட்டில் வழக்கு என்று தெரிவித்தார்.

பின்னர் பாவேந்தர் மறைந்த ஜீவா அவர்களின் சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். ஜன சக்தி ஜீவா மலருக்குத் தாம் கவிதை கொடுத்திருந்தும் மலர் தமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்.

அப்போது எங்களுக்கிருந்த வசதிக்குறைவில் கவிஞர் பெருமானைப் புகைப்படம் எடுக்கக்கூட முடியவில்லை. ஆனால் அவரை அழைத்துச் சென்ற குமாரசாமிபிள்ளை கவிஞரையும் திருமதி பழனியம்மாளையும் அமர வைத்து ஒரு புகைப்படம் எடுத்துள்ளார்.


நண்பர் குமாரசாமிபிள்ளை பாவேந்தரைத் தம்முடன் அழைத்துச் சென்றபோது நாங்கள் விடை பெற்றுக் கொண்டோம். பிறகு அவர் கவிஞரைக் கரூருக்கு அனுப்பி வைத்ததாக எங்களிடம் தெரிவித்தார்.

பாவேந்தர் மறைவுக்கு முன் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சிகளில் ஒன்று பொள்ளாச்சி நிகழ்ச்சி என்று

கருதுகிறேன். வெகு விரைவிலேயே சென்னையில் உடல் நலிவுற்று அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி தாங்கமுடியாத அதிர்ச்சியாக வந்தது.

இன்று எங்கள் ஊரில் பாவேந்தர் தங்கியிருந்த பயணியர் விடுதி இடிக்கப்பட்டு இல்லாமல் போய் விட்டது. ஆயினும் பாவேந்தர் அங்கு தங்கியிருந்த நினைவு அழியா ஓவியமாய் நின்று நிலைக்கிறது.

□



அறிஞர்களையும்
அரசியல் மேதைகளையும்
அதிக அளவில்
நாட்டுக்குக் கொடுத்த பெருமை
பச்சையப்பன்
கல்லூரிக்கு உண்டு.

பச்சையப்பன்
பள்ளியில் பயின்று
பச்சையப்பன் கல்லூரியில்
பட்டம் பெற்று
பச்சையப்பன் கல்லூரியிலேயே
ஆசிரியர் பணியும் புரிந்தவர்
நா. ஆறுமுகம்.

விதைப் பண்ணையிலேயே
நாற்றாகிக் கதிர் குலுங்கியவர்.

பச்சையப்பன் கல்லூரியின்
செழித்த வரலாற்றுக்குச்
சொந்தக்காரர்களான
டாக்டர் மு.வ.
அறிஞர் அ.ச.ஞா.
பேராசிரியர் அன்பழகன்
ஆகிய தமிழேறுகளின் மாணவர்

திருமணத்துக்குப் பின்
கலித் தொகையை ஆய்ந்து
'பண்டாரகர்' ஆனவர்
வீட்டிலேயே
குறிஞ்சியை வளர்ப்பவர்
இன்று--
ஈரோடு கலைக்கல்லூரியின்
தமிழ்ப் பேராசிரியர்.

பல்லவன் காஞ்சிக்குப்
பாவேந்தரை அழைத்து வந்து
பல எதிர்ப்புகளின் நடுவே
பாட்டரங்கம் நடத்திய சிறப்பை
இக் கட்டுரையில் கூறுகிறார் இவர்.

---

# கவி அரச அரிமா

---

டாக்டர் நா. ஆறுமுகம்

1964 ஆம் ஆண்டில் சனவரித் திங்கள். பாவேந்தர் பாரதிதாசனைக் கொண்டு தமிழ் மன்றத்தின் சார்பில் கவியரங்கம் நடத்துவது என்று முடிவு செய்தோம்.

இரண்டு முறை நாள் குறிக்கப் பெற்று விழா நடைபெற வில்லை; மூன்றாவது முறையாக விழா முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அன்று காலையிலேயே பாவேந்தரை

அழைத்து வருவதற்காக ஆசிரியர் என்ற முறையில் காஞ்சியிலிருந்து சென்னை புறப்பட்டேன். பக லுணவுக்கு முன் பாவேந்தர் அவர்களைச் சென்னை இல் லத்தில் சந்தித்துப் புறப்படும் நேரங்குறித்துப் பேசி னேன். பகல் 1மணியளவில் புறப்படலாம் என்றார். நான் சென்று மகிழ்வுந்து (வாடகைக்கார்) அமர்த்தி வந்தேன். மகிழ்வுந்தினைப் பார்த்ததும் 'வாடகை வண்டியா?' என்று வினவி 'அச்சாரம்தந்துவிட்டாயா?' என்று என்னைக் கேட்டார். 'ஆம்' என்று நான் சொன்ன தும் 'நமக்குப் பழக்கமான வேறு வண்டியுள்ளது', அதற்காகக் கேட்டேன்' என்றார். நான் 'அதிலேயே செல்லலாம்' என்று கூறிய போது, 'அச்சாரம் தந்து விட்ட பின் மாற்றுவது கூடாது' என்று மறுத்து விட்டார்

பாவேந்தர் அவர்களுடன் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து சென்ற அந்த நாளை என்வாழ்வின் பொன் ஞளாக நினைத்து மகிழ்கிறேன். சென்னையிலிருந்து வாலாசாபாத் வழியாகக் காஞ்சி பச்சையப்பன் கல்லூரிக்குச்சென்று கொண்டிருந்தோம். நான் சிறிது குரல் கம்மலாகப்' பேசுவதைக் கண்ட பாவேந்தர், என் தந்தைக்கும் இந்தக் குறையிருக்கிறதா என்று கேட்டு அது தீரமருந்து கூறினர். அரிசியுடன் சில மிளகுகளைச் சேர்த்து வாயில் அடக்கிக்கொண்டு சில நாட்கள் பேசிப் ப்பழகுங்கள்; இந்தக் குரல் அடைப்பு நீங்கும்' என்ருர்.

வாலாசாபாத் அருகில் மகிழ்வுந்து சென்று கொண்டிருக் கும்போது பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சிலர் சைக்கிளில் வருவதைக் கண்டதும் எனக்குச் சிறிது அதிர்ச்சி ஏற்பட்டது. அன்று காலையிலிருந்தே வானம் 'மப்பும் மந்தாரமுமாக' இருந்தது. சிறுசிறு தூறல் களும் இருந்தன அவ்வப்போது இலேசான மழையும் இருந்தது. அதனால் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டு விட்டதோ என்றுநான் அஞ்சினேன். இதற்கிடையில் மகிழ்வுந்து இராஜாம் பேட்டை என்னும் கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தது. அங்கு மாணவர் கள் பலரைக் கண்டதும் மகிழ்வுந்தை நிறுத்தச் சொன் னேன். என்னைப் பார்த்ததும் ஓடிவந்த மாணவர்களை விசாரித்தேன். நான் எதிர்பார்த்தது நடந்துவிட்டிருந் தது.

மழையின் காரணமாகக் கல்லூரிக்கு மதியம் விடுமுறை என்றும், கவியரங்கம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் முதல்வர் அறிவிப்புச் சுற்றறிக்கையாக வந்தது என்று மாணவர்கள் கூறினர். பாவேந்தரை மகிழ்வுந்தில் பார்த்ததும் அந்த மாணவர்களும் என்னைப்போலவே உணர்ச்சி வசப்பட்டு 'இப்போது என்ன செய்வது' என்றுவிழியால் கேட்டனர். மிகவும் பரபரப்பு அடைந்திருந்த எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'இந்த நாளை விட்டால் இனி பாவேந்தரைக் கொண்டு விழா நடத்த இயலாது' என்று என்மனம் அறிவுறுத்தியது. மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அங்கிருந்த மாணவர்களிடம், 'இன்றைக்கு விழா நடைபெறும்; பாவேந்தர் பேசுவார்; நீங்கள் எல்லோரும் திரும்பிக் கல்லூரிக்கு வாருங்கள்; வழியில் காணும் மாணவர்களையெல்லாம் அழைத்து வாருங்கள்' என்று, கூறிவிட்டு மகிழ்வுந்தில் புறப்பட்டோம்.

பாவேந்தர் நிலைமையைக் கேட்டார்; 'வேறொரு நாளில் விழாவை வைத்துக் கொள்ளலாமே' என்றார்.

'கல்லூரிக்கு மதியம் விடுமுறை விட்டிருந்தாலும் மாணவர்களையெல்லாம் திரும்பவரச் சொல்லியிருக்கிறேன்; வழியில் வந்து மாணவர்களை அழைத்துக் கொண்டு அவர்கள் வந்துவிடுவர்; நாம் விழாவை நடத்தலாம்' என்றேன் நான்.

'அது இயலுமா?' என்றார் பாவேந்தர். 'உங்கள் மீது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவ்வளவு பற்று உள்ளது. அதனால் விழா கட்டாயம் சிறப்பாக நடக்கும் —நடத்த இயலும் என்று கருதுகிறேன்' என்றேன் நான். புன்னகை பூத்த பாவேந்தர் 'எனக்கொன்றும் இல்லை; உன் ஆர்வத்தைப் பார்த்து மகிழ்கிறேன்; வாழ்த்துகிறேன்; அதனால் நான் வருகிறேன்' என்றார்.

மகிழ்வுந்து எகனம்பேட்டை என்னும் சிற்றூரைத் தாண்டி அய்யன்பேட்டை வழியாகச் சென்று கொண்டிருந்தது. அய்யன் பேட்டை நான் பிறந்த சிற்றூர். கல்லூரியில் இருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. என் தமிழ் உணர்வுக்கும் பற்றுக்கும் 'தீனி' போட்டு என்னை வளர்த்த மண் அது. அங்குள்ள மாணவர்களுக்

கும் இளைஞர்களுக்கும் 'பாவேந்தர் கல்லூரிக்குச் செல்கின்றார்' என்னும் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. அவர்கள் கல்லூரி நோக்கி நடந்து வரத் தொடங்கினர்.

இந்தச் சூழ்நிலையில் மகிழ்வுந்து மாலை 4 மணியளவில் கல்லூரியை அடைந்தது. பாவேந்தர் அவர்களை அழைத்து வந்துவிட்டேன் என்று தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் கோ. இராமச்சந்திரன் அவர்களிடத்தில் மகிழ்ச்சியுடன் கூறினேன். கல்லூரியில் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பேராசிரியர் கவிஞர் மு.பி. பாலசுப்பிரமணியன் அவர்களை உள்ளிட்ட தமிழ்த்துறை ஆசிரியர்களுக்கும் தமிழ்ப் பற்றுள்ள பிற துறை ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சியைக் காட்டிலும் ஏமாற்றமே முகத்தில் நிழலாடியது. 'கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டு எல்லோரும் சென்று விட்டார்களே, விழா எவ்வாறு நடக்கும்?' என்று கேட்டார்கள். 'முதல்வர் அனுமதி வேண்டுமே' என்று தயங்கினார்கள். உணர்ச்சி வயப்பட்ட நான், 'விழா நடந்தே தீரவேண்டும்; முதல்வரிடம் அனுமதி பெற்றுவிடுவது என் பொறுப்பு; காஞ்சிபுரம் நகர எல்லையில் உள்ள மாணவர் விடுதிக்குச் சென்று செய்தியைக் கூறி மாணவர்களை அழைத்து வாருங்கள்' என்று நண்பர் பேராசிரியர் மு.பி.பா. அவர்களிடம் கூறிவிட்டு, முதல்வர் அறைக்குச் சென்றேன்.

முதல்வர் பேராசிரியர் எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள் என் மீது அன்புகொண்டவர்; என் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். எந்தக் கருத்தாக இருந்தாலும் வாதாடி நம்மைச் சம்மதிக்கச் செய்யும் ஆற்றல் பெற்றவர்.

முதல்வர் அவர்களுடன், பேராசிரியர் மா.கி. தசரதன் அவர்களும் இருந்தார்கள். விழாவைத் தள்ளி வைப்பதற்கான காரணங்களைக் குறித்து என்னிடம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். முதல்வர் அவர்களுடன் பேராசிரியர் தசரதன் அவர்களும் சேர்ந்து கொண்டு பேசுவது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. பரபரப்புடன் காணப்பட்ட நான் ஒரு நிலையில் உணர்ச்சி வசப்பட்டு, பேராசிரியர் தசரதன் அவர்களைப் பார்த்து 'சார்; உங்களுடன்

நான் பேச விரும்பவில்லை' என்று கூறிவிட்டு, முதல்வ ரிடம் 'சார்!. நீங்கள் என்ன சொன்னாலும் என் காதில் விழாது; விழா நடக்க வேண்டும். அனுமதி தாருங்கள்' என்று வலியுறுத்தினேன்; வேண்டினேன்.

'கூட்டம் இல்லாமல் விழா சிறக்காது' என்றார் முதல்வர். 'கூட்டம் வந்துவிடும்; வந்து விட்டது, ஏனெனில் நான் வரும் வழியிலேயே மாணவர்களிடம் 'விழா நடக்கும். வாருங்கள்' என்று கூறி வந்துள்ளேன்' என்றேன் நான்.

பிறகு முதல்வர் 'சரி, ஆறுமுகம் ரொம்பவும் உணர்ச்சி வயப்பட்டு விட்டாற்போல் தோன்றுகிறது. எனக்கொன் றும் தடையில்லை; விழாவை நடத்துங்கள்' என்று அனு மதி கொடுத்துவிட்டார்.

விழா அரங்கம், மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிந் தது. மாலை 5மணியளவில் விழா தொடங்கியது. தலை மையுரையில் பாவேந்தர் 'தமிழகத்தின் இரு பெரும் பல்கலைக் கழகங்களில் இரு பெருங் கங் காணிகள்; இவர்கள் இருக்கும்வரை தமிழ்வளராது— வாழாது' என்று அரிமா போல் நின்று, வீர முழக்கமிட் டார். தமிழ்ப்பற்றுடன் வாழ வேண்டிய இன்றியமை யாமை குறித்தும், தமிழ் வளர்ச்சிக்கான வழிவகைகள் குறித்தும் நெஞ்சமெல்லாம் இனிக்கும் வகையில் பேசி முடித்தார்.

தலை நிமிர்ந்து செம்மாந்து நாங்கள் உட்கார்ந்திருந் தோம். விழா முடிந்த பிறகு முதல்வர் அறைக்கு அழைத்துச் சென்றேன். தொடக்கத்தில் அறைக்கு வெளியே வந்து பாவேந்தர் அவர்களை முதல்வர் வர வேற்காதது ஒரு குறையாக எங்களுக்கு இருந்தது. முதல்வர் அறையினுள் சென்ற பாவேந்தர் நேராக முதல்வர் இருக்கையைச் சற்று முன்னால் இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து கொண்டார்


'என்ன செய்வது! எப்படிச் சொல்வது!' என்று புரியாத நிலையில் நாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தோம். சிறிது நேரம் நின்று கொண்டிருந்த முதல்வரும் ஏதோ வேறு வேலை நிமித்தமாக வெளியே செல்வது போல் சென்று

விட்டார். பாவேந்தர் இதைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. 'கவி அரச அரிமா' (கவிராஜ சிங்கம்) என்னும் தமிழ்த்தொடரின் பொருளை அன்று உணர்ந்தேன், முரசுக் கட்டிலில் ஏறி உறங்கிய சங்கத் தமிழ்ப் புலவர் மோசிகீரனார் என் நினைவில் நிழலாடினார்.

முதல்வரின் அறையில், முதல்வர் அமரும் இருக்கையில் பாவேந்தர் அமர்ந்திருப்பதைக் கண்ட ஆசிரியர்கள் மூக்கின் மேல் விரலை வைத்து வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். இப்போது பாவேந்தர் ஒரு சிறிய 'ஸ்டூலை' இழுத்து முன்னால் போட்டு, அதன் மீது கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார். பாவேந்தர் செயலை இன்றும் ஆராய்ந்து பார்க்கின்றேன். அந்தப் புரட்சிக் கவிஞரின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள என்னால் இயலவில்லை! ஆகவே வாழ்த்தி வணங்குகிறேன். வீறுபெற்றுச் சிறக்கும் வல்லமை பெறுகின்றேன்.

வாழ்க பாவேந்தர் புகழ்!
வளர்க அவர் புரட்சியுள்ளம்

□



அறிஞரின் பெயரைத்
தாங்கியிருக்கும் இந்த இளைஞர்-
பாவேந்தரின் மாப்பிள்ளையாகிய
திருவாளர் தண்டபாணியின் இளவல்.

'அறிஞர் தம்
இதய ஓடையை'
அணை கட்டிக் காக்கும்
ஈரோடு.
கலைக் கல்லூரி நூலகர்.

இவரும்.
இவரது துணைவியும்
தமிழ்க் காதலர்கள்.

பண்டாரகர் பட்டத்துக்குப்
'பாவேந்தரின் இதழ்ப் பணியை'
ஆய்வு செய்யும் இவர்,
தளர் நடைப் பருவத்தில்
தமிழ்ப் பாவேந்தர்
இல்லத்தில் வளர்ந்தவர்.

புதுவைக் கடற்கரையில்
புரட்சிக் கவிஞர்,
இவருடன் குழந்தையோடு குழந்தையாக
ஓடி விளையாடிய பிஞ்சு நினைவுகளைச்
செஞ் சொல்லில் வடித்திருக்கிறார்.

---

# பாட்டுக் குழந்தை பாரதிதாசன்.

---

மா. அண்ணாத்துரை
எம்.ஏ., பி.லிப்.எசி., பி.எட்,

பாவேந்தர் உள்ளக் குளத்தில் குளிர்ந்த தாமரை மலர்கள் பல, பூத்துக்குலுங்கித் தமிழ்ச் சோலையில் நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன. அம்மலர்களின் அழகையும் மணத்தையும் முழுமையாக உணர வேண்டுமானால் நாமும் அக்குளத்தில் படிதல் வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன் ஓர் உலகக் கவி. அவர் ஓர் ஊருக்கும், ஒரு நாட்டுக்கும் மட்டும் உரிமையுடையவ ரல்லர்.

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்

என்று பெருமிதத்தோடு தமிழினத்துக்காகப் பாடிய அதே கவிஞர்,

தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுக லமக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே.

என்று உலக மக்களுக்காகவும் பாடுகிறார். அவர் உள்ளம் வியப்பானது. அவர் உள்ளத்தின் இரகசியங் களை நாம் ஆய்ந்து உணர வேண்டும். அம்முயற்சியின் விளைவே இக்கட்டுரை. அவர் வாழ்க்கைக் கடலின் ஓரத் தில் விளையாடித் திரிந்த நான் அக்கடலிலும் மூழ்கிச் சில முத்துக்களை எடுத்து வழங்கியுள்ளேன்.

□

மனித நாகரிகம் ஆற்றோரங்களில் ஆரம்பமானது என்று ஆய்வாளர்கள் கூறுவர். காவிரி, தென்பெண்ணை ஆறுகள் தமிழ் மன்னர்களின் பெருமையையும் பண் பாட்டையும் உந்திச்சுழித்து ஓடுபவை. எனவே ஆற்றங் கரைகளில் அமைந்த சிற்றூர்களில் தம் மூன்று பெண் களுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார் பாவேந்தர்.

திருச்சி மாவட்டத்தில் காவிரிக் கரையில் அமைந்த சிற்றூர் 'கட்டிப்பாளையம்'. அந்த ஊரைச் சேர்ந்த புலவர் கண்ணப்பருக்குத் தம் மூத்தமகள் சரசுவதியைத் திருமணம் செய்து கொடுத்தார். இரண்டாவது மகள் வசந்தாவை தென் பெண்ணையாற்றங் கரையில் உள்ள 'மேல்பட்டாம் பாக்கத்தில்'என் அண்ணன் தண்ட பாணி அவர்கட்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

மூன்றும் மகள் இரமணியை சேலம் மாவட்டத்துக்

காவிரிக் கரையூராகிய 'மணப்பள்ளியில்' சிவசுப்பிரமணியம் அவர்கட்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

பாவேந்தர் விரும்பியிருந்தால் தம் பெண்களுக்குப் புதுவையிலே மாப்பிள்ளை தேடியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் வேறுபட்ட கலை, பழக்க வழக்கங்கள் உள்ள தொலைவூர்களில் பெண்கொடுத்ததும், கருநாடக மாநிலத்தில் தம் ஒரே மகன் கோபதிக்குப் பெண்ணெடுத்ததும் அவர் புதிய உறவுகளை விரும்பி வரவேற்றவர் என்பது புலனாகும். பெண் எடுப்பதும், கொடுப்பதும் அருகில் இருக்கக் கூடாது என்பது அவர் கொள்கை. தம் பெண்களின் திருமணத்தைப் பற்றிய பேச்சு எழும் போதெல்லாம் இக்கொள்கையைப் பெருமிதத்தோடு பிரகடனப்படுத்துவார் பாவேந்தர்.

பாவேந்தரின் வாழ்க்கை தோண்டத் தோண்டக் குறையாத புதையலைப் போன்றது; இறைக்க இறைக்க ஊறும் ஊருணி போன்றது. அவரோடு பழகிய நாட்களில் என் நினைவில் நிலைத்த நிகழ்ச்சிகளை இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

☐

எங்கள் குடும்பம் அப்போது ஓரளவு செல்வச் சூழ்நிலையில் இருந்தது. இருந்தாலும் என் தந்தையாரின் உடன் பிறந்தாருக்குள் இருந்த சில கருத்து வேற்றுமைகளால் குழப்பமான சூழ்நிலையிலும் இருந்தது. நான்கு பக்கமும் கூடம் அமைந்தது எங்கள் வீடு, பாவேந்தர் ஏறுபோல் வீறுடன் நடந்து வந்து கூடத்தின் நடுவில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். எங்கள் குடும்பச் சூழ்நிலையை அவர் பொருட்படுத்தவில்லை. எங்கள் பொருளாதார வசதி, சொத்துவிபரம் ஆகியவை பற்றியும் கேட்கவில்லை. எங்கள் தந்தையின் பெருமிதமான தோற்றமும். என் அண்ணாரின் தோற்றப் பொலிவும் அவருக்கு மிகவும் பிடித்துவிட்டன. எங்கள் குடும்பம் பண்பட்ட குடும்பமா, இல்லையா என்பதில் மட்டுமே அவர் கருத்தைச் செலுத்தினார். 'மாப்பிள்ளையை எனக்குப் பிடித்திருக்கிறது' என்று அவர் வெளிப்படையாகப் பேசிய பாங்கு எங்கள் குடும்பத்தாரைப் பெரிதும் கவர்ந்தது.

நான் சிறுவனாக இருந்தாலும் மேல்பட்டாம் பாக்கத்தில் பெருமாள் கோவில் தெரு 177-ஆம் எண்ணுள்ள

எங்கள் இல்லத்தில் நடைபெற்ற என் அண்ணாரின் திருமணம் என் உள்ளத்தில் பசுமையாகக் காட்சியளிக்கிறது. பூவாளூர் அறிஞர் அ. பொன்னம்பலனார் தலைமையில் திருமணம் நடந்தது. வீதியை அடைத்துப் போடப்பட்டிருந்த பச்சைப் பந்தலில் நாதஸ்வர இசை ஒலி பெருக்கியில் முழங்கத் திருமணம் தொடங்கியது. பல தமிழறிஞர்களும், சீர்திருத்தவாதிகளும் சொற்பொழிவாற்றினர்.

அந்தக் காலத்தில் சடங்குகள் இல்லாமல் செய்யப்படும் சீர்திருத்தத் திருமணத்துக்கு ஊர்மக்கள் நடுவிலும், உறவினர் நடுவிலும் பெரிய எதிர்ப்பு இருப்பது வழக்கம். இந்தத் திருமணத்திலும் அத்தகைய எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை. பாவேந்தர் பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பது நாடறிந்த செய்தி. எங்கள் குடும்ப நண்பராகிய திருக்கண்டேசுவரம் ரெட்டியார் 'ஊர் மக்களைப் பகைத்துக் கொள்ளலாமா? போயும் போயும் கழுநீர்ப் பானையில் விழுந்து விட்டீர்களே!' என்று என் பெரியப்பாவைக் கடிந்து கொண்டார்.

''இந்தத் திருமணத்தின் சிறப்பு இப்போது உங்களுக்குத் தெரியாது; பிற்காலத்தில் தான் தெரியும்'' என்று எங்கள் பெரியப்பா ரெட்டியாருக்குப் பதில் கூறினார். அறிஞர் அண்ணா முதலமைச்சரானதும் முதல் வேலையாகச் சீர்திருத்தத் திருமணச் சட்டத்தை தமிழகச் சட்ட மன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார். இன்று சீர்திருத்தத் திருமணம் எல்லோராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எங்களுடைய தூரத்து உறவினராகிய நல்லாற்றூர்க் குமாரசாமி முதலியாரின் மனைவி 'விளக்கு இல்லாத திருமணம் திருமணமா?' என்று கூறி, என் அண்ணியாரை அடிக்க வந்தார். அங்கு இருந்தவர்கள் அவரைத் தடுத்து அப்போது அமைதியை நிலை நாட்டினார்கள்.

திருமணத்தில் மாலை மட்டும் மாற்றிக் கொள்ளப் பட்டது. எங்கள் அண்ணி வீட்டிற்கு வந்த பிறகு 'தமிழ் வாழ்க' என்று பொறிக்கப்பட்ட பதக்கத்தோடு கூடிய தங்கச்சங்கிலியை அவருக்கு அணிவித்தோம்.

□

என் இளமைக் காலம் பெரும்பாலும், புதுவையில் கவிஞர் இல்லத்திலேயே கழிந்தது எனலாம். அந்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நான் இப்போதும் எண்ணிப் பார்த்து மகிழ்வதுண்டு.

வறுமையும்செழிப்பும்கவிஞர் குடும்பத்துக்குச்சகடக்கால் போல் சுழன்று வந்து கொண்டிருக்கும். ஆனால் கவிஞருக்கு வறுமையும் தெரியாது. செல்வ நிலையும் தெரியாது, வந்தவர்களை விருந்தோம்ப வேண்டும். அதில் அவர் ஊக்கமாக இருப்பார். இந்தப் பண்புதான் அவர் எழுதியுள்ள குடும்ப விளக்கில் விளக்கம் பெறுகிறது. தம் வீட்டின் வறுமையைப்பற்றிக் கவலைப்படாமல், பிறர் வறுமைக்கு வடிகாலாகஇருக்க வேண்டும் என்றுநினைப்பவர் கவிஞர்.

கவிஞன் எந்தப் பொருளைப் பார்க்கிறானோ, அந்தப் பொருளாகவே தானும் மாறி விடுகிறான். என்னையும், என் அண்ணன் குழந்தைகளாகிய தமிழ்ச் செல்வம், பாண்டியன் ஆகிய இருவரையும் அடிக்கடி கவிஞர் வெளியில் அழைத்துச் செல்வார். நாங்கள் கடற்கரைச் சோலைக்கு (Botanical garden) ச் செல்லுவோம். கப்பல் களின் வருகைக்கு 'சிக்னல்' வழங்கும்இடத்துக்குக்கீழே அமர்வோம். நாங்கள் மணலில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்போம், கவிஞர் சிந்தனையில் ஆழ்ந்திருப்பார்; கவிஞர்களுக்கே உரித்தான கற்பனை உலகில் நீந்திக் கொண்டிருப்பார். நாங்கள் பலமுறை தட்டி எழுப்பினாலும் சட்டை செய்யாமல் அமர்ந்திருப்பார். சில நேரங்களில் இதற்கு நேர் மாறாக எங்களுடன் சேர்ந்து கடற்கரை மணலில் விளையாடுவார். நண்டுகளை எங்களுக்குப் பிடித்துக் காட்டுவார்; கிளிஞ்சல்களைப் பொறுக்கித் தருவார். உணர்ச்சியால் உந்தப் பட்ட சில வேளைகளில் 'பேப்பர் கொடு' என்று எங்களைக் கேட்பார். அவ் வேளையில் பேப்பர் கிடைக்காமல், அங்குக் கிடக்கும் சிறு துண்டுக் காகிதங்களை எடுத்துக் கொடுப்போம். அதில் கிளி, பருந்து, வண்டு ஆகியவற்றின் சிறு ஓவியங்களை வரைந்து காண்பிப்பார். அவைகளைப் பற்றிப் பாடல் புனைந்து எங்களுக்குப் பாடிக் காட்டுவார். பாவேந்தர் வயதில் முதிர்ந்தவர்; உலகம் வியக்கும் பெருங் கவிஞர். ஆனால் குழந்தைகளுடன் உறவாடும் போது தாமும் குழந்தையாகவே மாறிவிடும்

இயல்பினை உடையவர்'

ஒரு சமயம் நாங்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது, ஒருவன் சுண்டல் விற்றுக் கொண்டு வந்தான். அப்போது நாங்கள் சுண்டலைப் பற்றிப் பாட வேண்டும் என்று விளையாட்டாகக் கேட்டோம். உடனே கவிஞர் மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு காகிதத்தை எடுத்தார். 'சுண்டல் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா?' என்று ஒரு வினாவை எழுப்பி விட்டுக் கவிதை புனையத் தொடங்கி விட்டார்.

இதோ அக் கவிதை:

'சூட்ட டுப்பில் ஒருபா னைக்குள்
வார்த்த நீரில் ஒருபடி கடலை
போட்டெரித்துப் பொங்கிய நீரும்
சுண்ட இறக்கித் தாளித் திடுவதால்
சுண்டல் என்பார் அதன் பெயர்
உண்டால் உண்ண உணத்தெவிட் டாதே.

இக்கவிதையை அவரே நிறுத்தி நிறுத்தி எங்களுக்குப் படித்துக் காட்டினார்; எங்களையும் படிக்கச் சொன்னார். குழந்தைகளாகிய எங்கள் உள்ளத்தைக் கவிதையால் நிறைவு செய்த நிறைகவி பாவேந்தர் பாரதிதாசன்.

◘

'பாரதிதாசன் பிக்சர்ஸில்' பங்குதாரராக இருந்த ஆசிரியர் பாலு இவர்மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார். வழக்கு புதுவை நீதிமன்றத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஒரு நாள் அவசரமாக நீதிமன்றத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். குழந்தைகளாகிய நாங்களும் அவருடன் காரில் வர அனுமதி கேட்டோம். 'சரி! காரில் ஏறிக் கொள்ளுங்கள்;' என்றார். நாங்களும் ஏறிக் கொண்டோம்.

என்னுடைய கைவிரல் கார்க் கதவின் இடையில் இருப்பதைக் கவனிக்காமல், கவிஞர் கதவைச் சாத்திவிட்டார். என் கைவிரல் கதவிடுக்கில் சிக்கிக் கொண்டது. விரல் நசுங்கி இரத்தம் கொட்டத் தொடங்கியது. அதைக் கண்டதும் கவிஞரின் உள்ளம் பதறியது. 'பையனை நாங்கள் மருத்துவமனைக்குக் கூட்டிப் போகிறோம். நீங்

கள் நீதி மன்றம் சென்று விட்டுக் குயில் அலுவலகம் செல்லுங்கள்' என்று உடன் இருந்தவர்கள் கூறினார்கள். கவிஞர், அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. தாமே என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். காயத்துக்குத் தையல் போட்டு மருந்திட்டுக் கட்டி என்னை வீட்டில் கொண்டுவந்து விட்டபிறகே அவர் நீதி மன்றம் சென்றார். காயம் ஆறி நீண்டநாள் ஆன பிறகும்கூட என்னை எப்போது பார்த்தாலும் அடிபட்ட கை விரலைக்காட்டச் சொல்லிப் பார்ப்பார். அவர் பரிவும், அன்பும் என்னை மெய்சிலிர்க்கச் செய்யும்.

எங்கள் தந்தையார் இறந்தபோது, 'கவிஞர் புதுச்சேரியில் இல்லை. திரைப்படத்துக்குப் பாடல் எழுதுவதற்காகச் சென்னை சென்றிருந்தார்.' எங்கள் தந்தையின் இறப்புச் செய்தியைப் பாரி நிலையம் உரிமையாளரான திருவாளர் செல்லப்ப ரெட்டியாருக்குத் தந்தி மூலம் தெரியப்படுத்தினோம். அவர் கண்ணதாசனுக்குத் தெரிவித்தார். கவிஞர் கண்ணதாசன், எங்கோ ஒருஸ்டுடியோவில் இருந்த பாவேந்தரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சம்பந்தியின் இறப்பைத் தெரிவித்தார். உடனே கண்ணதாசனின் காரை எடுத்துக் கொண்டு கவிஞர் சென்னையிலிருந்து புறப்பட்டு விட்டார்.

நாங்கள் கொடுத்த கம்பிச் செய்தி பாவேந்தருக்குச் சென்னையில் கிடைத்திருக்காது என்று நாங்கள் நினைத்தோம். எனவே எங்கள் தந்தையாரின் சடலத்துக்கு எரியூட்டுவதற்காகச் சுடுகாட்டுக்குப் புறப்பட்டோம். சடலத்தைச் சிதையில் வைத்து எங்களுடைய மூத்த அண்ணார் தீவைக்கத் தொடங்கும்போது யாரும் எதிர்பாராத வண்ணம் பாவேந்தர் அங்குக் காரில் வந்து இறங்கினார்.

மேலே அடுக்கப்பட்டிருந்த எரு மூட்டைகளை நீக்கச் சொல்லிச் சம்பந்தியாரின் முகத்தைக் கடைசி முறையாகப் பார்த்தார். அவர் கண்களில் நீருற்றுப் பெருகி ஓடியது. என்றும் நிலை குலையாத பாவேந்தர் அன்று

நிலை குலைந்து குழந்தை போல் அழுததைக் கண்டு எல்லாரும் வியந்தோம். தந்தையைப் பிரிந்து சொல்லொணாத் துயரத்தில் மூழ்கியிருந்த எங்களுக்கு ஆறுதல் கூறினார் பாவேந்தர். வீட்டிற்கு திரும்பியதும் என் அண்ணார் தண்டபாணியை அழைத்து 'நான் வரும் வரையில் சடலத்தை வீட்டில் வைக்கவில்லையே!' என்று கூறி வருத்தப்பட்டார்.

o

1958ஆம் ஆண்டு புரட்சிக் கவிஞரும் அவரைச் சார்ந்த சிலரும் புதுவையில் பாரதியாருக்கு விழா எடுக்க விரும்பினர். மாணவர்களுக்காக இசைப் போட்டி. பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி என்று பாரதியைப் பற்றிப் பல போட்டிகள் நடத்த முடிவு செய்தனர். இளஞ் சிறுவர்களுக்குப் பாவேந்தரே நேரடியாகப் பயிற்சி கொடுத்தார்.

தொண்டு செய்யும் அடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா?

என்ற பாரதியின் பாடலை நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் உள்ள

'மாடுதின்னும் புலையா—உனக்கு
மார்கழித்திருநாளா?

என்ற வர்ண மெட்டில் அவரே பாடிக் காட்டினார்.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு

என்ற பாரதியின் பாடலை உணர்ச்சி பொங்கப்பாடி எங்களுக்குப் பயிற்சி அளித்தது இன்றும் எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

அவ் விழாவிற்குச் சென்னையிலிருந்து பாரதியாரின் புதல்வியர்களையும், பாரதியாரின் நண்பரான சங்கு

சுப்ரமணியத்தையும் சிறப்பு விருந்தினராகப் பாவேந்தர் அழைத்து இருந்தார். விழா பாவேந்தர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பாரதியாரைப் பற்றிப்பலரும் பேசினர். திருவாளர் சங்கு சுப்ரமணியம் பேசும் போது, 'பாரதி சாதியை எதிர்க்கவில்லை; அவ்வாறு எழுதவும் இல்லை' என்று பேசினர். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

பாவேந்தர் எழுந்து பொதுமக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு, சங்கு சுப்ரமணியத்தின் கருத்துக்களை ஆதாரத்துடன் மறுத்துப் பேசினர். அது மட்டுமின்றிப் பொதுமக்களின் கோபத்துக்கு ஆளான சங்கு சுப்ரமணியத்தைத் தம்முடன் அழைத்துச் சென்று அரவிந்தர் ஆசிரமத்தில் தங்க வைத்து இரவோடிரவாக மிகப் பாதுகாப்புடன் கடலூர் வழியாகக் காரில் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

திருவாளர் சங்குசுப்ரமணியம் பார்ப்பனராக இருந்தாலும், பார்ப்பனீயத்தை எதிர்க்கும் பாரதிதாசன் அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்துப் பத்திரமாக ஊருக்கு அனுப்பிவைத்தது எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது.

குற்றம் குறைகளைக் கண்ட இடத்திலேயே கண்டிக்கும் இயல்புடையவர் பாரதிதாசன். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், யார் தலைவராக இருந்தாலும் அஞ்சும் வழக்கம் அவருக்குக் கிடையாது. எந்தச் சூழ்நிலையிலும், எந்த இடத்திலும் தம் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை அச்சமின்றி வெளியிடும் ஆற்றல் மிக்கவர் அவர்.

1959ஆம் ஆண்டு புதுவை திரு.முருகையன் அவர்களின் திருமணத்தைப் புரட்சிக்கவிஞர் தலைமை ஏற்று நடத்தினர். அத்திருமண விழாவில் பழைய கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கிப்பேசிய தமிழ்ப் புலவர் ஒருவரை உட்காரச் செய்ததுடன், அவருடைய மூடக்கொள்கைகளைக் கடிந்துபேசினர்; புலவருக்கும் அறிவுரைவழங்கினர்; மணமக்களுக்குத் தேவையான கருத்துக்களையே மணவிழாவில் கூறவேண்டும் என்றும் வற்புறுத்தினர்.

காலத்துக்கேற்ற புதுமையான கருத்துக்களை மண மக்கள் ஏற்றுக்கொண்டு வாழ்க்கையிலும் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

'காதலர்இருவர்கருத்தொருமித்து,ஆதரவுபட்டதே இன்பம்' என்று விளக்கினார். 'காதலுக்கு வழிவைத்துக்கரும்பாதை சாத்தக் கதவொன்று கண்டு' குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் நன்மை சேர்ப்பது மணமக்கள் கடமை என்பதைக் குறிப்பிட்டுக் கூறினார். முடை நாற்றம் வீசும் மூடக் கருத்துக்களை வன்மையாகச் சாடினார்.

பாவேந்தர் பிறந்த நாளைப் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் வாழ்ந்த காலத்தில் வெளியான அவருடைய நூல்களிலும் ஏடுகளிலும் அவர் பிறந்த நாள் 27-4-1891 என்றும் 17-4-1891என்றும். 9-4-1892 என்றும் 18-4-1891 என்றும் பலவாருகக் குறிப்பிடப்பட்டுள்ளது.


தம் பிறந்த நாளினை 18—4—1891 என்று தம்மிடம் பாவேந்தர் கூறியதாக 'பாவேந்தர் நினைவுகள்' என்ற நூலில் கவிஞர் முருகுசுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் முருகு சுந்தரம் ஒரு முறை என்னை நேரில் சந்தித்த போது 'நமக்கு ஏன் வீண் குழப்பம்! புதுவை நகர் மன்றத்தில் அவர் பிறப்புப் பதிவாகியிருக்குமே! புதுவை போனால் நகர் மன்றம் சென்று அவர் பிறப்புத் தொடர்பான ஆவணங்களைப் படி எடுத்துக் கொண்டு வாருங்கள்!' என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்.

நான் அடுத்த முறை புதுவை சென்ற போது புதுவை மேரி (நகரமன்றம்)யின் மேலாண்மையிடம் தொடர்பு கொண்டு பாவேந்தர் பிறந்த நாள் பதிவேட்டின் நகல் ஒன்று பெற்றேன். அதிலுள்ள செய்தி வருமாறு:


"சு.கனகசபை (தந்தை சுப்புராயன்) புதுச்சேரி, செங்குந்தர் வீதி, வயது41, செங்குந்தர் ஜாதி—இலட்சுமி அம்மாள் (தந்தை பரதேசி முதலியார்)—

சுப்புரத்தினம்—பிறந்த நாள் 1891 ஏப்ரல் 29ஆம் நாள் புதன் கிழமை—இரவு 10 மணி 15 நிமிடங்கள்—ஆண் குழந்தை."



இச்செய்திக்குச் சாட்சிகளாகத் திரு. மு.பாவாடைப் பிள்ளை, திரு.அ. கந்தசாமி நாயக்கர் ஆகிய இருவரும் கையொப்பம் செய்துள்ளனர். பிரெஞ்சு அரசின் சட்டப்படி பிரெஞ்சிந்தியப் பகுதியில் குழந்தை பிறந்தவுடன் சாட்சியங்களுடன் மேரியில பதிவு செய்ய வேண்டும்.

பாவேந்தரின் பிறந்தநாள் பற்றிய ஆதாரங்களை நான் திரட்டிக் கொண்டிருந்தபோது என் அண்ணியார் வசந்தா தண்டபாணி அவர்கள் தஞ்சைப்புலவர் மருதவாணனுக்குப் பாவேந்தர் தமது கைப்பட எழுதியிருந்த கடிதமொன்றைத் தந்தார்கள். 1958-ஆம் ஆண்டு புலவர் மருதவாணன் பாவேந்தருக்குப் பிறந்தநாள் வாழ்த்து அனுப்பியிருந்தார். அவ்வாழ்த்துக் கடிதத்துக்குத் தாம் எழுதிய மறுமடலில், பாவேந்தர் தமது பிறந்த நாள் 29—4—1891 என்பதை அவரே உறுதிப்படுத்துகிறார். அக்கடிதம் நமக்குக் கிடைத்த மற்றொரு சான்றாகும்.




தம் பிறந்த நாளை எல்லாரும் சரியாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இக்கடிதத்தைக் குயில் ஏட்டில்

வெளியிடுமாறு பொறுப்பாசிரியரான திரு. தண்ட பாணிக்கு அறிவித்தார்.

பாவேந்தருடன் பல்லாண்டுகள் ஒன்ருகப் பணிபுரிந்த வித்துவான் புதுவை மு.மாணிக்கம் அவர்கள் 1946ஆம் ஆண்டு பாவேந்தருக்குப் பொற்கிழி அளித்த விழாவின் போது பாவேந்தரின் வாழ்க்கைவரலாற்று நூலினை வெளியிட்டார். அந்நூலில் பாவேந்தரின் பிறந்தநாளைக் குறிப்பிடும் கீழ்க்கண்ட வெண்பா உள்ளது.

'ஆயிரத்தெண்ணூற்றுத் தொண்ணூற்ருேராமாண்டில்
ஒயவரும் ஏப்ரலிரு பத்தொன்பான்—தூயநாள்
சுப்புரத் தினச்செம்மல் தோன்றினர் என்றறைவர்
இப்புவியில் வாழ்பெரியோ ரே.'

எனவே மேலே குறிப்பிட்டுள்ள மூன்று சான்றுகளும் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள் 29-4-1891 என்பதை உறுதிப்படுத்துகின்றன.

பாவேந்தரின் பிறந்தநாள் பற்றி இருந்த குழப்பத்தைப் போன்றே, அவருடைய அன்னையார் பெயரைக் குறிப் பதிலும் குழப்பம் இருந்தது. அன்னையாரின் பெயர் இலட்சுமியா? மகாலட்சுமியா? என்பதே அக்குழப்பம்.

அக்குழப்பத்தின் காரணமாகத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்தார் பள்ளி மாணவர்க்காகத்தாம் வெளியிட்ட பாவேந்தர் வரலாற்றில் அவருடைய அன்னையார் பெயரையே விட்டுவிட்டனர். புதுவை நகர் மன்ற ஆவணத்தில் கண்டபடி பாவேந்தரின் அன்னையார் பெயர் 'இலட்சுமி' என்பது தெளிவாகிறது.

□



இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர்
இராதா கிருட்டிணன்.
'குயில்' ஏட்டில் மருத்துவம் பற்றி இவர்
பாடல்கள் எழுதியபோது,
பாவேந்தர் இவருக்குச் சூட்டிய பெயர்
'சித்தன்' திருவாவடுதுறைப் பதினெண்
சித்தர் சங்கம் இவருக்கு வழங்கிய பெயர்
'பாவலர் மணி.'

கீட்ஸ்போல மருத்துவப்
பட்டம் பெற்ற இவர்,
புதுவை அரசின் பொது
மருத்துவமனையில்,
பல் மருத்துவராகப் பணியாற்றி
ஓய்வு பெற்றவர்.

அரும்புப் பருவத்தில்
இவருக்குத் தொடக்கப்பள்ளி
ஆசிரியராக இருந்த பாவேந்தர்,
அரும்புமீசைப் பருவத்தில்

யாப்பிலக்கண ஆசிரியராகவும்
இருந்திருக்கிறார். இவர்-
பாரதியின் பைந்தமிழையும்,
பால் ஸாக்கின் பிரெஞ்சுமொழியையும்
நன்கு கற்றுத் தேர்ந்தவர்.
புதுவையில் உள்ள பல
மன்றங்களுக்கு இவர் தலைவர்;
செயலர்; தொண்டர்.

'இந்தியவார் விக்*'
காமராசர் முன்னால்,
இவர் 'குறிஞ்சி' என்னும்
தலைப்பில் பாடியபோது,
பாட்டரங்கத் தலைவர் பாவேந்தர்
இவருக்கு வழங்கிய வாழ்த்துப்பா:

வித்துவான் புதுவைச் சித்தர்
இராதா இந்நேர மிங்கே
நத்துவார்க் கெலாம் இனிக்க
நறுங்குறிஞ்சித்தேன் பெய்தார்.
அத்தவக் கவிஞர் நன்னூல்
ஆய்ந்தவர்; தமிழ்க் காப்பாளர்.
முத்தமிழ்ச் செல்வர் வாழி!
மொழிகின்றோம் அவர்க்கு நன்றி!

சித்தனார் வழங்கும்
'விருந்து' க் கட்டுரை
நம் சிந்தனைக்குச் சுவையான விருந்து.

# விருந்து

## பாவலர் மணி சித்தன்

'புரட்சிக்கவி' எனும் தேனினுமினிய செந்தமிழ்க்கவிதை நூலைத் தமிழுலகுக்கு வழங்கிப் 'புரட்சிப்பாவேந்தர்'

*Lord warwick-The king maker in the English history

என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர் நம் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்கள்.

அவர் பாடல்கள் அனைத்தும் புரட்சி மணம் வீசுவன. எனினும் அவர் பேச்சும் புதுமைப் புரட்சியை ஊட்டும் தன்மையதாகவே விளங்கிற்று.

ஒரு திருமணவிழா பாவேந்தர் தலைமையில் நடைபெற்றது. அத்திருமண விழாவிற்குப் பாவேந்தருடன் யானும் சென்றிருந்தேன். மணமகன் பட்டதாரி இளைஞன். மணமகள் ஓரளவே படித்தவள். விழாவில் பாவலர் பெருமான் அறிவுரை வழங்குகிறார். அது புதுமையும் புரட்சியும் கலந்த அறிவுரையாக மிளிர்ந்தது.

'மணப்பெண்ணுக்குச் சில அறிவுரைகள்' என்று தொடங்கினார். பெண்ணுரிமை பற்றிப் பாரதியாருக்குப் பிறகு பாவேந்தர் தாம் மிகுதியாகப் பாடியவர் என்பதை நாம் அறிவோம். இனி அவரின் அறிவுரையைக் காண்போம்:

□

''தமிழ் நாட்டினர் விருந்தோம்பலில் சிறந்தவர்கள்: வந்த விருந்தைப் பேணி அனுப்பி விட்டு, வரும் விருந்தை எதிர் நோக்கி நிற்பார்கள்.

விருந்தில்லாத உணவு மருந்துக்கு ஒப்பாகும் என்பது தமிழ்ப் பழமொழி.

விருந்தில்லாத வீடும், குழந்தையில்லாத வீடும் ஒன்றென்று பாடியிருக்கிறார்கள்.

திருவள்ளுவரும் விருந்தோம்பலைப்பற்றி ஓர் அதிகாரமே பாடி வைத்துள்ளார். இப்படியெல்லாம் நம் நூல்கள் பேசும்.

மணமகளே! திருமணத்திற்குப்பின் நீங்கள் தனிக் குடித்தனம் செய்கிறீர்கள். நீ, உன் கணவன், ஒரு குழந்தை —இது உன் குடும்பம்.

நீ உங்கள் இருவருக்கும் அளவாகப் பகல் உணவு சமைத்திருக்கிறாய். கணவன் தன் அலுவலகத்திலிருந்து பகல் 1 மணியளவில் வீட்டிற்கு வருகிறான். வரும் போது உடன் ஒரு 'தீ வட்டியை' அழைத்துக் கொண்டு வருகிறான்.

'கண்ணகி! இவன் என் பள்ளித் தோழன். இந்த ஊரில் தான் தொழில் செய்கிறான். இவனை வழியில் பார்த்தேன்; அழைத்து வந்து விட்டேன்; இலைபோடு'— என்று கூறுகிறான்.

கணவன் ஆணை; புதுவிருந்து. கண்ணகி என்ன செய்வாள்! உடனே இரண்டு இலைகள் போடுகிறாள்; இருவருக்கும் உணவு பரிமாறுகிறாள். இருவரும் உணவு உண்கின்றனர்.

'கண்ணகி! இன்று கூட்டு, குழம்பு எல்லாம் நன்றாயிருக்கின்றன. இவனுக்கு இன்னும் சோறு வை! கூட்டு போடு!' கணவன் கட்டளை இடுகிறான்.

விருந்துண்ண வந்தவர் 'வேண்டாம்; போதும்' என்கிறார்.

'இவன் அப்படித்தான் சொல்லுவான், நீ போடு' என்கிறான் கணவன். நீ சோறும், குழம்பும், கூட்டும் சற்றுக் கூடுதலாகவே விருந்தினர் இலையில் படைக்கிறாய்.

'வாழைப்பழம் இருந்ததே! கொண்டுவா!' கணவரின் அடுத்த கட்டளை. இருவரும் உணவு உண்டு எழுந்தனர்.

பிற்பகல் இரண்டு மணிக்கு உன் கணவர் அலுவலகம் கிளம்பிவிட்டார். விருந்தாக வந்த ஆளும் நன்றி சொல்லிவிட்டு அவருடனே நடந்தான்.

இனி நீ உணவு உண்ண வேண்டும்!

அடுக்களையுள் சென்று, சோற்றுப்பானையைப்பார்க்கிறாய். அதில் பருக்கையும் இல்லை; குழம்பும் இல்லை; கறியும் இல்லை, அந்த வாழைப் பழத்தைத்தான் விட்டு வைத்தார்களா? அதையும் தின்று தொலைத்தார்கள்.

மீண்டும் உணவு தயார் செய்தாகவேண்டும். உனக்கோ காலையிலிருந்து வேலை செய்த அலுப்பு. சரி. இரவு பார்த்துக் கொள்வோம். இனியொரு முறை எப்படிச் சமைப்பது? என்று ஒரு குவளை தண்ணீரைக் குடித்து விட்டுச் சுருண்டு கொள்கிறாய்.

மாலை அலுவலகத்திலிருந்து உன் கணவன் வீடு திரும்புகிறான். 'கண்ணகி! கடற்கரைக்குப் போகலாம்—கிளம்பு' என்கிறான். குழந்தையைச் சுமந்து கொண்டு நீ பின்னே நடக்க அவன் முன்னே நடக்கிறான்.

கடற்கரைப் பூங்காவை நீங்கள் அடைகிறீர்கள். அங்கே வெள்ளைக்காரர்களின் குழந்தைகளைக் கை வண்டிகளில் வைத்துத் தள்ளிக்கொண்டே சிலபணிப்பெண்கள் உலவுகிறார்கள். அக்குழந்தைகளைக் கண்டவுடன் உன் கண்கள் மகிழ்ச்சியால் மலர்கின்றன. ஏதோ ஒரு புதுமையான படைப்பைக் கண்டவள் போலத்திகைத்து நிற்கிறாய்.

என்ன! அதுவும் குழந்தைதான்; உன்கையில் இருப்பதும் குழந்தைதான். பின் ஏனிந்தத்திகைப்பு?

வெள்ளைக்காரக் குழந்தைகள் கொழு கொழுவென்று மூக்கும் விழியுமாய்ப் பார்ப்போர் விழிகளைக் கவரும் வண்ணம் உள்ளன. உன் குழந்தை நாக்குப்பூச்சியைப் போல் இருக்கிறது.

ஏன் அந்தக் குழந்தைகள் அப்படி? உன் குழந்தை இப்படி? இது உன் உள்ளத்தில் எழுந்துள்ள வினா.

வெள்ளைக்காரி மணிக்கணக்கோடு சாப்பிடுவாள். காலை 8 மணி; பகல் 12 மணி; இரவு 8 மணி. அவள் எப்போதும் பகல் பட்டினி கிடப்பதில்லை.

அவள் கணவன், பகல் சாப்பாட்டிற்கு வரும்போது ஒரு விருந்தினனை அழைத்து வரமாட்டான். அப்படியே அவன் ஒருவனை விருந்துண்ண அழைக்க விரும்பினால், அதற்கொரு நாளைக் குறிப்பிட்டு, மணியையும்சொல்லி அன்றைக்கு வரச்சொலவான். அன்று அவனுடன்அனைவருக்கும் உணவு சிறந்தமுறையில் தயார் செய்திருப்பார்கள். எல்லாரும் மகிழ்ச்சியுடன் விருந்துண்பர்.

'நம் மனைவி இருவருக்குத்தான் உணவு தயார் செய் திருப்பாள். நாம் மூன்றுமவனை அழைத்துப் போகிறோமே' என்று நமது கணவர்கள் சிந்திப்பதில்லை.

நம் நாட்டுப் பெண்களுக்கு இப்படிப்பட்ட இக்கட்டுக ளோடு, வாரத்தில் இரண்டு மூன்று விரதநாட்கள்வரும், இப்படிப்பட்டினி கிடந்து உடல்வலி இழந்த பெண்கள், பிள்ளைகள் பெற்றால் அவை நாக்குப்பூச்சிகளைப் போல் இல்லாமல் வேறு எப்படி இருக்கும்?

கணவன் செய்கிற தவற்றினால் இந்த நாடு வலிமை வாய்ந்த பிள்ளைகளைப் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது. அறிவாற்றல் அற்றுச் சூம்பல் தோளும், ஒளியிழந்த கண்ணும் உள்ள பிள்ளைகள் தம் மொழியையும் நாட் டையும் காப்பாற்றுதல் கூடுமோ? மீளாத அடிமை நிலை தானே இங்கு மிஞ்சும்?

'நடுப்பகல் ஒரு மணிக்கு, ஒரு வீட்டிற்கு முன்னறிவிப் பின்றி உணவுக்குச் செல்கிறோமே! அச் செய்கை அந்த வீட்டில் உள்ளவர்களைப் பாதிக்குமே!' என்ற அறிவு இல்லாது, சோறு அகப்பட்டால் போதும் என்று எண்ணு கின்றவன் சிந்தனை இல்லாத செக்குமாடு. அவனுக் குப் புத்தி புகட்டவேண்டியது பெண்கள் கடமை.

உன் கணவன் அறியாமையாலோ அன்பாலோ ஒரு வனை அழைத்து வந்து உணவிடச் சொன்னால், நீ துணி வோடு 'என்னங்க' மணி ஒன்றாகிறது; இது வரை அவர் சாப்பிடாமலா இருப்பார்?' என்று ஒரு போடு போடு.

வந்தவன் 'வேண்டாம்; நான் சாப்பிட்டு விட்டேன்' என்று சொல்லிக் கம்பி நீட்டுவான். தொலையட்டும் என்று விடு! அப்போது தான் உன் கணவனுக்கும் அது உறைக்கும்!

ஒரு வீட்டுக்குச் சாப்பிடச் செல்பவர் குறைந்ததுஇரண்டு மணி நேரத்திற்கு முன்பாவது அறிவிப்புச் செய்து விட்டுச் செல்ல வேண்டும்! இந்தப் பழக்கம் மேலை நாடு களில் உள்ளது; நமக்கும் வர வேண்டும்.

வந்த விருந்தை வரவேற்பது—வரும் விருந்தை எதிர் பார்த்திருப்பது—இன்றைக்கு இயலாத செயல்கள்! இன்றைய நாட்டு நிலையே வேறு.''

இது பாவேந்தர் மணமகனுக்கு மட்டும் வழங்கிய அறிவுரையன்று; எல்லாரும் கேட்டுணர வேண்டிய அறிவுரை. இது புதுமைக் கருத்து மட்டுமன்று! புரட்சிக் கருத்தும் அல்லவா?

◘



பண்டிகமணி கதிரேசன் செட்டியார்
புதுவைக் கூட்டத்தில் பாவேந்தரை
'அட்டைக் கிளாஸ் வாத்தியார்-'
(துவக்கப்பள்ளி ஆசிரியர்) என்றுகூறி
அவமதித்ததற்காகக் கூட்டத்தில்
இருந்தவர்கள் கிளர்ந்தெழுந்தனர்.
பண்டிதர் பாடுதிண்டாட்டமாகிவிட்டது.

பாவேந்தரோடு பணிபுரிந்த மற்றொரு
அட்டைக்கிளாஸ் வாத்தியார்
திருவாளர் சிவகுருநாதன்
அவருடைய மகன் சிவ. கண்ணப்பா
இக்கட்டுரை ஆசிரியர்.

பாவேந்தரின் கம்பீரமான
தோற்றத்தில் படிந்து மகிழும்
பழக்கமுடைய இவர்,
பாவேந்தரின் பாட்டையும்
பாடி மகிழ்ந்தவர். பாவேந்தரைப்
பக்கமிருந்து பார்த்த இவர்,
அவருடைய பண்பு நலன்களை
இக்கட்டுரையில் பாராட்டி மகிழ்கிறார்.

# என் தந்தையின் நண்பர் செந்தமிழ்த் தொண்டர்

*சிவ. கண்ணப்பா*

எனக்கு வயது பத்து இருக்கும். என் தந்தையார் 'சுயர் கூப்' பள்ளிக்கூடத்தில் ஆசிரியர். அவர் பெயர் சிவகுருநாதன். ஆனால் மக்கள் அழைப்பது அட்டைக் கிளாஸ் வாத்தியார்.

மிசியோன் பள்ளிக்கூடத்தில்—அதாவது இன்றைய வ.உ.சி உயர்நிலைப் பள்ளியில் வரலாற்றுச் சிறப்புடைய விழா. மதச்சார்புடைய கல்வியை மதச்சார்பற்ற கல்வி என்று மாற்றியதைச் சிறப்பிக்கும் வகையில் விழா.

மதச்சார்பற்ற கல்வியாக மாற்றிய பிரஞ்சுப் பெருமகனார் ழுய்ல் ஃபெர்ரி(Jules Ferry) என்ற நல்லவர். அவர் படம் அன்று திறக்கப்பட்டது. அன்று திறந்த அதேபடம் இன்றும் வ.உ.சி. உயர்நிலைப்பள்ளியில் உள்ளது.

அந்த விழாவுக்காகத்தான் சுயர் கூப் பள்ளிக்கூட மாணவர்கள் அன்று நடித்தனர், கதைவசனம் எழுதியவர்என் தந்தையார்; பாடல்கள் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசனார். நாடக ஒத்திகை எங்கள் வீட்டில் நடக்கும். பாரதிதாசனார் என் தந்தையாரின் நண்பர்; ஒருசாலை மாணாக்கரும்கூட. இருவரும்பேராசிரியர் பங்காரு பத்தரிடம் பயின்றவர்கள். அதனால் ஒத்திகை பார்க்கப் பாரதிதாசனார் எங்கள் வீட்டுக்கு வருவார்.

காலில் பாந்தூப்ள்*(Pantoufle)ஆடை கதர்.அமெரிக்கன் கிராப்.சுறுக்கான அரை மீசை. உதட்டில் ஓர் இளநகை. கனிந்த பார்வை. அந்த இளநகையை இன்றுவரை எந்த ஆடவரிடமும் கண்டதில்லை. 'சிவகுரு' என்ற இனிய குரலை எழுப்பிக்கொண்டே உள்ளே வருவார்.

எங்கள் வீடு குசக்கடை வீதியில்—அதாவது இன்றைய அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதியில் ஒருசிறு வீடு.ஒரே ஓர் அறைதான் உண்டு. அந்த அறையில் ஒரு கைப்பிடி நாற்காலியில், ஒருகால் நாற்காலி மேலும் ஒருகால் கீழுமாக கம்பீரமாகச் சாய்ந்து உட்காருவார். அவர் ராஜமிடுக்கோடு உட்கார்ந்திருப்பதை-பின்னால் தீட்டப் போகும் அந்த அழகோவியத்தை-என் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு தலைசாய்ந்து ரசிப்பேன்.

'டேய் நீ பாடுவியா?' என்று கேட்டார். 'பாடுவேன்' என்று நான் தலையசைத்தேன். பாடச்சொன்னார். எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள் பாடியிருந்த 'எவரனி' என்ற தெலுங்குப் பாட்டைப் பாடினேன். அவருடைய உதட்டில் ஓர் புதிய நகை அரும்பியது. என்னைக் கூர்ந்து பார்த்தார். 'நான் ஒரு பாட்டு சொல்லித் தரேன்; பாடுறியா?' என்றார். 'உம்' என்றேன்.

---

* Pantoufle- slipper. பிரெஞ்சுச் சொல்.

உடனே தாள் எடுத்தார்; எழுதினர். முதல் வரியைப் பாடிக் காட்டினர். நானும் பாடினேன். அந்த முதல் வரி என்ன?

'கூவாயோ கருங்குயிலே'. இந்தப் பாடல் தான் பின்னர் நாடக விழாவில் பாடப்பட்டது. பிரெஞ்சுக் காரர்கள் பாவேந்தரை மதிப்பதற்குக் காரணமாக இருந்த பாடல் இது தான். நாவலர் நெடுஞ் செழியன் இந்தப் பாடலை ஓசை நயம் குன்றுமல் எடுத்துரைக்கும் போதெல்லாம் பாரதிதாசனரின் இள நகையோடு கூடிய முகம் தான் என் கண் முன் நிற்கும்.

■

துரைசாமி முதலியார் அந் நாளில் புதுவைப் பேரறிஞர். இவருக்கும் பாரதிதாசனர்க்கும் வித்வக் காய்ச்சல். இருவரும் சுவைமிக்க துண்டுப் பிரசுரங்களைப் பரிமாறிக் கொள்வர். துண்டுப் பிரசுரத்தோடு துரைசாமி முதலியார் எங்கள் வீட்டுக்கு வருவார். 'சிவகுரு! பார்த்தியா அவன் வேலையை?' என்று என் தந்தையாரிடம் துண்டுப் பிரசுரத்தைக் காட்டுவார்.

என் தந்தையார் துண்டுப் பிரசுரத்தைப் படித்து விட்டுக் 'கொஞ்சம் வேகமாத்தான் இருக்கு, போனப் போகுது. இப்படியே விட்டுடுங்க' என்று சமர்தானப் படுத்துவார்.

'நீ எப்போதும் இப்படித்தான்பா' என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார் துரைசாமி முதலியார்.

என் தந்தையார் பாவேந்தரைச் சந்தித்தால் 'போனல் போகுது. இதைப் பெரிசு படுத்தாதே' என்று சொல்வர். உடனே பாவேந்தர் 'நீ இப்படித்தான் சிவகுரு. இவன்களை எல்லாம் உடனுக்குடனே சூடு கொடுக்காட்டா நம்ம மேலே ஏறி உட்கார்ந்துக்குவானுங்க' என்று சொல்லுவார்.

துரைசாமி முதலியார் மேல் இவ்வளவு பகைமை பாராட்டிய பாவேந்தர் ஒரு நாள் எங்கள் இல்லத்துக்கு வந்தார். அப்போது எங்கள் வீடு வேளாளர் வீதியில் இருந்தது. திண்ணையில் கம்பீரமாக உட்கார்ந்தார். என் தந்தையார் வெளி வந்ததும், 'சிவகுரு! நம்ம பண்டிதர் மறைஞ்சுட்டாரே. அவருக்கு ஓர் இரங்கல் கூட்டம் போட வேண்டாமா?' என்றுர். அப்படியே

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. துரைசாமிப் பண்டிதர் மறைந்ததும் பாவேந்தரிடம் இருந்த வித்வக் காய்ச்சலும் மறைந்து விட்டது. திண்ணையில் உட்கார்ந்த வண்ணமே இருவரும் 'இரங்கற் கூட்ட நிகழ்ச்சி நிரல்' தயாரித்து விட்டனர்.

❒

ஈசுவரன் கோவிலுக்கெதிரில் பிரம்மராயர் சுப்பிரமணிய ஐயர் வாழ்ந்து வந்தார். இவர் பிரஞ்சுக் கல்லூரியில் பேராசிரியர். ஒரு நாள் பேராசிரியர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் கையில் கவிதை நூல் ஒன்றிருந்தது. என் தந்தையாரிடம் வாசித்துக் காட்டினார். அத்தனையும் சீர்திருத்தப் பாடல்கள். அந்தப் பாடல்களை வாசிக்கும் போது என் தந்தையார் ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார். உடனே சுப்பிரமணிய ஐயர் 'சிவகுரு! நான் என்ன இப்படிப் பாடி இருக்கறன்னு நினைக்கிறியா? பாரதிதாசன் பாட்டுக்கிட்ட இதுகள் நிக்காது. அந்த மாதிரி இனி எவனும் பாட முடியாது. ஐயர் நானு பாடிட்டா நாளைக்குப் பாரதிதாசனை யாரும் திட்டமாட்டாங்கள்ளே!' என்று சொன்னார். புதுச்சேரியில் இருந்த படித்த பிராம்மணர்கள் பாரதிதாசனரை எவ்வளவு மதித்தார்கள் என்பதன் ரகசியத்தை அன்று புரிந்து கொண்டேன்.

ஒருநாள் பாவேந்தர் தம் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். அவர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த லெமேர் ராமசாமி ஐயரின் மகனைச் சந்திப்பதற்கு நான் சென்றிருந்தேன். பாவேந்தர் படுத்திருந்ததை நான் கவனிக்கவில்லை, ஐயர் வீட்டிலிருந்து நான் வெளியே வந்ததும், 'டேய்' என்ற குரல் கேட்டது; திரும்பினேன். ஊர்ந்து வரும் குழந்தைபோல் கவிஞர் படுத்திருப்பதைப் பார்த்தேன். நான் பத்து வயதில் புன் சிரிப்போடு பார்த்த அதேமுகம்.

'நான் கவனிக்கலே—மன்னிச்சுக்குங்க' என்றேன்.

'அப்பா சௌக்கியமா இருக்காராடா. நான் விசாரித்தேன்னு சொல்லு' என்று சொன்னார்.

'சொல்றேங்க' என்று கூறி வணங்கி விடைபெற்றேன். அடுத்து என் தந்தையாரின் நண்பரைச் சந்தித்தது பிணக் கோலத்தில்தான்.



வாத்தியார்-
கனக .சுப்புரத்தினம்
நாட்டுக்குப்
பெரிய பாவேந்தராக இருக்கலாம்.
ஆனல்—
வீட்டுக்குத்தாத்தா என்பதில் ஐயமில்லை.
பாட்டுத் தாத்தாவின் உறவு
பேரன் பேத்தியிடம் எவ்வாறு இருந்தது
என்பதை,
இக்கட்டுரை படம்பிடித்துக் காட்டுகிறது.

காங்கிரசும் கோழிக்கறியும்
காமராசருக்கு
மிகவும் பிடித்தமான விஷயங்கள்
என்பது நாடறிந்த செய்தி.
அவருக்குப்
பாவேந்தரை மிகவும் பிடித்திருந்தது
என்ற செய்தி
பலருக்குத் தெரியாது.

பாவேந்தரின் விருந்தாளியாகக்
காமராசர் புதுவை வந்திருந்தபோது
தமது பிஞ்சு நெஞ்சில்
பதிவான காட்சிகளைக்
கொஞ்சு தமிழில் கூறுகிறார்,
பாவேந்தரின் மகள் வழிப் பேத்தி
தமிழ்ச் செல்வம் முத்தையா.

'அடடே தின்னும்மா!' என்று
ஆப்பிள் பழத்தை
அன்போடு தந்த தாத்தாவுடன்
அன்று புதைக்கப்பட்ட
தமது ஆசைகளைக்
கண்ணீர்க் கதையாக்கிக்
காட்டுகிறார் பேத்தி.

# தமிழ் தந்த செல்வம்

திருமதி. தமிழ்ச்செல்வி முத்தையா

1952 ஆம் ஆண்டு
அக்டோபர் இரண்டு
ஆம். அதுதான் என் பிறந்தநாள்

நிறைமதி நாளன்று நான் பிறந்தபோது, எதிர்வீட்டு அம்மான் பார்க்க வந்தார்களாம். ''அக்டோபர் 2-ஆம் தேதி பிறந்திருக்கிறாள். இன்று காந்தியின் பிறந்த நாள். காந்திமதி என்று பெயர் வையுங்கள்'' என்று சொல்லிச் சென்றார்களாம்.

எங்கள் மாமா மன்னர் மன்னன் கூடத்தில் இருந்த தாத்தாவைப் பார்த்து, 'பெயர் ஏதாவது சொன்னால் மேரியில் பதிந்துவிடலாம்' என்று கூறியபோது தாத்தா உலாவத் தொடங்கினாராம்; அதாவது சிந்திக்கத் தொடங்கிவிட்டார் என்பது பொருள்.

கொஞ்ச நேரம் கழித்து அங்கிருந்த என் பெரியம்மா சரசுவதி. ''ஏம்பா, கண்ணகி என்று வைத்தால் என்ன?'' என்று கேட்டபோது, ''சரியில்லை அம்மா! கண்ணகி மிக உயர்ந்த குடும்பத்துப் பெண். அவள் படிப்பறிவுள்ளவளாக இருந்தும், வாழ்க்கை தொடங்கிய காலத்தில் இல்லையெனினும், தான் தொல்லைப் படப்பட, தன் அறிவைப் பயன்படுத்தித் தன் கணவனை எதிர்த்துப் போராடியிருக்கலாம். மாறாக கணவனை இழந்த பிறகே போராடுகிறாள். எனவே, அவளும் அழிந்தாள். கணவனும் அழிந்தான்; நாடே அழிந்தது. அவளுடைய வாழ்க்கை என் பேத்திக்கு வேண்டாம். என் பேத்தி தமிழுக்குச் செல்வம்; தமிழ் தந்த செல்வம். எனவே தமிழ்ச் செல்வம்' என்று தான் அவளை அழைக்க வேண்டும்; 'தமிழ்ச் செல்வி' எனச் சொல்லக்கூடாது என்று கூறினாராம். தாத்தாவின் விருப்பப்படி 'தமிழ்ச் செல்வம்' என்று எனக்குப் பெயர் சூட்டப்பட்டது.

❑

அறிவுரைகள் அடங்கிய சிறுசிறு கதைகள் எங்கட்குச் சொல்லி, எனக்கும் தம்பி பாண்டியனுக்கும் சிரிப்புக் காட்டித் தாமும் சிரிப்பார், எங்கள் தாத்தா. அதில் ஓர் ஊமையின் கதை. ஊமை ஒருவன் தோப்புக்கு மலங் கழிக்கச்சென்றான். அப்போது அவ்வூர்ப் பணக்காரன் ஒருவனும்சென்றான். பணக்காரனுக்குப் பின்னால் மலத்தில் ஒரு நாவற்பழம் விழுந்தது. ஊமையைக் கவனிக்காத பணக்காரன் நாவற்பழத்தை எடுத்து வேட்டியால் துடைத்து விட்டு வாயில் போட்டுக் கொண்டான். அந்நொடியில் ஊமை கைதட்டிச் சிரித்தபடி எதிரில் நின்றான். பணக்காரன் அதிர்ந்து போனான். 'பின்னர் ஊமை தானே'— என்று நினைத்து அவ் விடத்தை விட்டு நகர முயன்ற போது, ஊமை ஏளனச்சிரிப்புடன் சாடைகாட்டி 'ஊராரிடம் சொல்லப் போகிறேன்' என்றானும். பணக்காரன் மிகவும் அஞ்சி ஊமையின் கைகளைப் பிடித்துஃ

கெஞ்சி, 'எவரிடத்திலும் சொல்ல வேண்டாம்; உனக்கு எது வேண்டுமானாலும் செய்கிறேன்' என்று உறுதி கூறினான். ஊமை சிரித்துக்கொண்டே சென்று விட்டான்.

அன்று மதியம் மேற்படி பணக்காரனின் மிகப் பெரிய அரிசி மண்டிக்குச் சென்றான் ஊமை. அங்கே கடையினுள் அரிசியில் கல்லைச் சில ஆட்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஊமையைப் பார்த்து விட்டு கடையின் வாசலில் வந்திறங்கிய பணக்காரனுக்குச் சாடை காட்டினார்கள். பணக்காரன் ஊமையைமிரட்ட எண்ணியபோது காலையில் நடந்தது நினைவுக்குவந்தது. ஊமையைஅருகில் அழைத்து 'கல் கலந்த அரிசியை என் வீட்டிற்குப் பயன் படுத்திக் கொள்கிறேன். இனி மேல் அரிசியில் கல் கலக்கமாட்டேன்' என்று கூறினான். ஊமை சுட்டு விரலைக்காட்டி அசைத்து விட்டுச்சென்றான். அவமானத்துக்கு அஞ்சிய பணக்காரனைக் கொண்டு அந்த ஊமை ஊரார்க்குப் பல நன்மைகள் செய்து விடுகிறான். இந்தக்கதையைத் தாத்தா ஒருநாள் சொல்லவில்லை; பல நாளில் பல்வேறு நிகழ்ச்சிகளாகச் சொல்லியிருக்கிறார். எனக்கு நினைவு தெரிந்தபிறகு 'அமைதி' கதைத் தலைவன் 'மண்ணாங்கட்டி'யையும் இந்த ஊமையனையும் நினைவு படுத்திக் கொள்வேன்.

□

இளைஞர் இலக்கியப் பாடல்கள் முதலில் எங்களுக்காக எழுதப்பட்டன. தாத்தா இனிமையாகப் பாடல்களைப் பாடுவதுண்டு. ஆனால் எங்கள் அம்மாயிதான் 'என்னவென்று எடுத்துரைப்பேன்; இந்தக் கடைதனில் இருக்கும் பொருள் வரிசையை' என்று தாத்தாவின் இனிய பொருள் வரிசைப் பாடலை அடிக்கடி பாடிக் காட்டுவார்கள். பின்னர் தம்பி பாண்டியனின் குறும்புச் செயலைக் கண்டித்து அடிக்க மனம் வராத காரணத்தால் தான், இளைஞர் இலக்கியப் பாடல்கள் எழுந்தன.

புதிதாக வண்ணம் பூசப்பட்ட கதவிலும் அவன் பயங்கரமான 'ந'னாவை காக்கையைப்படமாக வரைந்தான். அதைப்பார்த்து விட்ட தாத்தா கடுஞ்சினத்துடன் அவனை அடிக்கக் கையை ஓங்கிய போது, தம்பி மழலை மொழியால் 'நான் தான் தாத்தா காக்கா படம் போட்டேன், நல்லா இருக்கா?' என்றான்.

குழந்தையை அடித்துத் திருத்த முடியாது என்று ணர்ந்த தாத்தா,

சுண்ணும்புக் கட்டியை நறுக்காதே!— நல்ல
சுவரிலும் கதவிலும் கிறுக்காதே!

என்பன போன்ற பாடல்களை 'நேர்பட ஒழுகு' என்ற தலைப்பில் அமைத்துப் பாடினுர். அத்தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களில்,

இன்னந் தூக்கமா—தம்பீ
இன்னந் தூக்கமா

என்ற பாடல் தாத்தாவால் அன்ருடம் துயிலெழுப்பப் பாடப்பட்டது. எட்டு மணிக்குப் பள்ளியில் இருக்க வேண்டியவர்கள் ஏழு மணிவரை படுக்கையில் இருந்தால் என்னவாகும்?

◘

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்துதாத்தா வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்பது அம்மா, அம்மாயி முதலானேர். விருத்தினர்க்கு உணவு படைக்கும்போது தடுக்கிட்டு இலைகளைக் கழுவி எடுத்துவருவது, தண்ணீர் வைப்பது, போன்ற வேலைகளை நானவிரும்பிஏற்பேன். தம்பி தானும் செய்வதாகத்தகராறு செய்வான். எனவே நாங்கள் இருவரும் விருந்தினர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம், அவ்வகையில் விருந்தினர் யாரோ வந்தபோது நானும் தம்பியும் செய்த சிறு தொண்டினை நினைத்துப் போற்றி 'துணைவர் இலக்கணம்' என்ற தலைப்பில் வந்த கதை போன்ற கவிதையில் விருந்தினர் கேட்டார்கள்:

'உங்கள் சிரிக்கும் சிறுவர் எங்கென்று கேட்க
வீட்டுக்கார ராகிய எங்கள் தாயும் தந்தையும்
வீட்டுப் பாடம் விரும்பி அங்கொருவீட்டுக் கேகினர்
என்றது கேட்டுக் கையலம்பத் திரும்பினர், கண்டனர்
இருகையில் தண்ணீர் ஏந்திநிற்கும்
தமிழ்ச்செல்வத்தைப் பாண்டியப் பையனை'',-

என்று எங்களைக் கவிதையில் பாராட்டியுள்ளார் என்னருமைப் பாட்டனர்.

அடுத்து என்னுடைய பிறந்தநாள் ஒன்றிற்காக 'பிறந்த நாள் இந்நாள்' என்ற தலைப்பில், கீழ் வரும்பாடலை எழுதினர்.

பிறந்தநாள் இந்நாள்—பேறெல்லாம்
பெற்றுநீ வாழ்க பன்னுள்
(பிறந்தநாள்......)

சிறந்தநாட்கள் ஆயின சென்றநாளெல்லாம்
செந்தமிழ்த் தொண்டுநாள் ஆகட்டும்
இனியெல்லாம்—நீ
(பிறந்தநாள்......)

பட்டிலோர் பாவாடை
கட்டிக் கொண்டாயா?—நன்று
பால்நுரை போற்சட்டை
இட்டுக் கொண்டாயா? நன்று
ஒட்டுமாம் பழமிதோ ஆப்பிள் ஆரஞ்சி
பிட்டுமாப் பண்ணியம் உண்ணுவாய்
செஞ்சி—நீ (பிறந்தநாள்......)

அனைவரும் இங்கே உனைஒன்றே ஒன்று
பாடென்றுர் இலையா? ஆமாம்
கனிஒன்று தோலுரித்துச் சுளையோடு
கன்னல் கலந்ததாய்ப் பாடம்மாபாடு! நீ
(பிறந்தநாள்......)

பெரியபெண்ணுைல்ஆடவாசொல்வார் உஃஉஃ
அரியதமிழ்பாடி ஆடவேண்டாமா? ஆமாம்
திருவோங்கு செந்தமிழ்ப் பாண்டியன் பாட்டுச்
செப்பிய வண்ணமே ஆடிக்காட்டு நீ.
(பிறந்தநாள்......)

பிறிதொரு முறை நான் படித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய குரலை இனிமையான நம் தமிழோடு ஒப்பிட்டு 15-4-62இல் குயில் ஏட்டில் ஒருபாடல் எழுதி வெளியிட்டார்.

அண்டை வீட்டின் அறையிலிருந்து
பழுத்துக் காய்ந்த பனைஓலைமேல்
கூடல்வாய்த் தண்ணீர் கொட்டும் ஓசை
வந்தது, சென்று பார்த்தேன்
இந்திப் பாடம் நடத்தினர் ஈச்வரே,

அறைக்குள் யாழிசை ஏதென்று சென்றே
எட்டிப் பார்த்தேன், பேத்தி
நெட்டுருப் பண்ணினுள் நீதிநூல் திரட்டையே.

□

என் சின்னத் தம்பி சேரன் பிறந்த பிறகு முத்தியால் பேட்டையில் இருக்கும் என் தாத்தாவின் மற்றொரு வீட்டில் நாங்கள் குடியமர்த்தப் பட்டோம். தாத்தாவும் அம்மாயியும் சேர்ந்து செய்த ஏற்பாடுஇது. அங்கு கொஞ்சநாள் வரை மின்சார வசதியில்லாமல்இருந்தது. அதனால் தாத்தா மிகவும் பாதிக்கப்பட்டார். எப் போதும் அவருக்கு மின் விசிறி ஓடிக் கொண்டிருக்க வேண்டும். சென்னையிலிருந்து அவர் வரும் போதெல் லாம் எங்களிருவரையும் பனைமட்டைவிசிறியால் விசிறச் சொல்வார். என்னை அன்பாக 'சின்னக் குட்டி' என்றே அழைப்பார். தம்பியை 'மொட்டைப்பையா' என்று அழைப்பார்.

விசிறியை எடுத்து 10போடு என்பார். 10போடு என்றால் 10தடவை விசிறு என்று அர்த்தம், நாங்கள் 1,2,3,4,5 என்று விசிறும் போது எண்ணிக்கையை மறந்துவிட்டு10 தடவைக்குமேல் 100 தடவை விசிறி விட்டுப் 'போதுமா தாத்தா?' என்று கேட்போம், தாத்தாவும் மனமிரங்கி 'போதும்மா' என்று கூறி அவிழ்த்து விட்டு விடுவார். இப்பணியில் தம்பி ஒத்துழைக்கமாட்டான். 'போ தாத்தா! எப்பப் பாத்தாலும் விசிறு விசிறு என்று சொல் லிக்கிட்டு' என்பான். நான் மட்டும் பொறுமையுடன் செய்து முடிப்பேன்.

இவ்வாறு சிறுவர்களுக்காகவும், தமிழுக்காகவும், பகுத் தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும், தமிழ் மண்ணில் தோன்றித் தமிழால் உயர்ந்து, தமிழை உயர்த்திய பாவேந்தர் அவர்களின் பேத்தியாகத்

தோன்றி, அவரின் தலையாய கொள்கைகளை முழு உணர்வோடு பின்பற்றி வாழ்ந்து கொண்டிருப்பதில் உவகை அடைகிறேன்.

□

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள். இரவு எட்டுமணி. சமையல் கூடத்திலிருந்து விதவித மான வாசனைகள் வந்து கொண்டிருக்கின்றன. வீட்டின் கூடம் நாற்காலிகளாலும் மேசைகளாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளது. மேசைகள் மீது இலைகள் போடப்பட்டு முக்கிய விருந்தினர்க்குப் பிடித்தமான வான்கோழி பிரி யாணி, கோழிக்கறி இவைகளெல்லாம் பரிமாறப்பட் டுள்ளன. பலா, வாழை போன்ற கனிகளும் இலையில் இடம் பெற்றிருக்கின்றன.

வந்திருந்த முக்கிய விருந்தினர், மற்றவர்கள் உட்பட எல்லாரும் சாப்பிட உட்காருகின்றனர். முக்கிய விருந் தினர் நடுவில் அமர்ந்திருக்க என் தாத்தா ஒருபக்கமும் நான் ஒருபக்கமும் அமர்ந்திருக்கின்ரேம்.

'என்னுடைய பேத்தி'--முக்கிய விருந்தினர்க்கு என்னை அறிமுகப் படுத்துகிருர் என் தாத்தா.

'உங்களுடைய மகனுடை மகளா?'

'இல்ல. என்னுடைய பொன்னு வசந்தாவோட மக.'' நான் வியப்போடு இதனைக் கேட்டுக் கொண்டிருக் கிறேன். என் பக்கத்தில் என்னுடைய பெரிய தம்பி அமர்ந்து கொண்டிருக்கிருன்,

'உங்க பாட்டு ஏதாவது பாடுமா?'--முக்கிய விருந்தினர் கேள்வி. 'நல்லாப் பாடும். பாடு?'--என் தாத்தாவின் பதில்.

உரத்த குரலில் பாடி முடிக்கிறேன் நான், எல்லாரும் சிரித்துக் கொண்டே கைதட்டுகின்றனர், விருந்துக்குப் பொருத்தமான பாடலை நான் பாடியதைக் கேட்டு, எல் லாரையும் வியக்கவைத்த அந்தப்பாடல்:

பலவித வாழைப் பழமொடு கொய்யா
பலா  விளா பேரிச்சை மாம்பழம்
சில வகைக் கிச்சிலி, பொம்பிலி மாசுடன்
சீத்தா பழமும், ஆத்தா பழமும்
குலை குலையாகக் கொடிமுந்திரியும்

இன்னும் பல வித கனிகளுடனே
என்ன வென்றே எடுத்துரைப்பேன்
நான் இந்தக் கடைதனிலே
இருக்கும் பொருள் வரிசை
என்ன வென்றே எடுத்துரைப்பேன்.

முக்கிய விருந்தினர் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சிரித்துவிட்டு என்னைத் தட்டிக் கொடுக்கிறார். ஆம். அன்றைய முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டவர் காமராஜர் தான். அவரோடு பக்கத்தில் அமர்ந்து உண்ணும் பேறு என் தாத்தாவால் எனக்குக் கிடைத்தது.

□

மற்றொரு முறை......

கவர்னர் மாளிகை...

விருந்து...

ஆம். எங்கே விருந்தென்றாலும் என்னையும் அழைத்துச் செல்லத் தவற மாட்டார் என் தாத்தா. பலவிதமான உணவு வகைகள் தட்டில் பரிமாறப்பட்டுள்ளன; பழங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் அவரவர்க்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்கிறோம். என்னிடம் ஓர் ஆப்பிளை எடுத்துத் தருகிறார் தாத்தா. நான் அதைப் பத்திரமாகக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதை மறுபடியும் போகும் போது அங்கேயே வைத்து விட்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டு பயத்தோடு தின்னாமல் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

'தின்னு'—தாத்தாவின் குரல்.

'திரும்பவைத்து விட்டுத்தானே போகணும்? நான்

தின்னலாமா?' என்று சந்தேகத்துடன் கேட்கிறேன்.

'அடே. தின்னுமா'—சிரிக்கின்ருர் தாத்தா.

இன்னும் எனக்குப் பயம் நீங்கவில்லை... பயத்தோடு பாதியைத் தின்றுவிட்டு, மீதியைத் தம்பிக்குப் பத்திரப் படுத்திக் கொள்கிறேன்.

கவர்னரிடம் அன்று எனக்கு அறிமுகம்.

■

1964-ஏப்பரல் 21......

ராஜா உயர்நிலைப்பள்ளி......

தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன...

நானும், என்னுடைய தம்பியும் எழுதிக் கொண்டிருக் கின்ருேம்.

தலைமையாசிரியர் எங்களை நோக்கி வருகிருர்.

'தமிழ்ச் செல்வம்... தாத்தாவுக்கு உடம்பு சரியில்லை யாமே!... பேப்பர்ல வந்திருக்கு... நீ தம்பியைக் கூட்டிக் கிட்டு வீட்டுக்குப்போ...'

தேர்வைத் தொடர்ந்து எழுத முடியாத ஏமாற்றம். தாத்தாவின் உடல்நிலை குறித்துத் திகைப்பு. வீட்டிற்குத் திரும்புகிருேம்.

தாத்தா இறந்த செய்தி காதில் நெருப்புத் துண்டமாய் விழுகிறது.

மாலையில் தாத்தாவின் உடல் 'வேனில்' வருகிறது.

கலைஞர், கண்ணதாசன், டி.கே. சண்முகம் போன்ருேர் கள் மலர் வளையம் வைக்கின்ருர்கள்.


பிறகு யார் யாரோ வருகிருர்கள். போகிருர்கள்!
உடல் முழுக்க மாலையால் மூடப்பட்டுள்ளது.

நான் அழுது கொண்டே இருக்கின்றேன்.
பலர் என்னைச் சூழ்ந்து கொண்டு—

'யார் இனி உனக்கு வேண்டியதை
வாங்கித் தருவார்?' என்று கூறி அழுகின்றனர்.

பின்னர் என்னுடைய தாத்தாவின் உடல்
இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் புதைக்கப்
படுகிறது.
ஆம்...
என்னுடைய ஆசைகளும் தான்.

■



மத்தளப் பலாப் பழங்கள்
கிளையில் தூங்கும்
பண்ருட்டியில் பிறந்த,
இவர் இயற் பெயர் பக்கிரிசாமி;
இயலிசை நாடகப் பெயர் வசந்த குமார்.

சுய மரியாதைக் கொள்கையில்
ஊறிவளர்ந்தவர்:
பாவேந்தரிடம்-
செல்லக் குழந்தையாகப்
பழகி வளர்ந்தவர்.
நாடக, திரைப்பட நடிகர்.

பாவேந்தரின்-
களைத்துப் போன
கடைசிச் சென்னை வாழ்க்கையில்
கலகலப்பூட்டிய
இளைய நண்பர்களுள் ஒருவர்.

இன்று-
தந்தையாய்,
தாத்தாவாய்,
அஞ்சல் துறை அதிகாரியாய்
வாழ்ந்து கொண்டிருப்பவர்;
இனிய நண்பர்.
இவருடைய கட்டுரை-
பாவேந்தர் வரலாற்று மாளிகையில்
சுவையான பலகணிகளைத்
திறந்து காட்டுகிறது.

# பாவேந்தர்—
# நான் கண்டதும் கேட்டதும்

திரு. வசந்தகுமார்

தனித்தமிழ் ஆர்வமும் தன்மான இயக்கப்பற்றும் பள்ளிப் பருவத்திலேயே என்னிடம் படிந்த பண்புகள். என் கெழுதகை நண்பர் முகுந்த ராமானுசம் பண்ருட்டியில் தி.க. வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர். அவருடைய தந்தை திருவாளர் கேசவநாயுடு பெரிய வைணவ பக்தர். என்றாலும் திராவிட இயக்கத் தலைவர்

களும், பாவேந்தர் பாரதிதாசனும் பண்ருட்டி வந்தால் அவர் வீட்டில் தான் தங்குவர். நண்பர் முகுந்தன் என் போன்ற இளைஞர்களுக்கு வழி காட்டி; பாவேந்தருக்குச் செல்லப்பிள்ளை. நண்பர் முகுந்தனுக்கு வரும் திராவிட நாடு, குயில் ஆகிய இயக்க ஏடுகளைப் படித்து, இயக்கப் பற்றையும். பாவேந்தர் பற்றையும் வளர்த்துக் கொண்டேன்.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் வெற்றிபெற்ற எனக்கு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலை கிடைத்தது. எழுத்தராகப் பணியேற்றதும், கொஞ்ச நாட்களில் இரயில்வே அஞ்சல் துறையில் அஞ்சல் பிரிப்பவராக (Sorter)த் தேர்ந்தெடுக்கப்பட்டேன். உடனே எழுத்தர் வேலையை விட்டுவிட்டு அஞ்சல் துறைக்கு மாறினேன். முதன் முதலாகத் திருச்சிராப் பள்ளி தென்னூரில் பணி ஏற்றேன்.

1950-ஆம் ஆண்டில் நண்பர் முகுந்தனோடு பாவேந்தரைக் காணப் புதுச்சேரி சென்றிருந்தேன். என்னிடம் நலம் விசாரித்தார். பாவேந்தர். என் குடும்பச் சூழ்நிலை, என்தொழில், கவிதை ஆர்வம் ஆகியவைபற்றிஅவரிடம் எடுத்துச் சொன்னேன் இளமையும், அழகும், திரைப் படத்துக்கேற்ற முகவெட்டும் பெற்றிருந்த என்னைக் கூர்ந்து கவனித்தார் பாவேந்தர்.

'உங்களோடு தங்கிக் கவிதை எழுதக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்' என்று என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

'கவிதை எழுத எப்போது வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம்; முதலில் நான் சொல்வதைச்செய்; புலவர் ஏ. கே. வேலனுக்குக் கடிதம் கொடுக்கிறேன். சென்று பார்! உனக்கு நல்ல முகவெட்டும் குரல் வளமும் இருக்கின்றன. வாய்ப்புக் கிடைத்தால் எதிர்காலத்தில் நீ பெரிய நடிகன் ஆகலாம்' என்று சொன்னார்; புலவர் ஏ.கே. வேலனுக்குப் பரிந்துரைக் கடிதம் ஒன்றும் தந்தார். இக்கடிதம் கொண்டு வருபவர் நம்பிள்ளை. அழகும் ஆற்றலும் மிக்கவர். முன்னுக்குக்கொண்டுவர வேண்டியது உன் பொறுப்பு' என்று கடிதத்தில் எழுதியிருந்தார்.

தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற வெற்றிப்படத்தை எடுத்து, மிக வசதியாக ஏ.கே. வேலன் இருந்த நேரம். சென்னை இல்லத்தில் நான் அவரைப் பார்க்கச் சென்ற போது தொலை பேசி மணி ஓயாமல் அடித்துக் கொண்டிருந்தது. ஆடு நாற்காலியில் (Rocking chair) அமர்ந்த வண்ணம் அவர் பேசிக் கொண்டிருந்தார். ஆடம்பரமான 'சினிமாத்தனம்' அவரைச் சூழ்ந்திருந்தது.

பாவேந்தர் கடிதத்தை அவரிடம் பணிவாக நான் கொடுத்தேன், அதைப் பிரித்துப் பார்த்து விட்டு. 'நடிப்பில் முன் அனுபவம் உனக்கு உண்டா?' என்று என்னிடம் கேட்டார்.

நான் 'இல்லை' என்றேன். அப்படியென்றால் ஏதாவது ஒரு நாடகக் குழுவில் சேர்ந்துநடி. எவனாவது பார்ப்பா: கூப்பிடுவான். சிவாஜி, எஸ்.எஸ். ஆர் எல்லாம் அப்படித்தான் வளர்ந்தாங்க. போ! என்று முகத்திலடித்தாற்போல் பேசினார். என்னை அவர் ஒருமையில் அழைத்த முறையும், பதில் சொன்ன முறையும், என்னையோ அல்லது பாவேந்தரையோ அவர் மதித்துப் பேசியதாகத் தெரியவில்லை. நான் ஏமாற்றத்தோடு ஊர் திரும்பினேன். பாவேந்தரை மறு முறை சந்தித்தபோதுகூட, திரு.ஏ.கே வேலன் என்ன சொன்னார் என்பதை அவரிடம் சொல்லவில்லை. வீணாக அதைச் சொல்லிப் பாவேந்தர் உள்ளத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை.

6

பிறகு எதிர்பாராமல் புதுவையில் ஒருமுறையும், தியாகராயநகர் உயர்நிலைப்பள்ளி இலக்கிய விழாவில் ஒரு முறையும் பாவேந்தரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போதெல்லாம் என் நலத்தை அக்கறையோடு விசாரிப்பார்; தம்மை இல்லத்தில் வந்து பார்க்கும்படி கூறுவார். நான் அப்போது சென்னை—ஈரோடு ரயிலில் அஞ்சல் பிரிப்பாளராக இருந்தேன். வாரத்தில் மூன்று நாள் பகலில் ஓய்வு. பாவேந்தர் அப்போது போயஸ் ரோடு கமலா கோட்னிஸ் வீட்டில் குடும்பத்தோடுகுடியிருந்தார். நான் அடிக்கடி வீட்டுக்குச் சென்று பாவேந்தரைப்பார்த்துப் பேசிவிட்டுத்திரும்புவேன்.

பாண்டியன் பரிசைத் திரைப் படம்ஆக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கியபிறகு, தி.நகர் இராமன் தெருவில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்து அதில் குடிபுகுந் தார் பாவேந்தர். 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற விளம் பரப் பலகை பங்களா முகப்பை அணி செய்தது, காரும், சோபாவும், எடுபிடி ஆட்களும், விருந்தும், வேடிக்கை யுமாக இராமன் தெரு வாழ்க்கை அப்போது அவருக்கு அமைந்திருந்தது. கவியரசருக்கேற்ற கம்பீர வாழ்க்கை அது.

பாவேந்தர் இராமன் தெருவில் குடியிருந்த போது எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. பிரெஞ்சு ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 'ஓபான் ரங்கசாமி' யின் இல்லத்தில் பெண்ணெடுக்க நாங்கள் முடிவு செய்திருந்தோம். திருமணத்துக்கு நாளும் குறிக் கப்பட்டது. திருமணம் பண்ருட்டியில் நடைபெற இருந்தது.

நான் பாவேந்தர் தலைமையில் திருமணம் செய்து கொள்ள விரும்பினேன். என் கருத்தை உணர்ந்த பாவேந்தர், ''என் பிள்ளைக்கு நான்தான் திருமணம் செய்வேன். நான் கட்டாயம் திருமணத்துக்கு வந்து நடத்திக் கொடுப்பேன். கவலைப்படாமல் போ!'' என்று கூறி என்னை அனுப்பி வைத்தார் பாவேந்தர்.

திருச்சி கபேயில் அவர் தங்குவதற்கு முதல் நாளே ஓர் அறை ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் நாள் இரவே பாவேந்தர் பண்ருட்டி வந்து விட்டார்.

என் பெற்றோர் தமது கையால் வாழ்த்தி எடுத்துத் தந்த மங்கல நாணை மணப்பெண்ணின் கழுத்தில் சூட்டி னேன். உடனே அங்கிருந்த பெரியோர்கள் பாவேந்தர் காலில் விழுந்து வணங்கும்படி எங்களைப் பணித்தார் கள். பாவேந்தர் உடனே எழுந்து, ''முதலில் உன்னு டைய பெற்றோரை வணங்கு. அதன் பிறகு யார் காலில் வேண்டுமானாலும் விழு'' என்று என்னைப் பார்த்துச் சொன்னார்.

சென்னையில் நானும் என் மனைவியும் தனிக்குடித்தனம் நடத்திய பொழுது பாவேந்தர் இரண்டு மூன்று முறை

என் இல்லத்துக்கு வருகை தந்தார், அவருக்கு நாங்கள் விருந்து படைத்த போது சில உணவு முறைப் பக்குவங்களை என் மனைவிக்கு எடுத்துச் சொல்லுவார். வடுமாங்காய் ஊறுகாய் எப்படிப் போடுவது, மற்ற ஊறுகாய் எப்படிப் போடுவது என்று சொல்லுவார். பண்ருட்டி நிலக்கடலைப் பருப்பு பவளம் போல் இருக்கிறது என்று பாராட்டுவார்.

□

ஒரு முறை கோவையில் புலவர் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது பாவேந்தர் என்னையும் உடன் அழைத்துச் சென்றார். மற்ற புலவர்கள் தங்குவதற்கு வெளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாவேந்தருக்கும், டாக்டர் மு.வ. அவர்களுக்கும் கோவைப் பேரறிஞர் ஜி.டி. நாயுடுவின் இல்லத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் பாவேந்தரோடு தங்கியிருந்தேன். திருவாளர் நாயுடுவும் எங்களோடு சாப்பிட்டார்.

சாப்பிட்டு முடிந்ததும் முக்கோணவடிவில் வெட்டப்பட்ட பப்பாளிப் பழத் துண்டில் ஒரு சிறு கரண்டியைச் செருகித் தந்தார்கள். ஐஸ் கிரீம் சாப்பிடுவது போல் பழத்தின் ஊனை நாங்கள் கரண்டியால் சுரண்டி எடுத்துச் சுவைத்தோம். 'இதில் இரும்புச்சத்து உள்ளது; உடலுக்கு மிகவும் நல்லது' என்று நாயுடு கூறினார். மூன்று நாள் பாவேந்தரோடு கோவையில் தங்கியிருந்தேன். இது எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு என்று எண்ணி நான் இன்னும் மகிழ்வதுண்டு.

கோவையில் தங்கியிருந்த போது ஒரு மகளிர் பள்ளியில் சொற்பொழிவாற்றப் பாவேந்தர் அழைக்கப்பட்டார். பாவேந்தர் தமது பேச்சைத்துவக்கும் போது 'புதிய வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மலர்த்தோட்டத்துக்குள் நுழைந்தது போன்ற உணர்வு எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள்.

□

பாவேந்தர் இல்லத்துக்கு அவரைப் பார்க்கப் பலரும் வருவர். கலைஞர்கள், கவிஞர்கள். அரசியல் வாதிகள்

எழுத்தாளர்கள் எனப்பலர். ஒரு நாள் தஞ்சைராமையா தாஸ் (திரைப்படக்கவிஞர்) பாவேந்தரைத்தேடிவந்தார். நான் கூடத்தில் அமர்ந்திருந்தேன். 'ஐயா இருக்காரா? என்று கேட்டார். அப்போது பாவேந்தர் உள்ளே வந்தார். நின்று கொண்டிருந்த இராமையாதாஸைப் பார்த்து 'உட்கார்! எப்படி இருக்கே?' என்றார் பாவேந்தர்.

'நீங்க போட்ட பிச்சை! ஏதோ நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று பதிலிறுத்தார் இராமையா தாஸ். தாம் கொண்டுவந்திருந்த 'திருக்குறள் இசைப்பாடல்' என்ற நூலைப் பாவேந்தர் கையில் கொடுத்தார்.

'என்ன, போட்ட நூல் வித்துடிச்சா?' என்று கேட்டார் பாவேந்தர்.

'இல்லைங்க. தரமான நூலை யார் வாங்கறு? உங்க நூல்கள் எல்லாம் எல்லா நல்லா விற்பனையாகுதுங்களா?' என்று கேட்டார் தாஸ்.

'ஏதோ ஓடுது' என்று கூறினார் பாவேந்தர். பின்னர் பழைய திரைப்பட வாழ்க்கை பற்றியும் நண்பர்களைப் பற்றியும் உளம் திறந்து சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

☐

ஒரு நாள் பாவேந்தர் வீட்டுப் போர்டிகோவில் ஒருவர் சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்தேன். மெலிந்த உடல்; சவரம் செய்யாத முகம்; அழுக்கடைந்த ஆடை! நான் உள்ளே சென்று 'யார் போர்டிகோவில் படுத்திருப்பவர்?' என்று பாவேந்தரின் துணைவியாரைக் கேட்டேன்.

'அவந்தா கம்பதாசன். மெரிலாண்டு ஸ்டுடியோ முதலாளி சுப்ரமணியம், பாட்டெழுதினதுக்கு இன்றைக்கு ஐநூறு ரூபா கொடுத்தார். எங்கிட்ட நானூறு ரூபாயைக் கொடுத்துட்டு நூறு ரூபாயை வாங்கிக்கிட்டுப் போனவ, நல்லா குடிச்சிட்டு வந்துபடுத்திருக்கரு. குடிச்

சிட்டு வெளியில திரிஞ்சா போலீஸ்கார புடுச்சிக்குட்டுப் போயிடுவான்ல... குடிச்சிட்டா நேரா இங்க வந்து தா படுத்துக்குவா... ஏன்னு... இங்க போலீஸ்கார வரமாட்டான்... பாதுகாப்பான இடம்.' என்று அம்மையார் குறிப்பிட்டார்கள். திரையுலகக் கவியரசனைக் கொடிகட்டிப் பறந்த கம்பதாசனின் நிலையை எண்ணி நான் மிகவும் வருந்தினேன். பாவேந்தரின் இல்லத்தில், பிறகு இரண்டோர் முறை கவிஞர் கம்பதாசனைப் பார்த்திருக்கிறேன். திடீரென்று வருவார்; உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போடுவார். பின்னர் மீனவர் சேரி, அயோத்தியாகுப்பம் என்று சுற்றப் போய் விடுவார்;

ஒரு நாள் தமிழ்ச் செல்வி என்ற நாட்டியக்காரச் சிறுமி பாவேந்தரைக் காண வந்தாள். இரண்டொரு நாளில் அவளுடைய நாட்டிய அரங்கேற்றம் நிகழவிருந்தது. பாவேந்தரை வணங்கி அவருடைய வாழ்த்தினைப் பெறுவதோடு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் விரும்பி வந்திருந்தாள். அப்போது பாவேந்தரின் நண்பர்கள் சிலர் அங்கிருந்தனர். தமிழ்ச் செல்வியின் பெற்றோரும் உடன் வந்திருந்தனர். பாவேந்தர் கொஞ்ச நேரம் வைத்த கண் வாங்காமல் அந்தப் பெண்ணையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பாவேந்தர் ஏன் இந்தப் பெண்ணை இப்படிப் பார்க்கிறார்!......

பாவேந்தரின் செயல் எங்களுக்கு என்னவோ போல் இருந்தது. அந்தப் பெண்ணும் நாணி நின்றாள்.

அப்போது பாவேந்தர் திரைப்படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரம். பாவேந்தர் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உனக்கு மடிசார் கட்டத் தெரியுமா?'' என்று கேட்டார். 'தெரியாது' என்று பதிலிறுத்தாள் அந்தப்பெண்.

'மேக்கப்மேன்! இந்தப் பெண்ணை உள்ளே அழைச்சிக்கிட்டுப் போய் அம்மாகிட்டே சுங்குடிப் புடவை இருக்கும். வாங்கி, மடிசார் கட்டிக்கிட்டுவா' என்று பக்கத்தில் நின்று கொண்டிருந்தவரிடம் சொன்னார். சிறிது நேரத்தில் மடிசார் கோலத்தில் அந்தப் பெண் பாவேந்தர்

எதிரில் வந்து நின்றாள். மீண்டும் பாவேந்தர் அந்தப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

'என்ன ஐயா! நீண்ட நேரம் இப்படியே இந்தப் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் படத்தில் இந்தப் பெண்ணுக்கு வாய்ப்புக் கொடுக்கப் போகிறீர்களா?' என்று நான் மெதுவாகக் கேட்டேன்.

ஏதோ கனவிலிருந்து விடுபட்டவர் போல எங்களைப் பார்த்து விட்டு. 'பாரதியார் மனைவி செல்லம்மாள், வயசில இந்தப்பெண் மாதிரி தான் இருப்பாங்க' என்று சொன்னார் பாவேந்தர். உடனே அங்கிருந்த அத்தனை கண்களும் ஆர்வத்தோடு அந்தப் பெண்ணையே உற்றுப் பார்க்கத் தொடங்கின. அந்தப்பெண் மேலும் நாணினாள்.

❑

பாவேந்தர் பிற்பகல் மூன்று மணிக்குமேல் தேநீர் அருந்திவிட்டு மான் தோல் விரித்த சோஃபாவில் வந்து அமர்வது வழக்கம். மாலையில் இலக்கிய அன்பர்கள் சிலர் அவரைத்தேடி வருவார்கள். அரசியல், இலக்கியம் —இரண்டும் அவர் பேச்சில் மிகுதியாக அடிபடும். தமிழ் இலக்கியத்தில் அவரே சில ஐயங்களைக் கிளப்பி விளக்கமும் சொல்வார்; மற்றவர் எழுப்பும் ஐயங்களுக்கும் விளக்கம் தருவார். ஒருநாள்...

> மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பார்க்குத்
> தேங்காய்ப்பால் ஏதுக்கடி?—


என்றசித்தர் பாட்டு வரிகளை எடுத்து வைத்துக் கொண்டு விளக்கம் சொன்னார். ''மாங்காய்ப்பால்சாப்பிட்டு விட்டு நீண்ட நாள் உயிரோடு இருக்க முடியுமா? இதில் ஒரு தத்துவம் இருக்கிறது. ஞானி உட்கார்ந்தால் பலமாதம் சாப்பிட மாட்டான். எப்படி? அவன் உடலிலிருந்தே அவனுக்கு உணவு கிடைக்கிறது. மூளையிலிருந்து சுரக்கும் ஒருவகை நீர் அவனை வாழவைக்கிறது' என்றார் பாவேந்தர்.

❑

ஒருநாள் பாவேந்தருக்குக் கடன்கொடுத்திருந்த ஒருவர் அவரை வந்து பார்த்துப் பேசிவிட்டுச் சென்றார். பாவேந்தர் தலையணையில் சாய்ந்த வண்ணம் சிந்தனையோடு படுத்திருந்தார். நான் மெதுாக அவர் அறைக்குள் சென்று எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். பாவேந்தர் என்னைப் பார்த்து, "வாழ்க்கைன்னு இருந்தா கொடுத்து வாங்கல் இருக்கணும். இல்லேன்னா வாழ்க்கை சப்புன்னு இருக்கும். வள்ளுவர்கூட 'இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மா ஞாலம் மரப்பாவை சென்றுவந்தற்று' ன்னு சொல்றார்" என்று சொல்லி விட்டு அவரே சிரித்துக்கொண்டார். அவர் உள்ளத்தின் ஓட்டத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னாலும் நானும் சிரிப்பது போல் பாசாங்கு செய்தேன்.

ஒருநாள் அவரைத் தேடி வந்த நண்பர் ஒருவர் 'இன்பத்துள் சிறந்த இன்பம் எது?' என்று பாவேந்தரைக் கேட்டார்.

'தான் விரும்பும் பெண், வலியவந்து அணைக்கும் சுகம்' என்றார் பாவேந்தர். அப்போது பாவேந்தருக்கு வயது எழுபத்தொன்று.



அச்சுக் கோப்பவராக
வாழ்க்கையைத் தொடங்கி
அரசியல் தலைவராக உயர்ந்தவர்
சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

அச்சுக் கோத்துக் கொண்டே
அரிய எண்ணங்களைக் கோத்துச்
சிறந்த எழுத்தாளராக
மலர்ந்தவர் விந்தன்.

தம்முடைய அச்சகத்தில்
அச்சுக் கோப்பவராக இருந்த
இளைஞர் சுந்தரேசனை
இனிய கவிஞராக மாற்றியவர்
பாவேந்தர் பாரதிதாசன்.

பழனியம்மா அச்சகத்தில்
பணிபுரிந்த காலத்தில்
தம் உள்ளத்தில் கோத்த நினைவுகளை
இக் கட்டுரையில்
நிரல் படுத்திக் காட்டியிருக்கிறார்
திருவாளர் ஆ. சுந்தரேசன்.

# சுதும்பு மீன்!

திரு. ஆ. சுந்தரேசன்

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய எண்ண அலைகள் எத்தனையோ என் உள்ளத்தில் மோதிக்கொண்டிருந்தாலும், அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.

பாவேந்தர் புதுவையில் 'பழநியம்மா அச்சகம்' என்ற பெயரில் ஓர் அச்சகத்தை நிறுவி நடத்தி வந்தார்.

அந்த அச்சகத்தில் யான் ஐந்தாறு ஆண்டுகள் அச்சுக் கோப்பவராகப் பணி புரிந்து வந்தேன். கவிஞர் அப்போது 'குயில்' என்னும் பாட்டிதழ் ஒன்றைப் புதுவையிலிருந்து வெளியிட்டுவந்தார். அவ்விதழில் உள்ளூர் வெளியூர்க் கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் சிறப்பிடம் தந்து கவிதைகள் வெளியிட்டார். அச்சுக் கோப்பவராக இருந்த எனக்கும், நாள்தோறும் கவிதைகளை அச்சுக் கோத்த காரணத்தால், கவிதையுணர்வு பற்றிக் கொண்டது. கவிதை எழுத வேண்டும் என்ற ஆவல் என்னை நாள் தோறும் உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது.

ஒருநாள் 'கூடினார் பிரிவரோ இனி!' என்று தொடங்கும் காதற்கவிதை ஒன்றை எழுதிப் பாவேந்தர் பார்வைக்குப் பணிவுடன் வைத்தேன். 'நன்றாக இருக்கிறதே! மேலும் மேலும் தொடர்ந்து எழுது ! விட்டு விடாதே' என்று ஊக்கம் கொடுத்துப் பாராட்டினார். குயில் ஏட்டில் வெளியிடுவதற்கு அப்பாடல் தகுதியானது என்பதைக் குறிக்கப்'பா' என்று எழுதி ஒப்புதல் அளித்து, மாப்பிள்ளை தண்டபாணியிடம் கொடுத்தார். என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'யானும் ஒரு கவிஞன்!' என்ற உணர்வு பெற்றேன். அவர் ஊட்டிய இலக்கியப் பற்றும். கவிதை ஆர்வமும் இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக உள்ளன.

□

பாவேந்தர் நாள்தோறும் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கம் உடையவர். அதிகாலை வேளையில் மிகுந்த சுறு சுறுப்போடும் தூய்மையோடும் காட்சியளிப்பார். காலையில் எழுந்ததும் வீட்டின் முன்பக்கம் உள்ள பலகையில் வந்து அமர்ந்திருப்பார். ஒருநாள் காலைச் சிற்றுண்டியைமுடித்துக் கொண்டு பலகையில் அமர்ந்திருந்த போது, அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்த ஒருவரை நோக்கி, 'ஏம்பா மார்க்கெட்டுக்கா போற?' என்று கேட்டார்.

அவரும் 'ஆமாங்க ஐயா' என்று பதிலிறுத்தார்.

'மீன் கடையிலே இந்த சுதும்பு மீன் விக்குதான்னு

பாத்து வா' என்றார்.

'சரிங்க ஐயா' என்று கூறிச் சென்றார் வந்தவர்.

நீண்ட நேரம் கழித்து அவர் திரும்பி வந்து, 'சுதும்பு மீன் இல்லீங்க ஐயா, வேறு மீன்விக்குதுங்க' என்றார் அவர்,

'ஓகோ... சரி. நீ போ' என்று சலிப்புடன் கூறினார் பாவேந்தர். பாவேந்தர் எதை விரும்புகிறாரோ அஃது உடனே நிறைவேற வேண்டும். இல்லாவிட்டால் மிகுந்த சலிப்படைவார். அந்தச்சலிப்பு' ஓகோ...சரி. நீபோ' என்ற அவர் சொற்களில் நிரம்பி வழிந்தது.

கவிஞர் அவர்கள் அடிக்கடி கூட்டங்களுக்காக வெளியூர் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது யாரேனும் ஒருவரை உடன் அழைத்துச் செல்லுவார். உடன் வருபவர்களிடம் தமக்குத் தேவையானவற்றை வாங்கி வரும்படி பணிப்பார். தம்முடன் வருபவரின் கல்வித்தகுதி, செல்வநிலை ஆகியவற்றைப் பற்றிக் கவனிக்கமாட்டார். செல்லும் இடத்தில் தமக்குக் கிடைக்கும் மரியாதை தம்முடன் வந்தவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் அவர் கண்ணுங்கருத்து மாகஇருப்பார்.

அவரோடு ஒருமுறை ஒரு திருமணத்துக்குச் சென்றிருந் தேன். திருமணவீட்டில் உள்ளவர்களிடம் என்னைப் பற்றிப் பெருமையாகக் கூறி அறிமுகப் படுத்தினார். 'இதோ...இவரு என்னோட வந்தவரு...படிச்சவரு... பெரிய இடத்துப் பிள்ளை...எல்லாம் அவருதான்' என்று திருமண வீட்டாரிடம் கூறியது என் உள்ளத்தை உருகச் செய்தது. கவிஞருக்குக் கிடைத்த 'ராஜமரியாதை' எனக்கும் கிடைத்தது. கவிஞரின் பரந்த உள்ளத்தை எண்ணி எண்ணி நான் பெருமிதமடைந்தேன்.

புதுவையில் ஒரு பெரிய கோவில் உள்ளது. அந்தக்

கோவிலின் முன் மண்டபத்தில் திருக்குறள் மெல்லிசை நிகழ்ச்சியொன்றை ஓர் அடிகளார் ஒரு நாள் நடத்தினார். பாவேந்தர் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியிருந்தார். ஓரிரண்டு திருக்குறள் பாக்களை அப்போது வெளிவந்திருந்த புதிய திரைப்பட மெட்டில் பாடிக் காண்பித்தார் அடிகளார். இசைக்கும் மெட்டுக்கும் முதலிடம் தந்து பாடியதால் குறட்பாக்களின் கருத்துத் தெளிவு சிதைவுற்றது. தலைமை தாங்கியிருந்த கவிஞருக்குச் சினம் பொங்கியது.

''இந்தாப்பா! நிறுத்து! நீ என்ன நினைச்சுக்கிட்டு இருக்கற... உட்கார்!' என்று கோபத்துடன் சொல்லி விட்டுத் தாம் எழுந்து பேசத் தொடங்கினார்.

''எந்த ஒரு பாட்டையும் பொருள் விளங்கப் பாடவேண்டும்; புரியும்படி பாடவேண்டும். அதேபோலப் பாட்டுக்களும் பொருளோடும், சிறந்த கருத்துக்களோடும் அமைந்திருக்க வேண்டும். திரைப்படத்தில் இப்போது வருபவை பாட்டுக்களா? லொள், லொள், லொள்... இப்படியொரு பாட்டு; என்ன என்ன என்ன... இப்படியொரு பாட்டு; இதனால் தமிழ் எப்படி வளரும்? வாழும்? மக்களுக்குத் தமிழ் அறிவு எப்படிப் பெருகும்? சிந்திக்க வேண்டாமா?'' —என்று ஒரு போடு போட்டார். அடிகளார் உடனே புறப்பட்டு விட்டார்.

□



பாவேந்தருடைய தொடர்பு
எனக்கு 1961 ஆம் ஆண்டு
ஏற்பட்டது. கடந்த 23 ஆண்டுகளாகப்
பாவேந்தர் பற்றிய செய்திகளை
நான் திரட்டிக் கொண்டிருக்கிறேன்.
அப்பணி மேன் மேலும் தொடர்ந்து
கொண்டிருக்கிறது.

நான் சந்தித்தவர்களுள் கவிஞர்கள்,
கலைஞர்கள், அரசியல் வாதிகள்
தமிழறிஞர்கள், நடிகர்கள்,
குடும்பத்தார், குடும்பநண்பர்கள்,
மாணவுர்கள்...என்று
பட்டியல் நீள்கிறது.

சிலர் கட்டுரையாகத்
தொகுக்கும் அளவுக்கு
நிறையச் செய்திகள்
கூறுகிறார்கள்.
சிலர் ஏதேனும் ஓர் அரிய
செய்தியை மட்டும் கூறி
நிறுத்தி விடுகிறார்கள்.
இவ்வாறு அங்கும் இங்குமாகக்
கிடைத்த செய்திச் சுடர்களை
இக்கட்டுரையில்
தொகுத்துக் கொடுத்திருக்கிறேன்.

---

# பாவேந்தர் பாதையில்... சில சுவடுகள்.

---

கவிஞர் முருகுசுந்தரம்

1963 ஆம் ஆண்டு. சென்னை செயிண்ட் மேரீஸ் ஹாலில் இலக்கிய விழா நடை பெற்றுக் கொண்டிருந்தது. ஓர் அவசர அலுவல் காரணமாகச் சென்னை சென்றிருந்த நான், விளம்பரத்தட்டியை வெளியில் பார்த்தவுடன் உள்ளே நுழைந்து விட்டேன். பாவேந்தர் மேடையில் அமர்ந்திருந்தார். கவிஞர் சௌந்தரம் கைலாசம் பேசிக் கொண்டிருந்தார்.

பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் 'மயில்' என்னும் தலைப்பில் உள்ள பாடல் குறிப்பிடத்தக்கது. அஃதோர் அங்கதப்பாடல் (Satire). எப்போதுமே பெண்கள் அண்டை அயலார் விவகாரங்களை அறிந்து கொள்வதிலும், அவற்றைப் பலர் கூடி விமர்சிப்பதிலும் ஆர்வமுடையவர்கள். இக்குறையைப் பாவேந்தர் இப் பாடலில் மிகவும் நயம்படக் கேலி செய்திருக்கிறார். 'இயற்கை அன்னை கலாப மயிலுக்கு நீண்ட கழுத்தை யும், பெண்களுக்குக் குட்டைக் கழுத்தையும் கொடுத் திருக்கிறாள். ஏன்?' என்று ஒரு வினாவை எழுப்பி அவரே அதற்கு விடையும் கூறுகிறார்.

> அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
> எட்டிப் பார்க்கா திருப்பதற்கே
> இயற்கை அன்னை, இப்பெண்கட் கெல்லாம்
> குட்டைக் கழுத்தைக்கொடுத்தாள்! உனக்கோ,
> கறையொன்றில்லாக் கலாப மயிலே,
> நிமிர்ந்து நிற்க நீள் கழுத்தளித்தாள்!

திருமதி சௌந்தரம் கைலாசம் இப்பாடலை நயமாகப் பாடிவிளக்கி விட்டுக்" கவிஞர் இப்பாடலைத் துணிந்து பாடியிருந்தாலும், இக் குற்றச் சாட்டைப் பெண்கள் கேட்டால் எங்கு கோபித்துக் கொள்வார்களோ?' என்ற அச்சமும் அவருக்கு இல்லாமல் இல்லை. அதனால் தான் மயிலை மெதுவாக அருகில் அழைத்து

> இங்குவா உன்னிடம் இன்னதைச்சொன்னேன்
> மனதிற் போட்டுவை; மகளிர் கூட்டம்
> என்னை ஏசும் என்பதற் காக.

என்று கூறுகிறார், இந்த வரிகளில் உள்ள ஓர் இனிய நயத்தை நீங்கள் உணர வேண்டும். கவிஞர் இந்தக் கருத்தைக் கூறியதுயாரிடம்? பெண்மயிலிடமா?இல்லை. கலாப மயிலிடம். பெண் மயிலிடம் இக்கருத்தைச் சொல்லிஇருந்தால்நிச்சயம் அது கோபங்கொண்டு 'எங் கள் இனததையா குறை கூறுகிறீர்?' என்று கூறிக் கவிஞரைக் கொத்தியிருக்கும்'' என்று கூறினார். கை தட்டலினால் செயிண்ட் மேரீஸ் ஹாலே அதிர்ந்தது. பாவேந்தர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

பாவேந்தர் பிறகு பேசும்போது 'இவ்வளவு நயம் இந்தப் பாடலில் இருக்கிறதென்று நான் இப்போது தான் அறிந்து கொண்டேன்' என்று உள்ளம் மகிழ்ந்து திருமதி சௌந்தரம் கைலாசத்தைப் பாராட்டினார். பின் தமது பேச்சில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், அறிஞர் அண்ணாவைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சில கருத்துக்களை வெளியிட்டார்.

அடுத்தநாள் காலை நான் தி.நகர் இராமன் தெருவில் இருந்த பாவேந்தர் இல்லத்துக்குச் சென்றேன். முதல் நாள் இலக்கிய விழாவில் அவர் வெளியிட்ட சில கருத்துக்களைப் பற்றி அவரிடம் உரையாடினேன். திரு.வி.க வின் கவிதையாற்றல் பற்றிப் பேச்சு எழுந்தது. அப் போது அவர் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

"திரு.வி.க. சிறந்த தமிழறிஞர். அவர் உரைநடையில் சாதித்ததை இன்னும் எந்தத்தமிழனும் சாதிக்கவில்லை. என்றாலும் அவர் கவிதையின் பக்கம் சென்றிருக்கக் கூடாது.

அண்ணாவைப்பற்றி அவர் பாடிய பாடல் கவிதைத் துறையில் அவர் அடைந்த தோல்விக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

அண்ணாத் துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டின்
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில்
—பண்ணாவான்
சிற்பன் எழுத்தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றுடு.

இந்த வெண்பா அண்ணாவைப் பாராட்டித் திரு.வி.க. எழுதியது. 'வண்ணான்' என்ற உவமை, இடத்திற்கும், தகுதிக்கும் ஏற்பப் போடப்பட்ட நாகரிகமான உவமை யன்று. இந்த உவமையால் அண்ணாவுக்கும் பெருமை யில்லை; வண்ணானுக்கும் பெருமையில்லை. எதுகை சரியாக விழவேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு எந்தச்சொல்லை வேண்டுமானாலும் போடக் கூடாது. பொறுமையாகச் சிந்தித்து நல்ல உவமையாகப் போட வேண்டும். திரு. வி.க. கவிஞராக இருந்திருந்தால் இப் பாட்டின் அடிகளை அவர் இப்படி அமைத்துப் பாடியிருப்

யார்''என்று சொல்லி அவரே ஒரு வெண்பாவை உடனே சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எழுதி, அவரிடமே காட்டித் திருத்திக் கொண்ட பாடல் பின் வருமாறு:

எண்ணுத் துறைநாடி ஏந்துபுகழ் நட்ட
அண்ணுத் துரையண்ணல் ஆய்ந்து தமிழ் செழிக்கப்
பண்ணுத் துறையுண்டோ? பைந்தமிழர் ஏனிவனைக்
கண்ணுகக் கொள்ளார் கனிந்து?

மேலும் அவர் தொடர்ந்து'' *வகையுளியை எவன் சரி வர உணர்ந்து யாப்பில் கையாளுகின்றனோ, அவனே கவிதையில் வெற்றி பெறுவான். ஒவ்வொரு சீரும் சொற்கள் உடைபடாமல் கருத்து முற்றி நிற்கும்படி வண்ணம் அறுக்க வேண்டும். அத்தகைய கவிதை தான் படிப்பவர் நெஞ்சில் நிற்கும். இராமலிங்க அடிகள் இதில் வல்லவர்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகைகிடைத்த குளிர் தருவே!

களிப்பருளுங் களிப்பே!
நலங் கொடுக்கும் நலமே!

பாட்டு என்றால் இப்படி இருக்கவேண்டும்'' என்று சொன்னார்.

பிறகு கொஞ்சநேரம் ஏதோ சிந்தித்து விட்டு, ''நீ ஒட்டக்கூத்தன் பாட்டு படிச்சிருக்கறயா?'' என்று கேட்டார்.

''தனிப்பாடல் திரட்டில் சில பாடல்கள் படித்திருக் கிறேன்'' என்று நான் சொன்னேன்.
''நான் சுப்பிரமணியர் துதியமுது எழுதிய காலத்திலே ஒட்டக்கூத்தன் பாட்டைச் சந்தத்துக்காக விரும்பிப் படிப்பதுண்டு.........இதைக்கேளு..'' என்று சொல்லிக்

* வகையுளி—முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழியறிந்து, குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல்.

—யாப்பருங்கலக் காரிகை.

கீழ்க் கண்ட பாட்டைப் பாடினர்.

''ஒட்டெழுத் தைக்கருத் திற்குறித்
    திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத்
    தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத்
    தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத்
    தீனுங் குறுங்குடியே'

இதை எவ படிப்பான்? இல்ல... மனசுலதா நிக்குமா?'' என்று கூறி முடித்தார் பாவேந்தர்.

□

சேலம் ஸ்வர்ணம்பிகா பஸ் உரிமையாளரான ராவ் சாகிப் ரத்தனசாமிபிள்ளை நீதிக்கட்சியில் குறிப்பிடத் தக்கவர். பெரியாரின் நண்பர், சேலம் மாவட்ட அரசியலில் முக்கியப்பங்கு வகித்தவர். மாவட்டக்கழக உறுப்பினராகவும், சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். சேலம் நகராட்சிக் கழகத் தலைவராக இருந்து சேலத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர். இவர் காலத்தில் சேலம் நகராட்சிக்கல்லூரி சிறந்த முன்னேற்றம் பெற்றது. இவர் நகரவைத் தலைவராக இருந்த காலத்தில் கல்லூரி முதல்வராகத் திருவாளர் இராமசாமிக்கவுண்டரும், பேராசிரியர்களாகத் தேவநேயப்பாவாணர், தி.வை. சொக்கப்பா ஆகியோர்களும் பணி புரிந்தனர். இவர்கள் தமிழ்ப் புலமையும், தன்மான இயக்க உணர்வும் கொண்டவர்கள்.

'பி. ஆர். பி' என்று சேலம் மக்களால் மதிப்போடு அழைக்கப் பட்டு வந்த திரு.பி. இரத்தன சாமிபிள்ளை 5 ¾ அடி உயரமும், அதற்கேற்ற கம்பீரமான தோற்றமும் கொண்டவர்; மிகவும் செல்வாக்கோடு வாழ்ந்தவர். அவருக்கு உரிமையானபெரிய தோட்டமும், அதன் நடுவில் ரத்ன படப்பிடிப்பு நிலையமும் (Rathna Studio) சேலத்துக்கு மேற்கே மூன்றுகல் தொலைவில் 'மாமாங்கம்' என்ற இடத்தில் உள்ளன. மிகவும் இயற்கையழகு

மிக்க சூழலில் அவர் வளமனை அமைந்திருந்தது. சுயமரியாதைக் கட்சித்தலைவர்களும், தமிழறிஞர்களும் அவரைப்பார்க்க அவ்விடத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பாவேந்தர், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். பட்டுக்கோட்டை அழகிரிசாமி பி.ஆர்.பிக்குமிகவும் வேண்டியவர். சேலம் வரும் போதெல்லாம் அழகிரிசாமிக்கு இவர் தாராளமாகப் பொருளுதவி செய்து வந்தார்.

நான் ஒரு முறை பி.ஆர்.பியை, என் தம்பி முருகரத்தனத்தின் அலுவல்தொடர்பாகக் காண்பதற்கு மாமாங்கம் சென்றிருந்தேன். அப்போது பாவேந்தரைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது அவர் சொன்னார்:

''பாரதிதாசன் சேலம் வந்தா வீட்டுக்கு வருவார். பயில்வான் மாதிரி இருப்பார். ஏதாவது கேட்டா ஆ...ங்... என்று குரல் கொடுத்து விட்டு நம்மைப் பார்ப்பார். அவர்கிட்டப் பேச நானே பயப்படுவ. என் மகளுக்குத் திருமணம். பெரியார் முதல் பல அரசியல் தலைவர்களும் வந்திருந்தாங்க. பாவேந்தரும் வந்து வாழ்த்துரை வழங்கினார். திருமணம் முடிஞ்சு ஊருக்கு அவர் புறப்பட்டப்ப ஒரு நூறுரூபா நோட்டைக் கவர்லே போட்டுக் கொடுத்தேன். 'என்ன ரத்தனசாமி! நான் உங்க குடும்பத்தில் ஒருவன் இல்லையா? நம்ம வீட்டுத் திருமணம்!' என்று சொல்லி வாங்க மறுத்து விட்டார்'' —என்று குறிப்பிட்டார்.

□

பெரியார் மாவட்டம் கோபிசெட்டி பாளையத்தில் என் நண்பர் வெங்கிடு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் அண்ணபிறந்தநாள் விழாவைச்சிறப்பாகக் கொண்டாடுவார். இரண்டுநாட்கள் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமண்டபம் என்று கோபியே அமர்க்களப்படும். அப்போது வழக்கமாகக் கூடும் நண்பர்களுள் இப்போது அரசவைக் கவிஞராக இருக்கும்புலவர்,புலமைப்பித்தன், புலவர் பொன்னி வளவன், கவிஞர் குடியரசு, ஈரோடு நகைச்சுவை அரசு ஆறுமுகனார், புலவர் எழில்வேலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். புலவர் புலமைப்

பித்தனுக்குக் கோபி மாமியார் வீடு: எங்கள் தேவைகளை அவர்தாம் கவனித்துக் கொள்வார். விளையாட்டுப்பேச்சும், வேடிக்கையுமாக இரண்டுநாட்களும் போவது தெரியாது.

வழக்கமாகக் கோபி விழாவின் போது அங்கிருக்கும் பொதுப்பணித்துறைப்பயணியர் விடுதி நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அப்போது பெரியவர் கோபி ராஜு அங்கு நாள்தோறும் குதிரை வண்டியில் வருவார். பொதுப்பணித்துறை விடுதியில் தங்கி நாள்தோறும் தம்மைத் தேடிவரும் கட்சிக்காரர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பார். அப்போது அவர் தி.மு.க மேல் சபை உறுப்பினர் (எம். எல்.சி).

கோபி ராஜுக்கு அப்போது வயது எழுபதுக்குப் பக்கமாக இருக்கும். கருத்ததோற்றம். தடித்தஉருவம், கண் பார்வை சற்று மந்தமாக இருக்கும். பட்டுக்கோட்டை அழகிரி சாமி, பூவாளூர் பொன்னம்பலனுர் போன்ற பழைய சுயமரியாதை இயக்கத் தலைவர்களின் வரிசையைச் சேர்ந்தவர். அந்த வயதிலும் மேடையேறினுல் அஞ்சாமையோடு மேடையே அதிரும்படி பேசுவார். கல்லெறிக்கு அஞ்சாமல், கத்துவாளை எடுத்து மேடை மீது போட்டுவிட்டுச்சுயமரியாதைக் கூட்டங்களில் பேசிப் பழக்கப்பட்டவர். சுயமரியாதை இயக்கத்தோடு ஒன்றி வளர்ந்தவர். விடுதிக்கு வரும்போதெல்லாம் சுயமரியாதை இயக்கத்தின் பழைய செய்திகளை எங்களுக்கு எடுத்துரைப்பார், நாங்கள் ஆர்வத்தோடு கேட்போம்.

ஒருநாள் 'பாவேந்தரோடுநீங்கள் பழகிஇருக்கின்றீரா?' என்றுநான் அவரைக் கேட்டேன்.

''நன்ருகப் பழகியிருக்கிறேன். இந்தப்பக்கம் கூட்டங்களுக்கு வரும்போது நான் அவரைச்சந்தித்துப் பேசியதுண்டு. புதுச்சேரிப்பக்கம் கூட்டத்துக்குச் சென்ருல் நானும் அவரை வீட்டில் சென்று பார்ப்பதுண்டு. பாரதிதாசனிடத்தில் உள்ள முக்கிய குணம் அஞ்சாமைதான். அவர் நின்றுகொண்டிருந்தாலும். உட்கார்ந்துகொண்டிருந்தாலும் நிமிர்ந்த நிலையில்தான் காட்சியளிப்பார்.

''ஒருமுறை நான்புதுச்சேரியில் அவர் வீட்டில் சாப்பிட்டு

விட்டு அவரோடு கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். அப்போது அவர்மகன் கோபதி கல்லூரிக்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான். நாங்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததால் கையில் புத்தகக் கட்டோடு, அடக்கமாகக் குனிந்த தலையோடு அவன் சென்று கொண்டிருந்தான். பாரதிதாசன் 'டேய்! கோபதி! இங்கவா!' என்று அவனைக்கூப்பிட்டார். அவனும் வந்தான் 'தலையைக்குனியாதே! நிமிர்ந்து நட!' என்று கட்டளையிட்டார். அப்போது நிமிர்ந்த கோபதியின் தலை மறுபடி குனிந்ததில்லை!' என்றுசொன்னார் கோபி ராஜு:

❑

திருச்செங்கோடு மாவட்டக் கழக உயர் நிலைப்பள்ளியில் 1944—45 இல் நான் மாணவன். திருவாளர் சேஷகிரி ராவ் பி.ஏ.எல்.டி பள்ளித்தலைமையாசிரியர். திராவிடர்க் கழகம் அப்போது வளர்ந்து கொண்டிருந்த நேரம். திராவிடநாட்டையும், குடியரசு வார இதழையும் டெஸ்க்குக்குள் மறைத்துப்படித்துக் கொண்டிருப்போம். அப்போது நானும் என் நண்பர்கள் சிலரும் துணிந்து கருப்புச் சட்டை போட்டுக் கொண்டுபோவோம். அவர்களுள் நெய்க்கார பட்டி நடேசனும், சண்முக சுந்தரமும் (திருவள்ளுவர் டெக்ஸ்டைல்ஸ், ஈரோடு) குறிப்பிடத் தக்கவர்கள்.

ஓய்வு நேரத்தில் எங்களுக்குப் பாசறையாக விளங்கியது திருவாளர் N.K.P.வேலு அவர்களின் வீடு. அவர்‡ சாய மருந்துக் கடை வைத்திருந்தார். அண்ணா முதல் தி.க. தலைவர்கள் எல்லாரும் அங்கு தான் வந்துதங்குவார்கள்; திருவேலு இறுதிக்காலத்தில் மிகவும் நொடித்துப்போய் வறுமை வாய்ப்பட்டு இறந்தார். பாரதிதாசன் திருச்செங்கோடு வந்தபோது வேலுவின் வீட்டில் தான் தங்கியிருந்தார். அப்போது பாவேந்தரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

ஒரு முறை பாரதிதாசனைப் பற்றி நான் வேலுவைக் கேட்டபோது அவர் கூறிய செய்திகள்.

‡ செல்வம் டர்க்கிரெட் ஆயில் கம்பெனி: 'செல்வம்' பழைய ஜஸ்டிஸ் கட்சி வீரர். திரு. பன்னீர்ச்செல்வத்தைக்குறிப்பிடும்

''பாவேந்தர் பாரதிதாஸனைப் பலமுறை சந்தித்துப்பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவரிடம் அரசியல், இலக்கியம் பற்றி உரையாடியிருக்கிறேன். திராவிடர்க்கழக ஆண்டு விழாவுக்குப்பாவேந்தர் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது இரண்டு மூன்று நாட்கள் என் வீட்டில் தங்கினார். அந்த ஆண்டு விழாவுக்கு நோட்டீசு' அவரால் தான் எழுதப்பட்டது. அந்த ஆண்டு விழா திருச்செங்கோடு சூரசம்ஹாரமடத்தில் நடைபெற்றது. பாரதிதாசன் எழுதித் திருமதி குஞ்சிதம் குருசாமியால் பதிப்பிக்கப் பெற்ற'பாரதிதாசன் கவிதைகள் முதல்தொகுதி' அந்த ஆண்டுவிழாவில் வெளியிடப் பட்டது.

பாரதிதாசனுக்குத் திருச்செங்கோடு வட்டத்தில் நிதி திரட்டும் பொறுப்பு என்னிடம் தான் ஒப்படைக்கப் பட்டது. கரூர்க்கட்டிபாளையத்தில் நடைபெற்ற அவருடைய மூத்த மகள் திருமணத்துக்குச் சென்றிருந்தேன். அவர் சேலத்தில் 'இன்ப இரவு' நாடகம் நடத்தியதும், பெரியார் திருமணத்தின்போது அவர் அறிக்கை விட்டதும் எனக்கு நன்கு நினைவிருக்கின்றன. அவரோடு பழகிய நாட்களில், என்உள்ளத்தில் பசுமையாக நிற்கும்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதை என்னால் என்றும் மறக்க முடியாது.

ஒரு முறை ஈரோடு ரயில் நிலையத்தில் நானும், பாவேந்தரும் நாமக்கல் செல்லப்ப ரெட்டியாரும் நின்று கொண்டிருந்தோம். பாவேந்தருடைய சட்டைப்பையில் இருந்த ரூ 150/= ஐ எவனோ பிக் பாக்கெட் அடித்து விட்டான். பாவேந்தர் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தார். கூப்பிட்டால் பேசவில்லை. பிறகு உணர்வு திரும்பிய அவர், எங்களைப்பார்த்து, ''நான் மிகவும் எச்சரிக்கையோடும் சுய உணர்வோடும் தான் இருந்தேன். எப்படி என்னிடம் அவன் களவு செய்தானென்று புரியவில்லை. எப்படிப் பட்ட கலைஞன் அவன்?'' என்று வியப்போடுகூறினார். நான் அப்போது பாரதிதாசன் என்ற மனிதனைக் காணவில்லை; ஒரு கவிஞனைக் கண்டேன். செல்லப்பரெட்டியார் எங்கள் மூவருக்கும் டிக்கட் எடுத்தார்.

❑

ஒரு முறை பெரம்பலூரில் கவியரங்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிவிட்டுப் பேருந்தில் சேலம் திரும்பிக் கொண்டிருந்தேன். இளங்காலைப்பொழுது. என்அருகில் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். பேச்சுவாக்கில் அவர் ஒரு தமிழ்ப் புலவர் என்று அறிந்து கொண்டேன். பின்னர் அவரோடு பேச்சுக் கொடுத்ததில், மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் புலவர் துரைச்சாமி ஐயா அவர் என்புதை அறிந்து கொண்டேன். எங்கள் இருவரின் பேச்சு பாரதிதாசன் பக்கம் திரும் பியது. அவர் பாவேந்தர் பற்றிய பின் கண்ட செய்தி களைக் கூறினார்:

''பாரதிதாசனை எனக்கு இளமையிலிருந்தே தெரியும். இளமையில் அவர் சிறந்தமுருகபக்தர். மயிலம்முருகன் கோவிலுக்கு வருவார். மயிலம்கோவில் முருகன் ஆண்டு தோறும் மாசி மகவிழாவின் போது புதுவைக்கு எழுந்த ருளுவதுவழக்கம். வழயில் வானூர்க்கோவிலில் முருகன் தங்கிச்செல்வது வழக்கம். நானும் உடன் சென்றிருந் தேன். வானூர்க் கோவிலுக்கு வெளியில் பாரதிதாசன் நின்று கொண்டிருந்தார். நான் அழைத்ததும் உள்ளே வந்தார். அக்கோவில் ஐயர் பூசையை முடித்துத் தீபா ராதனை செய்யும் போது வெளியிலே சென்று விட்டார். நான் 'ஏன்?' என்று அவரைக்கேட்டேன்.

''கோவில் உமது தானே? நீரே பூசை செய்தால் என்ன? (அங்கு பூசை செய்த ஐயரைக் காண்பித்து) அவன் கை யில் திருநீறு வாங்க என் மனம் ஒப்பவில்லை'' என்று பதிலிறுத்தார் பாரதிதாசன்.

ஒருமுறை பெகங்ளூரில் திருக்குறள் மாநாடு நடைபெற் றது. டாக்டர் இலக்குவனார், புலவர்குழந்தை, டாக்டர் இராசமாணிக்கனார், பாரதிதாசன் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர். பரிமேலழகர் உரையில் உள்ள குறைகள் பற்றி நான் பேசினேன். 'பரிமேலழகர் உரை யை முதலில் மறுத்தவர் சிவப்பிரகாசர்தாம்' என்பதை நான் என் பேச்சில் எடுத்து விளக்கினேன். இலக்கு வனாரும், இராசமாணிக்கனாரும் என்னுடையகருத்தைத் தமது உரையில் பாராட்டிப் பேசினர். பாரதிதாசன் தமதுபேச்சில் சைவமடங்களைச் சாடினார். இலக்குவனாரும் இராசமாணிக்கனாரும் அதைக்கேட்டு வருந்தியதோடு,

பாவேந்தரிடம் மடங்களைத் தூக்கிப் பேசவேண்டா மென்று கேட்டுக்கொண்டனர்.

பாரதிதாசன் பழகுவதற்கு ஏற்ற நல்ல நண்பர். நானும் அவரும் சந்திக்கும் போது நகைச்சுவையோடு பேசி மகிழ்வோம். ஒருமுறை அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர்கள் எல்லாம் கூடியிருந்தோம். பாவேந்தர் புலால் உணவை விரும்பிச்சாப்பிடுவார். நான் இரவில் பாலும் பழமும் மட்டும் சாம்பிடும் பழக்கம் உடையவன். கூடத்தில் எல்லாருக்கும் விருந்துபரிமாறப்பட்டிருந்தது. என்னை ஒருவர் வந்து சாப்பிட அழைத்தார். அருகில் இருந்த பாரதிதாசன் 'இரவில் இவர் பழம்பால்தான் சாப்பிடுவார்; எங்காவது கிடைத்தால் பாருங்கள்' என்று சிலேடை நயம் பொருந்தக் கூறினர். புலவர் கூட்டம் கொல்லென்று சிரித்தது.

☐

ஒருமுறை நான் சென்னை சென்றிருந்தபோது ஆழ்வார் பேட்டையில் குடியிருந்த ஓவியர் வேணுகோபால சர்மாவைப் பார்க்கச் சென்றேன். அவர்பாரதிதாசனின் மிக நெருங்கிய நீண்டநாள் நண்பர். பாவேந்தரின் இன்ப இரவு நாடகக் குழுவில் பணியாற்றியவர். திருவள்ளுவர் படம் எழுதி அதற்காக ஜனாதிபதிபரிசு பெற்றவர். அவர் சொன்ன செய்தி:

''பாவேந்தர் ஆத்திகராக இருந்து நாத்திகராக மாறியவர்.என்ருலும் கலையழகோடு கூடிய பக்திப்பாடல்களை மெய்மறந்து சுவைக்கும் இயல்புடையவர். பாவேந்தர் நடத்திய இன்பஇரவு நாடகக் குழுவிலிருந்து விலகியதும் நானே சில நண்பர்களின் உதவியோடு 'வேலின் வெற்றி'என்ற திரைப்படத்தைஎடுக்கமுயற்சிசெய்தேன். ஆனல் அப்படம் வெளிவரவில்லை.

அப் படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிப்பதற்காக மதுரை மாரியப்ப சுவாமிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். பக்திப் பாடல்களைக் கேட்பவர் உள்ளம் உருகும்படி பாட வல்லவர் அவர். அப்படத்துக்குத் திரைக்கதை வசனம்ு பாடல்களைப் பாவேந்தர் எழுதினல் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதினேன். ஆனல் பக்திப்படத்துக்கு எழுத ஒத்துக் கொள்வாரா என்ற

ஐயம் எனக்கு ஏற்பட்டது, ஒரு நாள் அவர் சென்னை வந்திருந்தபோது ஆயிரம் ரூபாயை நோட்டாகவும், வெள்ளி நாணயங்களாகவும் மாற்றி ஒரு தட்டில் வைத்து அவர் தங்கியிருந்த விடுதி அறைக்குச் சென்று அவர் முன்னால் வைத்து வணங்கினேன்.

'என்ன சர்மா இது?' என்றார் பாவேந்தர் 'நான் முதன் முதலாக ஒரு திரைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறேன். அது ஒரு புராணப்படம். நீங்கள் மறுக்காமல் அதற்குத் திரைக்கதை வசனம் பாடல்கள் எழுதித் தரவேண்டும். இது அதற்கு 'முன் பணம்' என்று பணிவோடு சொன்னேன். அவர் மறுப்பு ஏதும் சொல்லாமல் 'அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி! உனக்கு எழுதாம வேற யாருக்கு எழுதப்போறேன்!' என்று சொல்லி ஒப்புக் கொண்டார். அதன்படி பாடல்களும் எழுதிக் கொடுத்தார்.

அப்பாடல்களை 'ரெகார்டிங்' செய்வதற்காக நாங்கள் ஸ்டுடியோவில் கூடியிருந்தோம். அப்போது பாவேந்தரும் வந்திருந்தார். மதுரை மாரியப்பசுவாமிகள் அப்பாடல்களை உருக்கமாகப் பாடியதைக் கேட்டு உள்ளம் உருகிய பாவேந்தர் 'அடேயப்பா! இவர் பாடும்போது அந்த முருகனே கையில் வேலோடு கண் எதிரில வந்து நிக்கற மாதிரியல்ல இருக்குது' என்று பாராட்டிக் கூறினார்.''

□

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் பாவேந்தர் திரைப் படங்களுக்கு எழுதிக்கொண்டிருந்த காலத்தில் அவரோடு பழகிய நண்பர்கள் பலதரப்பட்டவர்கள். அரசியல் வாதிகள், புலவர்கள், வணிகர்கள், முதியவர்கள். இளைஞர்கள் என்று பட்டியல் நீளும். சேலம் அரிசிப் பாளையத்தில் வாழ்ந்த ராஜகோபால் என்ற இளைஞர் பாவேந்தரிடம் அளவு கடந்த அன்பும்ஈடுபாடும் கொண்டிருந்தார். நான் அந்த இளைஞரை 1965 ஆம் ஆண்டு வாக்கில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

கவிஞர்கள் எப்போதும் உணர்ச்சிவயப்படுபவர்கள். அந்தந்த நேரங்களில் தங்களுக்கு ஏற்படும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப அவர்கள் பேச்சும் செயலும் அமைந்

திருக்கும்; பின் விளைவுகளைப்பற்றியும் சிந்திக்க மாட்டார்கள். உணர்ச்சி வயப்பட்ட அவர்கள் நடவடிக்கையால் அவரோடு தொடர்பு கொண்டவர்களும் பல சங்கடங்களுக்கு ஆட்பட நேரிடும். தம்வாழ்வில்ஏற்பட்ட இத்தகைய சங்கடம் ஒன்றை, அந்த இளைஞர் குறிப்பிட்டார்:

''பாவேந்தர் சேலத்தில் இருந்தபோது அவரை அடிக்கடி நான் காணச் செல்வதுண்டு. செர்ரி ரோட்டிலுள்ள 'மாடர்ன் கேஃபில்' அறையெடுத்துத் தங்கியிருப்பார். சிலசமயங்களில் சீரங்க பாளையத்தில் உள்ள மாடர்ன் தியேட்டர்ஸ் 'ரிஹர்சல் ஹால்' கட்டிடத்தில் தங்கியிருப்பார். அவர் மீது எனக்குஅளவுகடந்தபற்று உண்டு. அவரைப் போய்ப்பார்ப்பதும், பேசுவதும்எனக்கு இனிய பொழுது போக்காக இருந்தது.

அப்போது என் சொந்த உபயோகத்துக்கு ஓர் அழகான குதிரை வண்டி வைத்திருந்தேன். குதிரையும் நல்ல ஜாதிக்குதிரை. அந்த நாளில் குதிரைவண்டி வைத்திருப்பது ஒருவகை நாகரிகம். பாவேந்தர் நான் செல்லும் போதெல்லாம் குதிரையை மிகவும் விருப்பத்தோடு பார்ப்பார்; அன்போடு தடவிக் கொடுப்பார்.

ஒருநாள் அவர் என்னைப்பார்த்து 'ராஜகோபால் இந்தக் குதிரை எனக்கு வேண்டும். வண்டியை விற்றுவிடு. குதிரையின் விலையைக்கொடுத்துவிட்டு நான் வாங்கிக் கொள்கிறேன்' என்று சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'குதிரையை மட்டும் வாங்கி இவர் என்ன செய்வார்? நான் பல முறை சிந்தித்தேன். சரி பாவேந்தர் கேட்கிறார். நாம் எப்படி மறுத்துரைப்பது?'என்று நினைத்தேன்.

அவர் சொன்னபடி முதலில் வண்டியை விற்றுவிட்டேன். குதிரையைமட்டும் வீட்டில் கட்டித்தீனி போட்டுக் கொண்டிருந்தேன்.பாவேந்தரிடம் சென்று''வண்டியை விற்று விட்டேன் குதிரையை உங்களுக்குக் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டேன்.

'குதிரையா? எனக்கெதற்கு குதிரை?' என்று கூறி விட்டார்.

□

முருகுசுந்தரம் தொகுத்த
பாவேந்தர் வரிசை நூல்கள்:

பாவேந்தர் நினைவுகள்
அரும்புகள் மொட்டுகள் மலர்கள்
குயில் கூவிக் கொண்டிருக்கும்
புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்

■

ஈரோடு காமராசர் மேல்நிலைப் பள்ளியில் தலைமை யாசிரியராகப் பணியாற்றும் முருகுசுந்தரம் தமிழ் இலக்கிய மேடைதோறும் தம் கவிதைகளை மெல்லிய பூங்காற்றாய் வீச வைத்த புதுமைக்கவிஞர். பாவேந்தர் 'குயிலி'லும் சுரதாவின் கவிதை இதழ்களிலும் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்ட முருகு 'கடைதிறப்பு' என்னும் தொகுதி மூலம் கவிதையின் நல்லழகை எவரும் எளிதில் வசப்படும் வகையில் அறிமுகப்படுத்தியவர். 'பனித்துளிகள்'—தமிழக அரசின் பரிசு பெற்ற இவரது மற்றொரு தொகுதி. 'தீர்த்தக் கரையினிலே' அன்னம் மூலம் வெளிவந்த இவரது புதுக்கவிதைத் தொகுதி. பாவேந்தரின் பரம்பரையைச் சேர்ந்த இவர் பாவேந்தரைக் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளைப் 'பாவேந்தர்' நினைவுகளாக்கியுள்ளார். 'ஒரு கவிஞன் இறந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அவனைப் பற்றிய வரலாறுகள் எல்லாம் எழுத்தில் வந்துவிட வேண்டும். ஏனென்றால் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அக்கவிஞனோடு நெருங்கிப் பழகிய தலைமுறை மறைந்துவிடும். அதன் பிறகு எழுதப்படும் நூல்களுள் புனைந்துரை இடம் பெற்றுவிடும்' என்று கருதி பாவேந்தரோடு பழகிய அன்பர்களிடமிருந்து திரட்டிய செய்திகளை 'புதுவைக் கல்லறையில் புதியமலர்கள்' என்னும் நூலாக்கியுள்ளார். இது 'பாவேந்தர் நினைவுகள்' வரிசையில் வரும் நான்காவது நூல்.